Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 27 செவ்வாய்க்கிழமை (10.06.2014) பக்கங்கள் 20 ஓசை - 252

AXSHAYA CONSTRUCTION JAFFNA
கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடு களைத் திருத்துதல், குளியலறை கட்டுதல்
Plumbing, Electrical, Painting
அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புக்கு: 0776679564
(C/3690)

## திருக்கேதீஸ்வரம் பகுதியில் மனிதப் புதைகுழி இருக்கவில்லை

### மன்னார் பிரதேசசபை தெரிவிப்பு

மன்னார், திருக்கேதீஸ்வரம் பகுதியில் மனிதப் புதைகுழி காணப்படவில்லை என மன்னார் பிரதேசசபை தெரிவித்துள்ளது.

அத்துடன், முன்னர் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி ஆரம்பத்தில் ஒரு மயானமாக இருந்திருக்கக் கூடும் எனவும் நீதிமன்றத்தில் நேற்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்ற சந்தர்ப்பத்தில், தொல்பொருள் ஆய்வுத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதப் புதைகுழி தொடர்பில் கடந்தமுறை விசாரணையில் காணாமற்போனோர் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட இரண்டு கோரிக்கைகள் இம்முறை

(19) ஆம் பக்கம் பார்க்க...

## யாழ்.நகரில் விபத்து; முதியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் நிலைய வீதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலியானார்.


குருநகர் மத்தியைச் சேர்ந்த யாக்கப் விக்டர் இமானுவல் (வயது-70) என்பவரே பலியானவராவார்.

துவிச்சக்கர வண்டியில் பயணித்த அவரைத் தனியார் பேருந்து மோதியதினாலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்தில் சம்பந்தப்ப

(19) ஆம் பக்கம் பார்க்க...

## பரந்தனில் கோர விபத்து; கோப்பாய் இளைஞர்கள் பலி



(பரந்தன்)

கிளிநொச்சி, பரந்தன் சந்தியில் டிப்பர் ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

நேற்று மதியம் இடம்பெற்ற இந்த விபத்தில் யாழ். இராச வீதி, கோப்பாயைச் சேர்ந்த சிவானந்தராஜா ஜேம்ஸ் நெல்சன் (வயது-25), உதயராசா விதுஷன் (வயது-21) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த டிப்பர் ஒன்றிற்கு இடம்

(19) ஆம் பக்கம் பார்க்க...

# வடக்கு மாகாண சபை செயற்பாடு; தடைக்கு காரணமானவர்கள் யார்?



## கூட்டமைப்பை பகிரங்க விவாதத்திற்கு அழைக்கிறார் அமைச்சர் டக்ளஸ்

தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்துக்கான எங்களது பயணத்தின் போது பல்வேறு தியாகங்களை செய்து நாங்கள் பெற்றுக் கொண்ட பொன்னான வாய்ப்பான வடக்கு மாகாண சபை இன்று செயலிழந்து காணப்படுகின்றது. வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் தடையாக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்தும் கூறி வருகின்றனர். உண்மையில் இதற்கு அரசாங்கம் தடையாக இருப்பதாக கூற முடியாது இந் நிலையில் வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளுக்குத் தடையாக இருப்பவர்கள் யார் என்பது பற்றி பகிரங்கமாக விவாதிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மல்லாவிப் பகுதிக்கு நேற்றைய தினம் விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர், அங்கு கூடிய வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களுடனான சந்திப்பின் போது கருத்துத் தெரிவிக்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## ஐ.நா. விசாரணைக் குழுவை அனுமதிக்கவே முடியாது

### அரசாங்கம் தெரிவிப்பு

ஐ.நா. விசாரணைக்குழுவை இலங்கைக்குள் அனுமதிப்பதென்ற பேச்சுக்கே இடமில்லையென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சின் தொடர்புப் பிரிவின் பணிப்பாளர் எ.எம். ஜே.சாதிக் தெரிவித்துள்ளதாவது,

ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசு அப்போதே முற்றுமுழுதாக நிராகரித்து விட்டது.

அந்தவகையில் தீர்மானத்தின் விளைவாக முன்னெடுக்கப்படவுள்ள சர்வதேச விசாரணைப் பொறிமுறையையும் பக்கச்சார்புடையதும் முன்கூட்டியே முடிவு தீர்மானிக்கப்பட்டு விட்டதான இறுதி முடிவுகளை நாம் முற்றுமுழுதாக நிராகரிக்கின்றோம்.

இந்நிலையில் ஐ.நா. விசாரணைக் குழுவினரை நாட்டுக்குள் அனுமதிப்பதா, நுழைவு விசா வழங்குவதா, அவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு செல்வதற்கு ஆவனசெய்து கொடுப்பதா என்ற கேள்விகள் எழுவதற்கே இடமில்லை. ஏனென்றால் ஏற்கனவே நாம் அந்த நடவடிக்கையை பூரணமாக நிராகரித்துவிட்டோம்.

ஐ.நா. தீர்மானம் கடந்த மார்ச்சில் நிறைவேற்றப்பட்டவுடன் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அம்பாந்தோட்டையில் நடத்திய செய்தியாளர் மாநாட்டின் போது, ஜெனிவாத் தீர்மானத்தின்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## 82 இந்திய மீனவர்களையும் விடுவிக்க ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட வேளை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட 82 இந்திய மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 46 பேரும் நேற்றைய தினம் மன்னார் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட வேளை அவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், 15 வயதுச் சிறுவனை, சிறுவர் பராமரிப்பு பிரிவில் ஒப்படைக்குமாறும் மன்னார் நீதவான் கனகரட்ணம் உத்தரவிட்டார்.

அதேபோன்று நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 36 மீனவர்களை நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய வேளை,

(19) ஆம் பக்கம் பார்க்க...

உள்ளே
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்
குருப்பெயர்ச்சிப் பலன் எப்படி?

## வலம்புரி சங்கு விற்க முயற்சி; மூவர் பொலிஸாரால் கைது

வலம்புரிச் சங்கினை 50 இலட்சத்திற்கு விற்க முற்பட்ட நபர் அதனை வாங்க முயன்ற இருவரென மூவரை பொலிஸ் மற்றும் பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் இணைந்து கைது செய்துள்ளனர்.

யாழ். நவாலிப் பகுதியில் உள்ள நபர் மற்றும் காக்கைதீவு பகுதியைச் சேர்ந்த இருவர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விஷேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மானிப்பாய் பொலிஸார் மற்றும் விஷேட அதிரடிப் படையினர் இணைந்து நேற்று இவர்களைக் கைது செய்துள்ளனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க...

## விசாரணைக்குழு விபரம் இலங்கைக்கு அறிவிப்பு

இலங்கையில் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனிதஉரிமை மீறல்கள் குறித்து விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள, விசாரணைக்குழுவின் விபரங்களை, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கை அரசாங்கத்துக்கு முறைப்படி அறிவித்துள்ளார்.

விசாரணைக் குழுவின் விபரங்கள் அடங்கிய கடிதம் ஒன்று ஐ.நா. மனிதஉரிமை ஆணையாளர் பணியகத்தினால், கடந்த வாரம், ஜெனிவா வில் உள்ள இலங்கை வதிவிடப் பிரதிநிதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தின் 26 ஆவது அமர்வில் உரையாற்றவுள்ள நவநீதம்பிள்ளை, விசாரணைக்குழு பற்றிய விபரங்களை வெளியிடவுள்ளதுடன், விசாரணைக்குழுவிற்கு இலங்கை ஒத்துழைக்க வேண்டுமெனவும் கோரவுள்ளார்.

எனினும், இன்றைய மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தில் உரையாற்றவுள்ள

(19) ஆம் பக்கம் பார்க்க...

# தங்கச் சங்கிலி அபகரிப்பு விசாரணைகள் துரிதம்

தனிமையில் வசித்துவந்த வயோதிபப்பெண்ணைத் தாக்கிவிட்டு தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு சென்ற சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் விசேட பொலிஸ குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்த 28 ஆம் திகதி புதன் கிழமை பொலிகண்டி மேற்கு, எ.ஜி.எ ஒழுங்கையில் நடைபெற்றுக்கொண்டிருந்த மரணச்சடங்கை சாதகமாகப்பயன்படுத்தி 150 மீற்றர் தூரத்திலுள்ள வீடு ஒன்றில் தனிமையில் படுத்துறங்கிக்கொண்டிருந்த சோமசுந்தரம் ராஜேஸ்வரி (வயது - 87) என்ற வயோதிபப் பெண்ணின் வீட்டினுள்நுழைந்த இனந்தெரியாத நபர்கள் அவ்வயோதிபப் பெண்ணின் தலையில் பொல்லால் கடுமையாகத்தாக்கிவிட்டு கழுத்தில் அணிந்திருந்த 4 பவுண் பெறுமதியான தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு சென்றதாக வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும் இதுவரை எவரும் கைது செய்யப்பாடாத நிலையில் மக்கள் மத்தியில் சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளதுடன் அச்சமான சூழ்நிலையிலே காணப்படுவதாக அறிய முடிகின்றது.

# போக்குவரத்துக்கு ஒவ்வாத வீதி: மண்டைதீவு மக்கள் மனக்குமுறல்

மண்டைதீவு கிராமியசாலை வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் குன்டும் குழியுமாக போக்குவரத்திற்கு சிரமமாக இருந்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மண்டைதீவுப் பகுதியில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள நிலையில் அங்கு அழிவடைந்து போயிருந்த கிராமிய வைத்தியசாலை புனரமைக்கப்பட்டு பொது மக்களின் சேவைக்காக திறந்துவிடப்பட்டுள்ள நிலையில் அந்த வைத்தியசாலைக்குச் செல்லும் பொதுமக்கள் பாவிக்க முடியாத நிலையில் சேதமடைந்து காணப்படுகிறது.

இதனையடுத்து அப்பகுதி பொதுமக்கள் சேர்ந்து இந்த வீதியின் இருமருங்கிலும் வளர்ந்துள்ள பற்றைகள் மற்றும் சேதமடைந்த வீதியின் பகுதிகளில் சிரமதானம் மேற்கொண்ட நிலையிலேயே பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே நோயாளர்களைக் கொண்டு செல்வதற்கு இலகுவாக இந்த வீதியினைப் புனரமைத்துத்தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (பா)

# நன்நீர் நிலைகளின் அபிவிருத்தி; வியட்நாம் அரசு அனுசரணை

## விக்கியுடன் நேற்று விசேட சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கில் நன்நீர் நிலைகளை அபிவிருத்தி செய்வதற்கு வியட்நாம் அரசு அனுசரணையுடன் செயற்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இவ்விடம் தொடர்பாக வடக்கு முதலமைச்சருடன் இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் விசேட சந்திப்பு ஒன்றை நடத்தினார்.

நேற்றுக்காலை 11.30 மணியளவில் சோஷலியக் குடியரசாகி வியட்நாமின் தூதுவர் டோன் சின்தான்ங் முதலமைச்சர் வாசஸ்தலத்தில் தமது அலுவலர் புங்ரொங் தூவான் என்பருடன் வந்து அவரைச் சந்தித்தார்.

தம் நாட்டினால் வழிநடாத்தப்படும் நீர்வாழ் உயிர் சம்பந்தமான வியட்நாம் தொழில் நுட்ப உதவித்திட்டம் என்ன விதத்லி கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. என்பதை பார்வையிடத் தாங்கள் வந்ததாகக் கூறினார்கள்.

நாட்டின் பல பாகங்களிலும் பரிசீலனை செய்ததில் வடமாகாணமே நீர் வாழ் உயிரினங்களை வளர்த்தெடுக்குந் தொழிலுக்கு மிகவும் பொருத்தமான இடம் என்பது கண்டு இங்கு எம் மாகாணத்தில் தொழில் நுட்பப் பயிற்சிகளையும், பாடங்களையும் கொடுத்து வருவதாகக் கூறினார்.

பட்டம்பெற்ற இரு வாலிபர்களைத் தம் நாட்டுக்கழைத்து அங்கு தமது தொழிற்சாலைகளைப் பார்வையிடவும், பயிற்சி பெறவும் உதவியதாகக் கூறினார். அவர்கள் இங்கு வந்து தொடங்கியுள்ள வழிகாட்டல் ஆரம்பத்திட்டமானது ஏற்கனவே வெற்றி கண்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

வடக்கில் உள்ள வடமாகாண சபையின் அதிகாரத்தினுள் வருவதால் மேலும் மேலும் இப்பேர்ப்பட்ட நீர் வாழ் உயிரின இனப்பெருக்கத்திற்கான விஞ்ஞான ரீதியான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்தால் காலா காலத்தில் உள்ளூர் நீர் நிலைகளில் பெருகி வரும் உயிரினங்களை மீன்களை, கடலட்டைகளை, காணிப் பாசிகளை எல்லாம் நல்ல விலைக்கு சீனா, யப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்றுரைத்தார்.

பதினைந்து வருடங்களுக்கு முன்னர் போரினால் பாதிக்கப்பட்டு எதுவுமே இல்லாத ஒரு நிலையில் இருந்த வியட்நாம் இன்று பல இலட்சம் டொலரகளுக்கு மீன் ஏற்றுமதி செய்வதாகவும், தமது நாடு பொருளாதார ரீதியாக மேம்பட்டு வருவதாகவும் கூறினார்.

மேற்படி தொழில் நுட்ப பயிற்சி முறைகளில் வெற்றிக்கு வித்திடும் விதத்தில் தாம் தொடர்ந்து எமக்கு போதிய உதவிகளை வழங்கப் போவதாகவும் தெரிவித்தார்.

இதன் பின் ஆளுநரைச் சந்தித்தபின் மேற்படி வேலைத் திட்டம் நடைபெறும் பிரதேசங்களைப் பார்வையிடுவதாக களநிலைக்குச் சென்றார்கள் .(25)

# விசாகப்பொங்கல் வழிபாடுகள் பக்தி பூர்வமாக பொலிகண்டியில்

(பொலிகண்டி)

பொலிகண்டி அருள்மிகு மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் மற்றும் அருள்மிகு நறுவிலியடி கண்ணகியம்மன் ஆகிய இரு அம்மன் ஆலயங்களிலும் நேற்று வைகாசி விசாகப் பொங்கல் உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.



இதில் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் காலை 11 மணியளவில் பரிவார மூர்த்திகளுக்கான விசேட அபிசேக ஆராதனைகளைத்தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் ஆலய வெளிக்கிணற்றிலிருந்து பறை வாத்தியத்துடன் வழுந்து எடுத்துவரப்பட்டு பொங்கல் வைபவம் ஆரம்பமாகியது இதனையடுத்தே அடியார்களும் தம் பொங்கல் நேத்திகளை ஆரம்பித்தனர்.

இதன்பின் பிற்பகல் 4 மணிக்கு பரிவாரத்தெய்வங்களுக்கான விசேட பூசை ஆராதனைகள் இடம்பெற்று வெளிமடை உற்சவம் நடைபெற்றது. ஆலய அர்த்த மண்டபத்தில் வைத்து அடியார்கள் விதம்விதமாக பொங்கல் நைமித்தியங்களையும் பழவகைகளையும் படைத்து வழிபாடுகளை மேற்கொண்டிருந்ததைக் காணக் கூடியதாகவிருந்தது.

இப்பக்தி பூர்வமான பொங்கல் உற்சவ ஆபிசேகங்களுக்கு முன்னதாக் பொலிகை கந்தவனக்கடவை ஆலயத்திலிருந்து மறவர் கலை பண்பாட்டு மையத்தினரின் றபான வாத்தியத்துடனான பக்தி பாடல்கள் சகிதம் அடியாரகளினால் பாற்செம்பு காவடி எடுத்துவரப்பட்டு தமது நேற்றிக்கடன்களையும் நிறைவேற்றியிருந்தனர். என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை நறுவிலியடி கண்ணகியம்மன் ஆலயத்தில் பிற்பகல் 2 மணியளவில் விசேட பூசை அபிசேகங்களுடன் அம்மன் சன்னிதானத்திலுள்ள கிணற்றில் வழுந்தெடுக்கப்பட்டு பொங்கல் வைபவம் ஆரம்பமாகியது இதனையடுத்து விசேட பூசைகளுடன் கண்ணகித்தாயின் வாசலில் பொங்கல் நைமித்தியங்கள் பழங்களைப் படைத்து தம் வழிபாடுகளை மேற்கொண்டிருந்தனர். (116)

# விசாகப் பெருவிழா

(குருநகர்)

அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை வைகாசி விசாகம் பக்தி பூர்வமாக அனுஸ்டிக்கப்படவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகி 9 மணிக்கு சமய நிகழ்வுகள் இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று ஸ்ரீ நாகவரத நாராயண சுவாமி தேவியர் புடைசூழ அலங்காரத் தண்டிகையில் வீதியுலாஎழுந்தருள்வார். (68)

# தேர்த்திருவிழா

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் நீர்வையம்பதி அருள்மிகு இராஜராஜேஸ்வரி ஆலய தேர்த்திருவிழா நளை முற்பகல் 10 மணிக்கு நவசக்தி அர்ச்சனையுடன் இடம்பெறவுள்ளது.

சுவாமி தேரேறி வந்த பின் விசேட பச்சை சாத்தும் நிகழ்வும் மாலை 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தீர்த்தோற்சவமும், மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன. (85)

# விபத்தில் சிக்கிய இளைஞர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பஸ் நிலையப்பகுதியில் நடைபெற்ற விபத்தில் படுகாயங்களுக்குள்ளாகி நினைவிழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த இளைஞர் ஒருவர் இருபது நாட்களின் பின் நேற்றுக்காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கச்சாய் வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த வைரவநாதன் மயூரன் (வயது - 35) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் விசாரணையினை அடுத்து உறவினர்களிடம் நேற்றுப் பிற்பகல் ஒப்படைக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)


JUNE SPLENDOUR

190 ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி உடுவில் மகளிர் கல்லூரி நடாத்தும்

கல்விக் கண்காட்சி

ஜுன் 18, 19, 20 ஆம் திகதிகள். காலை 9.00 மணி

தொடக்கம் மாலை 5 மணிவரை.

உடுவில் மகளிர் கல்லூரி சமூகம்.

ஊடக அனுசரணை தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

## சிறு விளம்பரங்கள்

**டயானா பிளாஸ்ரிக்**

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3395)


# குண்டபஷ அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்

தனங்கிளப்பு வீதி, கேரதீவு அருள்மிகு ஐயனார் கோவில் புனராவர்த்தனப் பிரதிஸ்டா ஏக குண்டபஷ அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் நாளை காலை 6.15 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

பிரதம குரு பெரியமாவடி ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான கிரியபி கலாமணி கிரியாபருதி தேவிகிரிய உபாசகர் சிவஸ்ரீ க.வீரபத்திரக் குருக்கள் தலைமயில் நடைபெறவுள்ளது. (21)

## சப்பறக் காட்சி பார்த்தோம் சங்கரன் மகனே சரணம்!

"கலை ஞானச்சுடர்"
இராசையா ஸ்ரீதரன்



சப்பறத்திலே எழுந்தருளி ஒப்பிலாக்காட்சி தருபவனே!
சரவணனின் அண்ணனே! ஐங்கரனே சங்கரன் மகனே
இப்புவியில் உனைவிட்டால் வேறு கதி ஏது எமக்கு?
ஈவிரக்கம் காட்டியே பாவிகள் எமைக் காத்திடையா!
செப்படி வித்தை காட்டும் செகமதில் நல்லதெய்வம்
சேவித்தே வணங்கி நின்றோம் திருவருள் தருவாய்!
சப்பறக் காட்சி பார்த்தோம் இப்பொழுதே எமக்கிரங்கு
நீராவிப்பதி தனிலே நீ ஓடிவாராயோ சரணம்!

ஸ்ரீ ஜெயநீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலய ஒன்பதாம் திருவிழா இன்றாகும்.

# பட்டப்பின் டிப்ளோமா முடித்தவர்களுக்கு நிர்வாகத் துறையில் வேலைவாய்ப்பு

### பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பட்டத்திற்கு பின்னரான கல்வி வாய்ப்பினை கொண்டுள்ள பட்டதாரிகளுக்கு அரசாங்க நிர்வாகத்துறைகளில் வேலைவாய்ப்பு வழங்க அரசு ஆலோசித்து வருகின்றது.

நாடுதழுவிய பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் வழங்கிய ஆலோசனையின் பேரில் இந்நடவடிக்கையை பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

முதற்கட்டமாக அரசாங்கத் துறைகளில் பட்டத்துடன் பட்டப்பின் டிப்ளோமா முதுமாணி மற்றும் ஏனைய கற்கை நெறியை முடித்துள்ள அரசாங்க அலுவலர்களுக்கு நிர்வாகத் துறைகளில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.


இதற்கான விபரங்களை மாகாண பொதுநிர்வாக செயலகமூடாக திரட்டி நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இதேவேளை இனிவரும் காலங்களில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் போது நிபுணத்துவ துறையில் மேலதிக கற்கை வைத்திருக்கும் வேலையற்ற பட்டதாரிகளுக்கே அரச துறையில் வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இதேநேரம் உயர்தேசிய டிப்ளோமா பட்டத்துடன் கடந்த காலங்களில் வேலை வழங்கியவர்களின் விபரம் திரட்டப்பட்டு வருகின்றது.

இந் நடைமுறை 2014 இல் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுவரை 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கியுள்ளது. இவ்வாண்டு இறுதியில் மேலும் 20 ஆயிரம் பட்டதாரிகளுக்கு பட்டத்தின் பின் டிப்ளோமா பட்டத்துடன் உள்ளவர்களுக்கு உடன் நியமனம் வழங்க வரவு செலவு திட்டப்பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியை நாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (92)



பூநகரி சித்தங்குறிச்சி முருகமூர்த்தி ஆலய இராஜகோபுர கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்ற போது... (112)

# அச்சுவேலி கலை மன்றத்தின் கலை பண்பாட்டு பெருவிழா

(அச்சுவேலி)

அச்சுவேலி கலை பண்பாட்டு மன்றத்தின் ஏற்பாட்டில் கலை பண்பாட்டுப் பெருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு அச்சுவேலி கலை பண்பாட்டு மன்றத் தலைவர் வே.பாலசுப்பிரமணியம் தலைமையில் அச்சுவேலியில் இடம்பெறவுள்ளது. இடைக்காடு, பத்தமேனி, தம்பாலை, கதிரிப்பாய், வளலாய் அச்சுவேலி வடக்கு அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி மேற்கு ஆகிய ஏழு கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி இவ்விழா அச்சுவேலி பேருந்து நிலையத்திற்கருகில் உள்ள இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக பீட பீடாதிபதியும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவருமாகிய பேராசிரியர் தி.வேல்நம்பி, சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், வலி[illegible]க்கு தெல்லிப்பளை பிரதேச [illegible]லர், க.ஸ்ரீமோகன் சண்டிலிப்பாய் பிரதேச செயலளர் சு.முரளிதரன், கௌரவ விருந்தினர்களாக வடமாகாணக் கல்வித் திணைக்கள பாடசாலைகள் வேலைகள் பணிப்பாளர் எந்திரி க.குகநேசன், கோப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வி ச.பிரேமினி, கோப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி மிலாசினி ரோகேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள். (63)

# நிகழ்காலக் காட்சிகள் சில




**இடம் - ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவு**

ஒரு வயசு போன மனுசி காலமை பதினொரு மணிக்கு தன்ரை காணிப்பிரச்சினையைப் பற்றிக் கதைக்க வருது. வந்து, கந்தோரில இருக்கிற ஆட்களிட்ட விசாரிக்குது. கந்தோரில இருக்கிறவை ஆள் மாறி ஆளைக் காட்டிக் கொண்டிருக்கினம்.

மனிசி ஒவ்வொருத்தரிட்டயும் போய்ப்போய்த் தன்ரை பிரச்சினையைச் சொல்லத் தொடங்க, ஒவ்வொருத்தரும் மற்ற ஆளைக் காட்டிக் கொண்டிருக்கினம்.

மனிசி ஒரு பதினைஞ்சு இருபது நிமிசம் அங்க இஞ்ச எண்டு அலைஞ்சு களைச்சுப் போய் ஒரு ஓரத்தில ஒதுங்குது. மனிசியைப் பற்றி ஒருத்தரும் கவலைப்படுறதாக் காணேல்ல.

விசயம் என்ன தெரியுமா? முறிகண்டியில இருக்கிற இந்த மனிசி தன்னுடைய குடியிருப்புக் காணிக்கான அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுறதுக்காக, காலையில நேரத்தோடயே வெளிக்கிட்டு, ரண்டு பஸ் ஏறி, ஒட்டிசுட்டானுக்குப் போயிருக்கு.

அங்க காணி விவகாரங்களைப் பாக்கிற அக்கா, காலமை வந்து கையெழுத்தைப் போட்டிட்டுப் பக்கத்தில இருக்கிற குவார்ட்டர்ஸ்க்குச் சமைக்கப் போயிட்டா.

இனிப் பின்னேரம் வந்து கையெழுத்துப்போடுவா. இடையில பிரதேச செயலர் ஏதாவது அலுவலாகக் கூப்பிட்டால், விடுதியில இருந்து ஒருக்கால் எட்டிப்பார்ப்பா.

இப்பிடித் தனிய அக்காதான் அலுவலக நேரத்தில வீட்டுக்காரியங்கள் பாக்கப்போற தெண்டில்ல. அவரவர் தங்களுக்குத் தேவையான வீட்டுக்காரியங்கள், தோட்டவேலைகள், வயல்சோலிகள் எண்டு தோதான நேரத்தை எடுத்துக் கொள்ளுகினம்.

கந்தோருக்கு வாற சனங்கள், காத்திருந்திட்டுப்போக வேண்டியதுதான். இந்த முறிகண்டி மனிசி மட்டும் இதோட நாலாவது தடவையாக அலையுது.

**இடம் - கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனை**

காலமை பத்து மணியிருக்கும். ஆஸ்பத்திரிப் பணியாளராக வேலை செய்திட்டு ஓய்வெடுத்த ஒருதர் வந்து, தன்ரை பென்சன் அலுவலைப் பாக்கிறதுக்காகக் காத்துக்கொண்டு நிக்கிறார்.

பென்சன் பைலைச் செய்யிற தங்கைச்சி அடுத்த அறையில மற்ற ஆக்களோட கூடிக் கதைச்சுக் கொண்டிருக்கிறா. எல்லாரும் ஏதோ அமர்க்களமாகக் கதைச்சுக்கொண்டிருக்கினம்.

போனதடவை வந்தபோதும் இப்பிடித்தான் ஏதோ அலுவலாக வெளியில போட்டுவாறன். உதில இருங்கோ எண்டு சொல்லிப்போட்டுப் போன பிள்ளை, ரண்டு மணித்தியாலமாக வரவேயில்லை.

இப்பகூட இப்பிடி அமர்க்களமாக் கதைக்கிற விசயம் ஒண்டும் முக்கியமானதெண்டில்ல. இவையோட எக்கவுண்ட் ப்றாஞ்சில வேலை செய்யிற ஒருதற்றை ரண்டாவது மகனின்ரை மனிசியின்ரை ஆரோ உறவுக்காரைப் பற்றிய கதை.

இனி இப்பிடியே காலைத்தேத்தண்ணி. தேத்தண்ணியைப் பற்றியே கதைச்சு அதில ஒரு அரை மணித்தியாலம் போயிடும். அப்பிடியே 12 மணிக்கு அவரவர் பையைத் தூக்கிக் கொண்டு போனால், மதியச்சாப்பாடெல்லாம் முடிச்சு, ரண்டு மணிக்கு வருவினம்.

அதுக்கிடையில காத்திருந்தவை களைச்சுப்போய் போயிடுவினம். அப்பிடியில்லாமல், விடாக்கண்டன் மாதிரி இண்டைக்கொரு முடிவைக் கண்டுதான் போறது எண்டு ஆராவது நிண்டால், "உங்கட வேலைதான் இண்டைக்கு முழுக்கச் செய்தனான். நீங்கள் இப்பிடி நம்பிக்கையில்லாமல் சும்மா தொந்தரவு குடுக்கக் கூடாது. இதுக்கு மேல நீங்கள் கதைக்கிறதெண்டால், பெரிய ஐயாவிட்டப்போய்க்கதையுங்கோ" எண்டொரு வெருட்டு.

குரல் கடுக்கிற கடுப்பில இவர் அந்த இடத்திலயே நிக்க மாட்டார். அதுக்கு மேல கதைச்சால், இந்த ஆயுளுக்கும் பென்சன் காசை எடுக்கேலாது எண்டும் இவருக்குத் தெரியும்.

என்ன செய்யிறது, மனசுக்குள்ள கொந்தளிச்சுக்கொண்டு நடையைக்கட்ட வேண்டியதுதான்.

**இடம் - மாகாணசபைத் தலைமையகம் (முதலமைச்சர் பணிமனை)**

ஒருவர் – "மகிந்த ராஜபக்ஷவை மோடி நல்லாய் இறுக்கித்தான் போட்டார். மற்றவையிட்ட வாலாட்டின மாதிரி ராஜபக்ஷ கொம்பனியோ சிங்களவரோ மோடியிட்ட வாலாட்டேலாது..."

மற்றவர் – **"அப்ப இந்தத் தடவை கொழும்பின்ரை கழுத்தில டில்லி சுருக்குக் கயிற்றைப் போடத்தான் போகுதெண்டு சொல்லுறியள்...."**

ஒருவர் – "மோடிக்கு எழுதின சம்பந்தன் அய்யாவின்ரை கடிதத்தை ரண்டு நாளாக மாறி மாறி எல்லாரும் படிச்சவையாம்...."

முதல்வரிடம் கலந்தாலோசித்துத் திட்டங்களுக்கு ஒப்புதல் வாங்கக் கொண்டு போன கோவைகளைப் பார்த்த முதலமைச்சர் சொல்கிறார்...

**"அடுத்த தவணைக்கு sorry வாறகிழமை இதுகளைப் பற்றி ஒருக்கால் பாப்பம்"**

கோவைகளைக் கொண்டு போன அதிகாரி வலு பவ்வியமாகச் சொன்னார்...

"ஓம் சேர், போன கிழமையும் இதை நீங்கள் பார்த்தனீங்கள்...."

**"ஓம் பாத்தன்தான். வாற கிழமையும் ஒருக்கால் பாப்பம்"** எண்டார் முதலமைச்சர்.

"அந்தாளைப் பிழை சொல்லேலாது, வழக்குகளை ஒத்திவைச்ச குணமாக்கும். ம்... இதுக்கு எப்பதான் முடிவைச் சொல்லப்போறாரோ..." எண்டு முணுமுணுத்துக்கொண்டு முதலமைச்சரின் அறையை விட்டு வெளியே போய்க்கொண்டிருக்கிறார் அந்த அதிகாரி.

நேரம் என்பது செலுத்தப்பட்ட அம்பைப் போன்றது; அது திரும்பி வராது. - ஜேஷி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## விசித்திர வல்லரசு நியாயங்கள்!

சிரியாவில் ஜனாதிபதி பஸார் சி ஆஸாத்தின் (Bashar Assad) அரசுக்கு எதிராக 2011 மார்ச்சில் மேற்கத்தைய ஆதரவு பெற்ற கிளர்ச்சிக்காரர்கள் போரை ஆரம்பித்த பின்னர், இதுவரையான 3 ஆண்டுகளில் ஒரு லட்சத்து அறுபத்திரண்டாயிரத்திற்கு மேற்பட்டோர் (1,62,402 பேர்) கொல்லப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தொகையில் பெரும்பாலானவர்கள் சாதாரண அப்பாவிப் பொதுமக்கள். ஏனையோர் பஸாரின் படைவீரர்கள், கிளர்ச்சிக்காரர்கள் ஆவர். கொல்லப்பட்டவர்களில் 8,607 குழந்தைகளும், 5,586 பெண்களும் உள்ளடங்குவர் என அந்தத் தகவல் மேலும் கூறுகிறது. அதாவது, பெண்களை விடவும் குழந்தைகள் கூடுதலாகக் கொல்லப்பட்டுள்ளனர்!

அத்துடன் இந்த உள்நாட்டு யுத்தத்தால் 65 இலட்சம் மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்! இதுதவிர 27 இலட்சம் மக்கள் நாட்டைவிட்டே வெளியேறி அயல்நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

ஜனாதிபதி ஆஸாத்தின் 30 வருட சர்வாதிகார ஆட்சிக்கு முடிவு கட்டுவதற்காகப் போராடுவதாக கிளர்ச்சிக்காரர்கள் சொல்லிக் கொண்டாலும், அவர்களுக்குப் பின்னால் ஈராக்கில் லிபியாவில் செய்தது போல மேற்கத்தைய நாடுகள் இருப்பது இரகசியமானதல்ல.

மறுபுறம், இவர்கள்தான் மனிதநேய அடிப்படையில் போர்க்குற்றம், மனித உரிமைகளைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் சர்வதேச அரசியலின் விசித்திரம்!

ஆனால் ஈராக்கிலும், லிபியாவிலும் செய்தது போன்று மேற்கு நாடுகள் இதுவரை சிரியாவில் நேரடித் தலையீடு எதையும் செய்யவில்லை. அதற்குக் காரணம் ரஸ்யாவின் மற்றும் ஈரானின் பலமான ஆதரவு ஆஸாத்தின் அரசுக்கு இருப்பதுதான். உக்ரைன் விஷயத்திலும் நேட்டோ நாடுகளும் உலக ஆதிக்க ஊடகங்களும் அடக்கியே வாசிப்பதைக் காணமுடியும்.

அந்தவகையில் பார்த்தால், அணுகுண்டுகள் வைத்திருக்கும் நாடுகளுக்குள் நுழையத்தான் நேட்டோ–அமெரிக்க நாடுகள் தயங்குகின்றன என்பது தெளிவு. லிபியா, ஈராக், ஆப்கானிஸ்தான் போன்றவற்றின் அழிவுக்குக் காரணம், அவற்றிடம் பேரழிவு ஆயுதங்கள் இல்லாமல் போனதுதான் என்று சொல்லப்படும் தர்க்கத்தை மறுக்க முடியுமா?

அமெரிக்கா குற்றம்சாட்டியதைப்போல இரசாயன ஆயுதங்கள் ஈராக்கில் இருந்திருந்தால், சதாம் ஹூசைனை தூக்கில் தொங்க விட்டிருக்க முடியாது. அமெரிக்காவின் பேச்சுக்கு ஏமாறாமல், தனது அணு ஆயுதத் திட்டங்களைத் தொடர்ந்திருந்தால், கடா:பிக்கு இப்படியொரு இழிநிலை நேர்ந்திருக்காது.

வடகொரியாவை நெருங்க முடியாததற்குக் காரணம் அவர்களிடம் அணு குண்டுகள் இருக்கிறது என்பதுதானே! இப்படியொரு சூழலில், அமெரிக்காவுக்கு நேரடியாகச் சவால்விட்டுக் கொண்டிருக்கும் ஒரு நாடு, பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கக்கூடாது என்பது, அந்த நாட்டை ஒழிப்பதற்கான சூழ்ச்சி என்பதாக அல்லவா அர்த்தமாகிறது?

அணுஉலை, அணுகுண்டுகள் எதிர்க்கப்பட வேண்டியவைதான். அதேநேரம், லிபியாவுக்கும் ஈராக்குக்கும் ஏற்பட்ட நிலை தனக்கு ஏற்படாமல் இருக்க அணு ஆயுதம் அவசியம் என்று ஈரான் கருதுவதை எப்படித் தவறு என்று கூற முடியும்? இதுதான் சிக்கல்.

அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் சொல்கிறபடிதான் ஏனைய நாடுகள் கேட்டு நடக்க வேண்டுமா? சரி, எந்தெந்த நாடெல்லாம் அணு ஆயுதங்களை வைத்திருக்கலாம் என்பதை யார்தான் தீர்மானிப்பது? அமெரிக்காவும் பிரிட்டனும்தான் என்றால், வரலாற்றில் பலமுறை துரோகம் இழைத்திருக்கும் இந்த இரு நாடுகளையும் யார் நம்புவார்கள்?

வல்லரசுகளின் தந்திர அரசியலில் சிக்கியிருக்கும் இந்த உலகில் நியாயங்களும் விசித்திரமானவைதான். - ஆசிரியர்

# தற்காலிக சுகாதார ஊழியர்கள்

# வவுனியாவில் உண்ணாவிரதம்

வவுனியா நகரசபையில் பணியாற்றிய தற்காலிக சுகாதார ஊழியர்கள் ஐவர் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு மற்றும் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நகர சபையில் சுகாதார ஊழியர்கள் பற்றாக்குறையாக இருந்த சமயங்களில் தற்காலிக நியமனங்களில் பணியாற்றியவர்களின் பணிக்காலம் நிறைவடைந்துள்ளதாக நகரசபை செயலாளரினால் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தமக்கு நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி இவர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர். 7 சுகாதார ஊழியர்களுக்கு இவ்வாறு நிரந்தர நியமனம் வழங்கப்படாத போதிலும் இருவர் தொழில் வாய்ப்பின்மை மற்றும் கடன் சுமை காரணமாக வவுனியாவை விட்டு வெளியேறியுள்ளமையினால் அவர்கள் இவ் உண்ணாவிரதத்தில் பங்கேற்கவில்லை என அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் வவுனியா கிளை இணைப்பாளர் ஆர். சித்திரன் தெரிவித்தார்.

இது குறித்து தாம் பல தரப்புடன் தொடர்பு கொண்டும் பலன் கிடைக்காமையினால் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய அவர், இதற்கு தீர்வு கிடைக்காத பட்சத்தில் அனைத்து சுகாதார ஊழியர்களும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் தெரிவித்தார்.

# கிளி.யில் குடிநீர் தட்டுப்பாடு

# பூர்த்தி செய்ய நடவடிக்கை

பூநகரி, பளை, கிளிநொச்சியில் உள்ள மக்களின் குடி தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்வது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் சக உயர்மட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை நடாததி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடும் வறட்சி சூழலினால் மேற்படி பிரதேச மக்கள் குடி தணணீருக்காக அல்லலபடுகின்றனர்.

யாழ்., கிளிநொச்சி குடி தண்ணீர் மற்றும் சுகாதாரத் திட்டம் கேள்விக்குறியாகியுள்ள நிலையில், மாற்றுத் திட்டத்தின் கீழ் இவ்வாறு கிளி.மாவட்ட மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவது குறித்து அரச அதிபர் ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (92)

# காற்றின் வேகம் அதிகரிக்கலாம்

# அவதானமாக இருக்க வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டின் பெரும்பாலான கரையோரப்பகுதிகளில் மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்கலாம் என வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

புத்தளத்திலிருந்து அம்பாந்தோட்டை வழியாக கொழும்பிலிருந்து காலி வரையான கடலோரப் பிரதேசங்களில் மழை பெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தென்மேற்கு கரையோரமாக மணிக்கு 20-40 கி.மீ மற்றும் 50-60 கி.மீ வேகத்தில் காற்று வீசலாம்.

காலியிலிருந்து பொத்துவில் ஊடாக மாத்தறையிலிருந்து கொழும்பு, முல்லைத்தீவு, மன்னார், சிலாபம், திருகோணமலை மற்றும் காங்கேசன்துறை ஆகிய பகுதிகளில் மணிக்கு 70-80 கி.மீ அளவில் காற்று வீசலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மழை பெய்வதற்கான சாத்தியங்களும் காணப்படுவதாக வானிலை அவதானிப்பு நிலையம் தெரிவித்துள்ளது. இதன்காரணமாக கடல் சார் தொழிலாளர்கள் மற்றும் கடற்படையினர் அவதானமாக செயற்படுமாறு வேண்டப்படுகின்றனர்.

அதேவேளை ,மத்திய மலையகப் பகுதிகளில் இடியுடன் கூடிய மழையும் பலத்த காற்றும் வீசும் எனவும் பொது மக்கள் இடி, மின்னல் தாக்கங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் வானிலை அவதான நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்குப் பகுதியில் இடியுடன் கூடிய மழைபெய்யும் போது பலத்த காற்றும் வீசும் என வானில்லை அவதான நிலையம் தெரிவிக்கின்றது.

# கொலைக் குற்றவாளிக்கு மரணதண்டனை

# உறுதி செய்தது உச்ச நீதிமன்றம்

2005 ஆம் ஆண்டு இராஜகிரிய றோயல் பார்க் தொடர் மாடிக் குடியிருப்பில் தங்கியி ருந்த 18 வயதான இவோன் ஜோன்சன் என்ற யுவதியின் கொலை தொடர்பில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஜூட் ஜயமக என்பவருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்த மரண தண்டனையை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியதாக கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி பத்மினி ரணவக்க நேற்று அறிவித்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவத்தை அடுத்து கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணையின்போது குற்றவாளியான ஜூட் சமந்த ஜயமகவிற்கு 12 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது..

ஜூட் சமந்த குறித்த சிறைத் தண்டனைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேனமுறையீடு தாக்கல் செய்தார்.

இதன்போது குற்றவாளிக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனை போதுமானதாக இல்லை எனவும் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் எனவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் மனுவொன்றை தாக்கல் செய்தார்.

அதனைத் தொடர்ந்து குற்றவாளியின் மேன்முறையீட்டை தள்ளுபடி செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்த மரண தண்டனையை எதிர்த்து ஜூட் சமந்த ஜயமக உயர்நீதிமன்றத்தில் மீண்டும் மேன்முறையீடொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மேன்முறையீட்டினை பரிசீலனை செய்த உயர்நீதிமன்றம் குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்து தீர்ப்பினை கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தது.

இதற்கமைய கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி பத்மினி ரணவக்க நேற்று தீர்ப்பினை அறிவித்துள்ளார்.

## வீடுகளை இழந்தவர்களுக்கு "ஜன செவன" உதவி

சீரற்ற காலநிலை காரணமாக கடுவலை பகுதியில் வீடுகளை இழந்த இரு குடும்பத்தினருக்கு ஜன செவன திட்டத்தின் கீழ் உதவி வழங்கும் நிகழ்வு நிர்மாணத் துறை பொறியியல் சேவை வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையில் நடைபெற்றது.

கொழும்பு மாளிகாவத்தை பீரதீபா மண்டப வளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் , கடுவலை கொரதொட்ட வீதி மற்றும் கொத தலாவலை ஆகிய இடங்களில் வீடுகள் சேதமடைந்த இருவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டன. கொழுமபு மாவட்ட நகர சபை உறுப்பினர் மொஹமட் முஸம்மிலும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.

# அரசுடன் இணையமாட்டோம்

# என்கிறார் ரவி கருணாநாயக்க

தாம் அரசாங்கக் கட்சியில் இணைவது தொடர்பில் எந்தவொரு ஏற்பாடும் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

அரசாங்கக் கட்சியுடன் இணையப் போவதாக வெளியான தகவல் பற்றி விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க அரசாங்கத்துடன் இணையப் போவதாக அண்மையில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் ரவி கருணாநாயக்கவிடம் வினவியபோது, அரசாங்கத்துடன் இணைய வேண்டிய எந்தவொரு தேவையும் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இரணைமடு நீரை யாழ்ப்பாணம் கொண்டு போவது நியாயந்தானா? -2

**"ஆனையிறவு கடந்தால் சாதி சமயம் இல்லை" என்று சொன்னவர்களும், பிளாஸ்ரிக் போத்தல்களில் தண்ணீர் விற்பனைக்கு வராத காலத்திலேயே வன்னித் தண்ணீரைக் குடிக்கக்கூடாது எனக் கருதி யாழ்.தேவி புகையிரதத்தில் கண்ணாடிப் போத்தல்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து தண்ணீர் கொண்டு சென்று உத்தியோகம் பார்த்துவிட்டு வந்தவர்களும், இன்று இரணைமடுத் தண்ணீரைக் குடிப்பதற்கு முண்டியடிப்பது வரவேற்கப்பட வேண்டிய விடயம்தான்.**

திருவையூரான்

(நேற்றைய தொடர்ச்சி)

**1960களில்** அங்கு தண்ணீர் பங்கீட்டுக்கென ஒரு முறை இருந்தது. குறிப்பாக சிறுபோக வேளாண்மையின் போது யாழ்கச்சேரி அதிகாரிகள் கிளிநொச்சிக்கு வந்து "தண்ணீர்க் கூட்டம்" என்றொரு கூட்டம் நடாத்துவார்கள். அந்த நேரத்தில் குளத்தில் உள்ள நீரின் அளவை வைத்து விவசாயிகளுக்கு எவ்வளவு தண்ணீர் வழங்குவது என்று தீர்மானிப்பார்கள். பெரும்பாலும் விவசாயிகளிடம் உள்ள வயற்காணியில் மூன்றில் ஒரு பங்கு காணிக்குத் தண்ணீர் வழங்குவது எனத் தீர்மானிக்கப்படும்.

அதன்படி நீர்ப்பாசனப் பொறியியலாளராக இருந்த ஆறுமுகம் என்பவருக்கு கடுமையான உத்தரவிட்டதால், கட்டு சிறிதளவு உயர்த்தப்பட்டது. (அப்படி உயர்த்தியதால் மாங்குளமோ ஒட்டிசுட்டானோ நீரில் மூழ்கிப் போய்விடவில்லை)

இந்த இடத்தில் இன்னொரு முக்கியமான விடயத்தையும் தெரியப்படுத்துவது அவசியம். இரணைமடுக் குடியேற்றத் திட்டத்தில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மூன்று ஏக்கர் காணியில் ஒரு ஏக்கருக்குத் தண்ணீர் வழங்கப்படும். குளத்தில் போதிய தண்ணீர் இல்லையென்றால் அது அரை ஏக்கராகவும் கூடக் குறைக்கப்படுவதுண்டு.

மூன்று ஏக்கர் வைத்திருக்கும் குடியேற்றத்திட்ட விவசாயிக்கு மூன்றிலொன்றின்படி ஒரு ஏக்கர் என்றால், 300 ஏக்கர் வைத்திருக்கும் பெரும் காணிச் சொந்தக்காரருக்கு 100 ஏக்கருக்குத் தண்ணீர் வழங்கப்படும். குடியேற்ற விவசாயிக்கு அவனுடைய வயல்தான் ஒரேயோரு வருமானம். ஆனால் இந்தப் பெரும் காணிச் சொந்தக்காரருக்கு கிளிநொச்சியில் வர்த்தக நிலையங்கள், வட்டிக்கடைகள், மில்கள், தியேட்டர்கள் என்பன போன்ற வேறு வருமான வழிகளும் இருக்கும். சிலர் யாழ்ப்பாணத்தில் கொழுத்த சம்பளம் வாங்கும் அரச உயர் அதிகாரிகளாக இருப்பர்.

எனவே இந்தக் கபடத்தனமான விகிதாசார முறையை மாற்றி, ஒரு ஏக்கர் என்றால் குடியேற்ற விவசாயி - பெரும் காணிக்காரர் என்ற பாகுபாடின்றி எல்லோருக்கும் ஒரு ஏக்கருக்கே தண்ணீர் வழங்கும்படி விவசாயிகள் கோரி வந்தனர். ஆனால் யாழ்.கச்சேரி அதிகாரிகள் அதற்குச் செவிசாய்க்கவில்லை. அந்த நேரத்தில் புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் இந்தப் பிரச்சினைக்காக கிளிநொச்சிப் பிரதேச விவசாயிகளை அணிதிரட்டிப் போராட்டங்களை முன்னெடுத்தது.

60களின் பிற்பகுதியில் நடந்த சிறுபோகத் தண்ணீர் கூட்டம் ஒன்றுக்கு யாழ்.கச்சேரியிலிருந்து மேலதிக அரசாங்க அதிபர் சபாரத்தினம் வந்திருந்தார். அந்தக் கூட்டத்துக்கு அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் கிளிநொச்சிக் கிளை பல நூற்றுக்கணக்கான விவசாயிகளை அணிதிரட்டிச் சென்று தண்ணீர் பங்கிடும் முறையை மாற்றி எல்லோருக்கும் ஒரே அளவான தண்ணீரை வழங்குமாறு கோரிக்கை விடுத்தது. ஆனால் மேலதிக அரசாங்க அதிபர் அதற்கு மறுப்புத் தெரிவித்தார். அதற்கு இன்னொரு காரணம் அவருக்கு, உதவி அரசாங்க அதிபர் முருகேசம்பிள்ளைக்கு, முன்னாள் அரசாங்க அதிபர் ஸ்ரீகாந்தாவுக்கு என, தமிழ் அரச உயரதிகாரிகள் பலருக்கு பல நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகள் கிளிநொச்சியில் இருந்தது.

விவசாயிகள் தமது கோரிக்கையில் உறுதியாக இருந்தனர். தமது கோரிக்கை நிறைவேறும்வரை மேலதிக அரசாங்க அதிபரை வெளியேற விடமாட்டோம் என விவசாயிகள் அவரைச் சுற்றி வளைத்து முற்றுகைப் போராட்டம் நடாத்தினர். அதன்பின்னர் மேலதிக அரசாங்க அதிபர் வேறு வழியில்லாமல் விவசாயிகளின் கோரிக்கைக்கு உடன்பட்டு கையெழுத்து வைக்க வேண்டி வந்தது. அந்தச் சம்பவத்தின் பின்னர் கிளிநொச்சியில் தண்ணீர்க் கூட்டம் நடாத்துவதாக இருந்தால் பொலிஸ் பாதுகாப்புடன்தான் நடாத்துவது வழமை.

இதிலிருந்தே கிளிநொச்சி விவசாயிகளுக்கு உள்ள தண்ணீர் பிரச்சினையை ஒருவர் புரிந்துகொள்ள முடியும். விவசாயிகள் சங்கம் இந்த நீர்ப்பற்றாக் குறையைச் சமாளிக்க இன்னொரு ஆலோசனையையும் முன்வைத்தது. அதாவது இரணைமடு அணைக்கட்டை உயர்த்தி நீர்க் கொள்வனவை அதிகரிக்கச் சொல்லிக் கோரியது. அப்படி உயர்த்தினால் மாங்குளம், ஒட்டிசுட்டான் போன்ற பகுதிகள் நீரில் மூழ்கிவிடும் என்றொரு காரணத்தைச் சொல்லி நீர்ப்பாசன இலாகா உயரதிகாரிகள் அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டனர்.

ஆனால் 1970 - 77 காலகட்டத்தில் கிளிநொச்சித் தொகுதியின் சிறீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த அமைச்சர் செல்லையா குமாரசூரியர் அணைக்கட்டை உயர்த்தும்படி அப்பொழுது கிளிநொச்சியில் கட்டியபோது யாழ்.மேட்டுக்குடியினருக்கு வசதியான முறையிலேயே அது திட்டமிட்டுக் கட்டப்பட்டது. அதாவது இரணைமடுக் குளத்திலிருந்து தண்ணீர் வெளியேறுவதற்கு இரண்டு துருசுகள் (மதகுகள்) உண்டு. ஒன்று வலதுகரைத் துருசு. மற்றது இடதுகரைத் துருசு. வலது கரைத் துருசால் வட்டக்கச்சி, இராமநாதபுரம் போன்ற சாதாரண குடியேற்றத்திட்ட விவசாயிகளுக்குத் தண்ணீர் செல்லும். இடதுகரைத் துருசால் சேர்.பொன். இராமநாதனின் ஆயிரம் ஏக்கர் பண்ணை உட்பட பெரும் காணிச் சொந்தக் காரர்களின் 2,3,4,5,6,7 ஆம் வாய்க்கால் கமங்களுக்கும், இறுதியாக உருத்திரபுரம் குடியேற்ற விவசாயிகளுக்கும் தண்ணீர் செல்லும்.

தண்ணீர் குறைவான காலங்களில் சாதாரண விவசாயிகளுக்குத் தண்ணீர் செல்லும் வலதுகரைத் துருசைப் பூட்டி விடுவார்கள். அதனால் அவர்களது பயிர்கள் வாடிக்கருகிச் சாகும். ஆனால் பெரும் காணிச் சொந்தக் காரர்களுக்குத் தண்ணீர் செல்லும் இடதுகரைத் துருசால் தண்ணீர் தொடர்ந்து பாய்ந்து கொண்டிருக்கும். அதற்குக் காரணம் வலதுகரை விவசாயிகளுக்குத் தண்ணீர் நிறுத்தப்பட்ட பின்னரும், இடதுகரை பெரும் காணிகளுக்குத் தண்ணீர் பாயும் வகையில் அந்தத் துருசை 5 அடி தாழ்த்திக் கட்டி வைத்திருப்பதுதான்! இது எவ்வளவு திட்டமிட்ட ஓரவஞ்சகம் பாருங்கள். இதைச் சிங்களவர்கள் செய்யவில்லை. தமிழர்களுக்குத் தனி நாடு கோரும் இன்றைய தமிழீழத் தேசியவாதிகளின் முன்னைய பரம்பரையினர் செய்து வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அதையும் மாற்றி அமைக்கும்படி விவசாயிகள் சங்கம் கோரியதாயினும் நீர்ப்பாசன இலாகா மறுத்துவிட்டது.

இந்த நிலைமையில் கிளிநொச்சி விவசாயிகளின் வயிற்றில் அடித்து விட்டு இரணைமடு நீரை யாழ்ப்பாணத்தவர்களுக்குக் குடிநீருக்காகக் கொண்டு போவது நியாந்தானா என்பதை நீதி நியாயம் உள்ள ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்ப்பது அவசியம். யாழ்ப்பாணத்தவர்களுக்கு குடிநீர்ப் பிரச்சினையிருந்தால் அதைத் தீர்த்து வைக்க வேண்டியது மத்திய அரசாங்கத்தினதும், மாகாண அரசாங்கத்தினதும் தலையாய கடமை என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. ஆனால் அதற்காக இன்னொரு பகுதியிலுள்ள வறுமைப்பட்டவர்களுக்குரிய நீரைக் "கொள்ளையிடுவதை" எந்தவிதத்திலும் ஏற்க முடியாது.

அப்படி இரணைமடு நீர்தான் யாழ்ப்பாணத்தவர்களுக்கு வேண்டும் என்றால், முதலில் மாவலி கங்கையையோஅல்லது வேறு ஏதாவது ஒரு நதியையோ இரணைமடுக் குளத்துக்குத் திருப்பி அதன் தண்ணீரால் குளத்தை நிரப்பிக்கொண்டு பின்னர் யாழ்ப்பாணத்தவர்களின் தேவையைத் தீர்த்து வைக்கலாம். அதுதான் சரியான முறை.

மாவலி நீரை வடக்கே கொண்டு வரும்படி கோருவதற்கான காலம் காலாவதியாகிவிடவில்லை. அதற்கான காலம் இன்னமும் இருக்கிறது. மதவாச்சி வரை கொண்டுவரப்பட்ட மாவலி நீரை வடக்கே கொண்டு வருவது அப்படியொன்றும் சிரமமான விடயமுமல்ல. அப்படி மாவலி நீர் வடக்கே வருமாக இருந்தால், அது வடக்கு - தெற்கு நட்புறவின் அடையாளமாகவும் இருக்கும்.

இது ஒருபுறமிருக்க, யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரின் அளவை உயர்த்துவதற்கான வழிவகைகளையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அங்குள்ள நூற்றுக்கணக்கான குளங்களையும் தூர் வாரி மழைக் காலங்களில் பெருமளவுக்கு நீரைத் தேக்கி வைப்பதற்கு ஆவன செய்தால் இரணைமடுத் தண்ணீருக்காக ஏங்க வேண்டிய அவசியமில்லை. அதைவிடுத்து "உறியிலை நெய் இருக்க ஊரெல்லாம் அலைவதில்" அர்த்தமில்லை.

இந்த இடத்தில் சில தமிழ் ஆய்வாளர்களிடம் எழுந்துள்ள சில கேள்விகளையும், அதற்கு அவர்கள் சொல்லும் விளக்கங்களையும் சொல்லி இக்கட்டுரையை முடிப்பது சிறப்பாக இருக்கும்.

அவர்களது கேள்வி என்னவெனில், யாழ்ப்பாணத்தில் சனத்தொகையும் குறைந்து, திடீர் இயற்கை அனர்த்தங்கள் எதுவும் ஏற்பட்டு கிணறுகளும் வற்றிப்போகாத நிலையில், இப்பொழுது இரணைமடுத் தண்ணீருக்காக முயற்சிப்பது எதற்காக என்பதாகும்.

அந்தக் கேள்விக்கு இப்படியும் ஒரு பதில் சிலரிடம் இருக்கிறது. அதாவது யாழ்ப்பாணத்தில் இப்பொழுது ஒவ்வொரு குடும்பத்திலும் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் வெளிநாடுகளில் இருக்கிறார்கள். அவர்கள் அனுப்பும் பணம் யாழ்ப்பாணத்தில் பெருமளவு ஒரு நுகர்வுக் கலாசாரத்தை வளர்த்து விட்டுள்ளது. பல புதிய வீடுகளும் வர்த்தக ஸ்தாபனங்களும் உருவாகியுள்ளன. அநேகமாக இப்பொழுது ஒவ்வொரு வீட்டிலும் தண்ணீர்த்தாங்கிகள் உள்ளன. சிலர் வீடுகளில் நீச்சல் தடாகங்களும் அமைத்துள்ளனர். பூங்காக்களும் அமைத்துள்ளனர். இதுதவிர ஏராளமான நவீன உணவு விடுதிகள், உல்லாசப் பயண விடுதிகளும் உருவாகி வருகின்றன. இவற்றின் காரணமாக யாழ்ப்பாணத்தின் சனத்தொகை குறைவு என்றாலும் தண்ணீரின் நுகர்வு அதிகரித்துள்ளது. எனவேதான் அவர்களுக்குக் குடிதண்ணீருக்காக வழமையான அவர்களது கிணறுகள் இருந்தாலும், புதிதாக உருவாகியுள்ள மேலதிக தேவைகளுக்காக நீர் தேவைப்படுகிறது.

அப்படி இரணைமடு நீர் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்டால், பெரும்பாலான வீடுகளில் இரண்டு நீர்க்குழாய்கள் இருக்க வாய்ப்புண்டு. ஒன்று வழமையான அவர்களது கிணற்றுக் குடிநீரைப் பெறுவதற்கு. மற்றது வன்னியாரின் இரணைமடுக் குள நீரைப் பிற தேவைகளுக்காகப் பெறுவதற்கு. ஏற்கெனவே தீண்டாமையை நிலைநாட்டுவதற்காக தேநீர்க்கடைகளில் "வெளிப்பேணி - உள்பேணி" எனத் தண்ணீரைப் பிரித்த யாழ்ப்பாணத்தான், இந்தத் தண்ணீரைப் பிரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

(நன்றி: வானவில் 40 இதழ்)

**அப்படி இரணைமடு நீர் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்டால், பெரும்பாலான வீடுகளில் இரண்டு நீர்க்குழாய்கள் இருக்க வாய்ப்புண்டு. ஒன்று வழமையான அவர்களது கிணற்றுக் குடிநீரைப் பெறுவதற்கு. மற்றது வன்னியாரின் இரணைமடுக்குள நீரைப் பிற தேவைகளுக்காகப் பெறுவதற்கு. ஏற்கெனவே தீண்டாமையை நிலைநாட்டுவதற்காக தேநீர்க்கடைகளில் 'வெளிப்பேணி – உள்பேணி' எனத் தண்ணீரைப் பிரித்த யாழ்ப்பாணத்தான், இந்தத் தண்ணீரைப் பிரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.**



# முதலமைச்சர் வேட்பாளர் அடுத்தவாரம் அறிவிப்பு



ஊவா மாகாண சபைத் தேர்தலில் தமது கட்சியின் சார்பில் நிறுத்தப்படவுள்ள முதலமைச்சர் வேட்பாளர் யார் என அடுத்த வாரம் அறிவிக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் தலைமைத்துவ குழு உறுப்பினர், கபிர் ஹாசிம் இதனைத் தெரிவித்தார். இந்த நிலையில் ஊவா மாகாண சபைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவை முதலைமைச்சர் வேட்பாளராக நிறுத்த பொரும் பான்மையிலான ஆதரவு காணபபடுவதாகவும் குறிப்பிட்டார்.

# வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பில் அறிக்கை கோர ஏற்பாடு




(கொழும்பு)

நாட்டில் உள்ள சகல வாக்களிப்பு மத்திய நிலையங்கள் தொடர்பான அறிக்கையை கோர தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தீர்மானித்துள்ளார்.

இதன்பொருட்டான தகவல்களை மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பின் போது விசேட தேவையுடையவர்கள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதாக தேர்தலகள் செயலகத்திற்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கும் நோக்கில் வாக்களிப்பு மத்திய நிலையங்கள் தொடர்பான தகவல்களைத்திரட்ட தேர்தலகள் ஆணையார் தீர்மானித்துள்ளதாக செயலகத்தின் சிரேஸ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# சிறுபான்மை சமூகத்தின் கருத்துக்களை பூரணமான ஜனநாயகம் ஒடுக்கிவிடும்

## ஹசன் அலி தெரிவிப்பு



100 வீதமான ஜனநாயகம் சிறுபான்மை மக்களை ஒடுக்கிவிடும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார். பூரணமாக சுதந்திரமானது சிறுபான்மை சமூகத்தின் கருத்துக்களை முடக்கிவிடக் கூடுமெனவும், பெரும்பான்மை சமூகத்தின் கருத்துக்கள் ஆதிக்கம் செலுத்த வழியமைக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டை கருணையான ஓர் சர்வாதிகாரி ஆட்சி செய்ய வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

பக்கசார்பு இன்றி கருணையுடன் ஆட்சி செய்யக் கூடிய ஓர் சர்வாதிகரியே நாட்டுக்கு அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவைப் போன்று இலங்கையிலும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். ஜனநாயக நிறுவனங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களின் எண்ணிக்கை 20 முதல் 25 ஆக வரையறுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். இந்த அரசாங்கம் மெய்யாகவே மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். கொள்கைகளின் காரணமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸூம் கட்சி தாவியதாகவும், கட்சி தாவுவதனை தடுக்கக் கூடிய வகையிலான சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# இலங்கை தூதுவர்களுடன் வெளிவிவகார அமைச்சர் சந்திப்பு


மத்திய கிழக்கு நாடுகளுக்கான இலங்கை தூதுவர்களுக்கு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் விளக்கமளித்துள்ளார். மத்திய கிழக்கு பிராந்திய வலயத்திற்கான இலங்கைத் தூதவர்களை, ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபியில் வைத்து வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சந்தித்துள்ளார். இந்தச்சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் பங்கேற்றிருந்தார்.

சுற்றுலாத்துறை, பொருளாதார உறவுகள், தொழில் வாய்ப்புக்கள், முதலீடு உள்ளிட்ட பல்வேறு விடங்களில் இலங்கைக்கும் குறித்த நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பின் போது சில தூதரகங்களுக்கு சில இலக்குகள் வழங்கப்பட்டுள்ளன. இலக்குகளின் அடிப்படையில் தூதரகங்கள் செயற்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

# வர்த்தக குழு யப்பான் பயணம்

இலங்கையின் 25 பேர் கொண்ட உயர் மட்ட வர்த்தக பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்று ஜப்பானுக்கான விஜயத்தை மேற்கொண்டது. இன்று நடைபெறவுள்ள 18 ஆவது ஜப்பான் - இலங்கை கூட்டு குழு மாநாட்டில் கலந்துக் கொள்ளும் நோக்கில் இந்தக் குழு அங்கு சென்றுள்ளது அத்துடன் ஜப்பானில் இலங்கையில் காணப்படுகின்ற வர்த்தக வாய்ப்புக்கள், சுற்றுலாத்துறை போன்ற துறைகளின் விரிவாக்கல் பணிகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசாங்கம் என்ற நாயை குளிப்பாட்ட போகிறாராம் விமல்



அரசாங்கம் என்ற நாயைக் குளிப்பாட்டி சுத்தம் செய்யப் போவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் மொனராகலையில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாய்கள் குளிப்பதற்கு விரும்புவதில்லை, உரிமையாளர் நாயின் நன்மைக்காக குளிப்பாட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று தூக்கத்திலிருக்கும் அரசாங்கத்தை தட்டி எழுப்பி, இலக்குகளை அடைவதற்காக நல்வழிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நல்ல நோக்கத்திற்காகவே சுதந்திர முன்னணி ஆளும் கட்சியில் இணைந்து கொண்டதாக விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். சில அரசியல்வாதிகள் தமது நடவடிக்கைகளை நாடகம் எனச் சித்தரிப்பதாகவும் மாநாயக்க தேரர்கள் மற்றும் நாட்டு மக்களின் கருத்துக்களே தமக்கு முக்கியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நாட்டின் எதிர்காலத்தில் மாற்றங்களைச் செய்வதற்காக அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது! அவசியமம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# அநுராதபுரத்தில் பொசன் கொண்டாட்டம் பாதுகாப்புக்கு 4000 பொலிஸார்

அநுராதபுரத்தில் நடைபெறவிருக்கும் தேசிய பொசன் பண்டிகைக்கொண்டாட்டங்களை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை முதல் 15ஆம் திகதி வரை பொசன் வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அநுராதபுர மாவட்ட அரச அதிபர் மகிந்த செனவிரத்ன தெரிவித்தார்.

இப்பொசன் பண்டிகைக்காலத்தில் அநுராதபுரம், மிகிந்தலை. மற்றும் தந்தரிமலை பிரதேசங்களில் நாலாயிரம் பொலிஸாரைப் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அநுராதபுரம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஷ் சேனாரத்ன தெரிவித்தார்.

பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் பொசன் சேவைக் கடமைகளிலீடுபடும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் தங்குமிட வசதிகளைப்பெற்றுக் கொடுக்கும் நோக்கில் அநுராதபுரம் மற்றும் கலன் பிந்துனுவெவ கல்வி வலயங்களைச் சேர்ந்த பதினைந்து பாடசாலைகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் குறித்த 15 பாடசாலைகளுக்கும் நேற்று திங்கட்கிழமை முதல் ஒரு வார காலத்திற்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

# யானையின் தாக்குதலில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

மட்டக்களப்பு - கிரான் - கல்லடி வெட்டை வயல் பிரதேசத்தில் நேற்று முன்தினம் விவசாயி ஒருவர் யானை தாக்கி உயிரிழந்துள்ளார். மாவடிவேம்பு - சித்தாண்டியைச் சேர்ந்த மு.சீனித்தம்பி (வயது-57) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு யானையின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவ தினத்தன்று அதிகாலை காலைக் கடன் முடிப்பதற்காக அருகில் உள்ள காட்டிற்கு சென்றவர் திரும்ப வயல் வாடிக்கு வந்து சேராததால், உறவினர்கள் சென்று தேடியபோது யானையின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, களுவாஞ்சிகுடி - பெரியபோரதீவுப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் மாலை இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் பலியானவர் இராசலிங்கம் சங்கரப் பிள்ளை (வயது-30) என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# புதையல் தேடிய ஆறு பேர் கைது

மின்னேரியா - கடுகெலியாவ பிரதேச வீடொன்றில் புதையல் தோண்ட முற்பட்ட பெண்ணொருவர் உள்ளிட்ட அறுவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களால் புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்ட சில உபகரணங்களும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன. இவர்கள் தெமட்டகொடை, பாணந்துறை, லிந்துலை, குருநாகல் மற்றும் மின்னேரியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது. சந்தேகநபர்கள் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டன.

# அனர்த்த கடன் வழங்க கோரிக்கை

(கொழும்பு)

கடந்த தினங்களில் நிலவிய அசாதாரண காலநிலையால் பணிகளுக்கு சமூகமளிக்க முடியாத அரச பணியாளர்களுக்கு அனர்த்த கடன் தொகையை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

அரசு மற்றும் தனியார் தொழிற சங்க ஒன்றியம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

அரச பணியாளர்களின் நலன கருதி, அரசாங்கம் இந்தக் கடன் தொகையை வழங்க வேண்டும் என்று, ஒன்றியத்தின் இணைப்பாளர் சமன்ரத்ன பிரிய தெரிவித்துள்ளார்.

# பொசனை முன்னிட்டு புத்தகங்கள் அன்பளிப்பு



பொசன் பண்டிகையை முன்னிட்டு கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனாவின் கருத்திட்டத்துக்கு அமைவாக கல்வி அமைச்சு ஆரம்பித்த புத்தகங்களை அன்பளிப்பு செய்யும் இறுதித் தினமான நேற்று வரை சுமார் ஒரு இலட்சம் புத்தகங்கள அன்பளிப்பாக கிடைத்துள்ளன.

இந்த வேலைத்திட்டத்துக்கிணங்க நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பாடப் புத்தகங்கள், சிறுவர் கதைப்புத்தகங்கள், வினாவிடைப்புத்தகங்கள் போன்ற பலவிதமான புத்தகங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. பொசன் பண்டிகையை முன்னிட்டு மிகிந்தலைக்கு வரும் பாடசாலை மாணவர்களுக்கு இந்தப் புத்தகங்கள் அனைத்தும் முற்றிலும் இலவசமாக விநியோகிக்கப்படும் எனக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனா தெரிவித்தார்.

இதேவேளை பொசன் பண்டிகையை முன்னிட்டு புத்தக அன்பளிப்பு செய்யும் இறுதித் தினமான நேற்று கல்வி அமைச்சின் வளவிலும் வைபவம் ஒன்று இடம் பெற்றது. பன்னிப்பிட்டிய தர்மபால மகா வித்தியாலய மாணவர்கள் ஒரு தொகை புத்தகங்களை கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனாவிடம் கையளித்தனர்.

# பாலின் விலையை அதிகரிக்குமாறு சங்கங்கள் கோரிக்கை முன்வைப்பு

(யாழ்ப்பாணம்)

பால் சங்கங்களினால் விற்பனை செய்யப்படும் பாலின் விலையை 70 ரூபாவாக அதிகரித்துத்தருமாறு சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சருக்கு அரசாங்க அதிபரூடாக பால்சங்கங்கள் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளன.

ஒரு மாதத்துக்கு 108 ஆயிரம் லீற்றர் பால் யாழ்.மாவட்டத்துக்குத் தேவைப்படுகின்றது. ஆனால் தற்போது 26 ஆயிரம் லீற்றர் பாலே உற்பத்திசெய்யப்பட்டு வருகின்றது. இதில் 30 சதவீதம் கூட யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுவதில்லை என யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்பள்ளிச் சிறார்களுக்கு வழங்கப்படவேண்டிய 150 மில்லி லீற்றர் பால் கூட தற்போது சீராக பிள்ளைகளுக்கு வழங்கப்படுவதில்லை எனவும் இதனை வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை சங்கங்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் மாடுகளுக்கு கொடுகப்படும் உணவுகளில் கலோரி பற்றாக்குறையாக உள்ளதனாலேயே பால் உற்பத்தி குறைவடைந்து காணப்படுவதாகவும் இவ்வருட இறுதிக்குள் பால் உற்பத்தியின் அளவை 30,000 லீற்றராக அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (25)

## மாற்றுத்திறனாளிகளுக்கு செயலமர்வு நடாத்த ஏற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதேச செயலக ரீதியாக மாற்றுத்திறனாளிகளுக்கான செயலமர்வு நடாத்தப்படவுள்ளது. மாவட்ட சமூகசேவைகள் அலுவலகம் பிரதேச செயலர்களின் ஒத்துழைப்பை பெற்று இச் செயலமர்வை நடாத்தவுள்ளது

இதற்காக சமூகசேவைகள் அமைச்சினால் ஒரு இலட்சம் ரூபா நிதி மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் பகிர்ந்து வழங்கி மாற்றுத்திறனாளிகள் புனர்வாழ்வு தொடர்பாக தொண்டர்களுக்கு செயலமர்வுகள் நடாத்தப்படவுள்ளன.

2011 ஆம் ஆண்டில் சமூகசேவைகள் அமைச்சினால் ஒவ்வொரு பிரதேசசெயலக பிரிவுகளிலிருந்தும் தலா 20 தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டு 10 நாள் பயிற்சி வழங்கப்பட்டது. அவர்கள் கிராம மட்டத்தில் மாற்றுத் திறனாளிகளின் புனர்வாழ்வு தொடர்பாக இயங்கி வருகின்றனர். (90)

## பொங்கல்விழா

முல்லைத்தீவு வன்னிவிளாங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா வெகுசிறப்பாக இடம்பெற்றது.

அம்மனுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விஷேட அபிஷேகமும் ஆராதனைகளும் இடம்பெற்றன. விசேடமாக இவ்வாலயத்தில் இந்தியாவில் தரிசிக்கப்படும் 12 ஜோதிலிங்க வழிபாட்டில் இருந்து 01 லிங்கம் தரிசன வழிபாட்டிற்காக இவ்வாலயத்தில் வைக்கப்பட்டது. இதனைப் பல அடியார்கள் வழிபட்டனர். தொடர்ந்து பொங்கல் விழாவில் அடியார்கள் நேர்த்திக் கடன்களை மேற்கொண்டனர். (40)

## திருநாள் விழா

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய திருநாள் விழா கடந்த 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேறி திருப்பலிப் பூசையுடனும் ஆரம்பமாகியது. தினமும் மாலை 5.30 மணிக்கு திருநாள் திருப்பலிப் பூசை நடைபெற்றுவருகின்றது.

இதில் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை திருநாள் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கபட்டு விழா நிறைவடையும். (66)

## மரம்நடுகை நிகழ்வு

உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு ஓமந்தை மத்திய கல்லூரியில் மர நடுகை நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

Future Green World நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஓமந்தை கிராமசேவையாளர் ஜெயபாலன், நிறுவனத்தின் விரிவாக்கல் முகாமையாளர் ஜனகன் சிறிரெலோக் கட்சியின் உறுப்பினர் கார்த்திக், ஓமந்தை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ப.கனசியஸ், அ.அஸிஸ், சி.ஆனந்தகுமார், தி.கைலேஸ்வரன் மற்றும் அ.றிப்தின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Future Green World நிறுவனத்தின் முகாமையாளரால் சந்தனமர நடுகை பற்றி விளக்கமளிக்கப்பட்டது. (70)

## விசாகத்திருவிழா

சுன்னாகம் முத்துமாரி அம்மன் ஆலய வைகாசி விசாகத் திருவிழா நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் மு.ப. 10 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி 12 மணியளவில் அம்பாள் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது.

## முரசின் இன்றைய பலன்

(10.06.2014 செவ்வாய்க்கிழமை)



**ஐய வருஷம் வைகாசி மாதம் 27 ஆம் திகதி.**
**சித்தம் / துவாதசி.**
**சுவாதி நட்சத்திரம் பி.ப. 02.00 வரை. பின் விசாகம்.**
**இராகு காலம் 02.52 -04.22 வரை. சுபநேரம் 10.22 - 11.52 வரை.**

**ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | வியாபாரம் சம்பந்தமாக பொருட்களைக் கொள்வனவு செய்ய திடீர் பிரயாணம் ஏற்படும், பழைய பொருட்கள் கொள்வனவு செய்யவரும் அறிமுகமில்லாத நபர்கள் பற்றி விழிப்பாக இருக்கவும். |
| ரிஷபம் | உணவில் விஜ ஜெந்துக்கள் விழுந்ததை அறியாது உட்கொண்டதால் ஒவ்வாமை ஏற்படல், கிரகதோஷ நிவர்த்திக்காக ஆலயங்களுக்கு குடும்ப சகிதம் செல்லத்திட்டமிடல். |
| மிதுனம் | எக்காரியத்திலும் வேகத்தைக் குறைத்துக்கொண்டு விவேகத்தைக்காட்டிக் கொள்வது அவசியம், சுபகாரியத்திறகு அடகு வைக்கும நிலை ஏற்படல். |
| கடகம் | குழந்தைப் பாக்கியம் பெற தமிழ் நாட்டுக்குச் செல்ல திட்டமிடல், வாஸ்து சோதிட முறைப்படி புதிய மனை அமைக்க சாத்திரியாரைத் தேடிச் செல்லல். |
| சிம்மம் | அரசுப் பணியாளர்கள் முன்னேற்றம் ஏற்படகுறுக்கீடுகள் பற்றி எச்சரிக்கையாக இருக்கவும், தொடுத்த வழக்கில் சாதகமான தீர்ப்புக்கிட்டும் என்ற நம்பிக்கை பிறத்தல். |
| கன்னி | மீள் நியமனம் பெறவிண்ணப்பம் செய்தமைக்குச் சாதகமான பதில் கிடைத்தல், உடன் பிறந்தவர்களால் உதவியும் ஆதரவும் ஒத்துழைப்பும் எட்டும். |
| துலாம் | தாய்மாமன் மூலம் இக்கட்டான நேரத்தில் உதவிகிட்டுவதால் அனுகூலம் ஏற்படும், வெளியூர் உறவுகள் மனைக்கு ஏகுவதால் மகிழ்வு. |
| விருச்சிகம் | தற்காலிகப்பணி நிரந்தரமாக்கலினால் நீண்டகால எண்ணம் நிறைவேறல், பூர்விகச் சொத்துப் பங்கீட்டில் சகோதரர் மத்தியில் பிரச்சினை உருவாதல். |
| தனுசு | பொருளாதார முன்னேற்றம் காண வங்கிக்கடன் சாதகமாக இருத்தல், ஆடவர்களால் பெண் பிள்ளை[illegible]நக்கு ஏற்படும் அச்சுறுத்தலினால் பெற்றோர் உளப்பாதிப்[illegible]டதல். |
| மகரம் | கால்நடைகள் நோயினால் பாதிக்கப்பட்டதினால் வைத்திய வசதியை நாடிச்செல்லல், சில்லறைப் பிரச்சினையால் நடத்துனருடன் தர்க்கப்படல். |
| கும்பம் | பங்குத்தொழிலில் பாரிய நஷ்டம் ஏற்படக்கூடுமென எண்ணியதால் தனித்தியங்க முடிவுசெய்தல், ஆபத்து வேளையில உதவிக்கு கைகொடுத்த அயலவர்கள் பற்றி பெருமையுறல். |
| மீனம் | உணவுப்பதார்த்தம் நஞ்சேறியதால் உடல்நலம் பாதிக்கப்படல், வெளியூர் பயணம் பணமுடைமை காரணமாக கைவிடப்பட்டுக் கவலையடைதல். |



# குருப்பெயர்ச்சி பலாபலன்கள்

(13.06.2014 முதல் 04.07.2015 வரை)

## சிம்மம்



(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)

**எதையும் துணிச்சலுடன் செய்து முடிக்கும் சிம்மராசிக் காரர்களே!**

இதுவரை குரு பகவான் உங்கள் ராசிக்கு 11 ஆம் இடத்தில் இருந்து உங்களுக்கு பல்வேறு நன்மைகளை செய்திருப்பார். பணப்புழக்கம் மேம்பட்டிருக்கும். எடுத்த செயல்கள் எல்லாவற்றையும் வெற்றிகரமாக செய்து முடித்திருப்பீர்கள். பல்வேறு நன்மைகளை தந்த குரு பகவான், இப்போது உங்கள் ராசிக்கு 12 ஆம் இடமான கடகத்திற்கு அடியெடுத்து வைத்துள்ளார். இது சுமாரான நிலையே. இனி அவரால் நன்மை தர இயலாது. குரு 12 ஆம் இடத்தில் இருக்கும் போது பொருள் பற்றாக் குறை ஏற்படும். பல்வேறு தொல்லைகள் உருவாகும். மனதில் வருத்தம் உருவாகும்.

வீண் அலைச்சல் ஏற்படும் என்பது பொதுவான பலன். இதனால் நீங்கள் மனம் ஒடிந்துபோய்விட வேண்டாம். குரு பகவானால் ஏற்படும் கெடுபலன்கள் இறுதியில் உங்களுக்கு நன்மையிலேயே முடியும். ஆசிரியர் மாணவனைக் கண்டிப்பது போன்றே, குரு பகவானின் தண்டனை அமையும். மாணவனை ஆசிரியர் அடிப்பது நன்மைக்கே. அதேபோல் குரு பகவானின் கெடு பலன்கள் உங்களுக்கு இறுதியில் நன்மையே தரும். சனிபகவானின் பார்வையால் உங்கள் நிலை சற்றும் குறையாது. எதையும் சமாளித்து முன்னேற அவர் கருணை காட்டுவார். வீட்டில் மகிழ்ச்சிக்கு எந்த குறையும் இருக்காது. அவ்வப்போது சிறுசிறு பூசல்கள் வரலாம். ஒருவருக்கொருவர் பொறுமையாகவும், விட்டு கொடுத்தும் போக வேண்டும். ஆடம்பர செலவுகளை தவிர்க்கவும். அதே நேரம் அத்தியாவசிய பொருட்கள் தடையின்றி கிடைக்கும். சுப நிகழ்ச்சிகள் தாமதம் ஆகலாம். அப்படி தாமதம் ஆவதும் ஏதோ ஒரு வகைக்கு நல்லதற்கே என்று நினைக்கவும். எனவே சற்றுக் கவனமாக இருக்கவும். நவம்பர் மாதத்தில் சுக்கிரனால் குழந்தை பாக்கியம் கிடைக்கும். செல்வாக்கு அதிகரிக்கும். உறவினர்களிடம் சமூக நிலை ஏற்படும். புதிய உறவினர்களால் உதவி கிடைக்கும்.

**பணியாளர்கள்:**

பணியில் இருப்பவர்கள் கடந்த காலத்தைப்போல அனுகூலங்கள் இருக்கும் என்று எண்ண வேண்டாம். அதிக வேலைப்பளுவை சுமக்க வேண்டியிருக்கும். ஆனால், அதற்கான மதிப்பும், வருவாயும் இருக்கும். வழக்கமான சம்பள உயர்வுக்கு தடையேதும் இல்லை. மேல் அதிகாரிகளிடம் அனுசரித்து போகவும். உங்கள் பொறுப்புகளை வேறு யாரிடமும் ஒப்படைக்க வேண்டாம்.இதனால் தற்காலிகமாக குடும்பத்தை விட்டு பிரியும் நிலை உருவாகும்.டிசம்பர் மாதத்தில் பகைவர்களின் தொல்லையில் இருந்து விடுபடுவர். பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் துறையில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர்.

**பெண்கள்:**

கணவன் மற்றும் குடும்பத்தாரிடம் விட்டுக் கொடுத்து போவது நல்லது. வேலைக்குச் செல்லும் பெண்கள் அதிகமாக உழைக்க வேண்டியதிருக்கும். டிசம்பர் மாதத்தில் உங்களுக்கு அபார ஆற்றல் பிறக்கும். நகை-ஆபரணங்கள், வீடு வாங்கலாம். சுக்கிரனால் பெரியோர்களின் ஆதரவும், ஆலோசனையும் கிடைக்கும்.

**கலைஞர்கள்:**

புதிய ஒப்பந்தம் கிடைக்க அதிக சிரத்தை எடுக்க வேண்டியதிருக்கும்.

**மாணவர்கள்:**

முயற்சி எடுத்து படிக்க வேண்டியது இருக்கும். முயற்சிக்கு தகுந்த பலன் கிடைக்காமல் போகாது. போட்டிகளில் வெற்றி கிடைப்பது அரிதாகும். ஆசிரியர்களின் அறிவுரையை கேட்டு நடக்கவும்.

**குரு அதிசாரப் பலன்!**

குருபகவான் டிசம்பர் 3 ஆம்திகதி அதிசாரம் பெற்று சிம்ம ராசிக்கு மாறுகிறார். 22 ஆம் திகதி வரைஅதில் இருப்பார். இந்தக் காலத்தில் கலகம் விரோதம் வரும் என்றும் மந்த நிலை ஏற்படும் என்றும் பொதுவாக கூறப்படுவது உண்டு. இருப்பினும் இக்காலத்தில் சீரான முன்னேற்றத்தைக் காணலாம். பொருளாதார வளம் சிறப்படையும். பண வரவுக்கு தகுந்தாற்போல் செலவும் இருக்கும். எனவே அநாவசிய செலவை குறைக்கவும். மதிப்பு, மரியாதை சீராக இருக்கும்.

**பரிகாரம்!**

பத்திரகாளியம்மனுக்கு எலுமிச்சைப் பழ விளக்கு ஏற்றி பூஜை செய்யவும். சந்தர்ப்பம் கிடைக்கும்போது நவக்கிரகங்களை சுற்றி வாருங்கள். பாம்பு புற்றுக்கு பால் ஊற்றலாம். வியாழக்கிழமை தட்சிணாமூர்த்திக்கு மஞ்சள் நிற மலர் மாலை அணிவித்து வழிபாடு நடத்துங்கள். டிசம்பரில் இருந்து ஆஞ்சநேயரையும் வணங்கி வாருங்கள்."பன்மணி சந்திர கோடி திருமுடிசொன்மணி குண்டலக் காதியுழைக் கண்ணிநன் மணி சூரிய சோம நயனத்தள் பொன்மணி வன்னியும்பூசிக் கின்றாளே" என்ற பாடலை பாடுங்கள்.

# களி மண்ணில் இவன் மன்னன்

களிமண் தரை நாயகனான ஸ்பெயினின் நடால், பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் கிண்ணத்தை ஒன்பதாவது முறையாக வென்று சாதனை படைத்துள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் திருவிழா கடந்த இரண்டு வார காலமாக பரிஸ் நகரில் நடைபெற்றது. களிமண் தரையில் நடைபெறும் இந்தப் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. நடப்பு சம்பியனும் முதல்நிலை வீரருமான ஸ்பெயினின் ரபெல் நடாலும் 2ஆம் நிலை வீரர் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச்சும் மகுடத்திற்காக மல்லுகட்டினர்.

முதல் செட்டில் ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச், நடாலின் 9ஆவது கேம் சேர்வீசை முறியடித்து, முதல் செட்டை 6-3 என்ற கணக்கில் வசப்படுத்தினார்.

இதன் பின்னர் நடாலின் தாக்குதல் தீவிரமானது. சேர்வீசிலும், பந்தை திருப்புவதிலும் சூறாவளி வேகத்தில் நடால் செயற்பட்டார். ஒரு கட்டத்தில் 5-5 என்று சமன் ஆன நிலையில், அடுத்த இரு கேம்களை வென்று நடால் 2ஆவது செட்டை கைப்பற்றினார். அதே உத்வேகத்தில் மூன்றாவது செட்டிலும் அசத்திய நடால், ஜோகோவிச்சை மிரள வைத்ததுடன் இந்த செட்டை எளிதில் கபளீகரம் செய்தார்.

இதையடுத்து வீழ்ச்சியில் இருந்து மீள நான்காவது செட்டில் ஜோகோவிச் கடுமையாக போராடினார். 4-4 என்று சமனிலை வரை கொண்டு வந்தார். ஆனாலும் நடாலின் வீறுநடைக்கு அவரால் அணை போட முடியவில்லை. 3 மணி 31 நிமிடங்கள் நீடித்த ஆட்டத்தின் முடிவில் நடால் 3-6, 7-5, 6-2, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினார். பிரெஞ் ஓப்பனில் 10ஆவது முறையாக விளையாடும் நடால் அதில் வென்ற 9ஆவது பட்டம் இதுவாகும். இதில் 2010ஆம் ஆண்டில் இருந்து 2014ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக 5 பட்டங்களை ருசித்ததும் அடங்கும். இதன் மூலம் தொடர்ந்து 5 முறை பிரெஞ் ஓப்பனை வென்றவர் என்ற சாதனைக்கும் சொந்தக்காரர் ஆனார். நடால் இங்கு 2009ஆம் ஆண்டில் மட்டும் 4ஆவது சுற்றுடன் தோற்று இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வெற்றியின் மூலம் முதல் இடத்தை தக்க வைத்துக் கொண்ட நடாலுக்கு 13 கோடியும், 2ஆவது இடம் பிடித்த ஜோகோவிச்சுக்கு ஆறு கோடியும் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டது.

நடாலுக்கு இது 14ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம். ஏற்கனவே இவர் அவுஸ்ரேலிய ஓப்பன் (2009), விம்பிள்டன் (2008, 2010), யு.எஸ்., ஓப்பன் (2010, 2013) கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் கோப்பை வென்றுள்ளார். இதன்மூலம் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற வீரர்கள் பட்டியலில், 2ஆவது இடத்தை அமெரிக்காவின் பீட் சாம்ப்ராசுடன் பகிர்ந்து கொண்டார். இவர்கள் இருவரும் தலா 14 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ளனர். முதலிடத்தில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் (17 முறை) உள்ளார். ராசியான பிரெஞ் ஓப்பனில் 2005ஆம் ஆண்டு முதன்முதலில் களமிறங்கிய நடால், இதுவரை 66 போட்டியில் வெற்றி பெற்றுள்ளார். ஒரே ஒரு முறை (2009) மட்டும் தோல்வியை தழுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## நடால் வீழ்த்தியோர்

9 பிரெஞ் ஓப்பன் பட்டத்தை ரபெல் நடால் கைப்பற்றி சாதனை புரிந்தார். பிரெஞ் ஓப்பன் இறுதிப் போட்டியில் நடாலிடம் வீழ்ந்த வீரர்கள் விபரம்:

| | | |
|---|---|---|
| 2005: | மாரியோனா | (ஆர்ஜென்ரீனா) |
| 2006: | பெடரர் | (சுவிட்சர்லாந்து) |
| 2007: | பெடரர் | (சுவிட்சர்லாந்து) |
| 2008: | பெடரர் | (சுவிட்சர்லாந்து) |
| 2010: | சோடர்லிங் | (சுவீடன்) |
| 2011: | பெடரர் | (சுவிட்சர்லாந்து) |
| 2012: | ஜோகோவிச் | (சேர்பியா) |
| 2013: | பெரடர் | (ஸ்பெயின்) |
| 2014: | ஜோகோவிச் | (சேர்பியா) |




## விபரிக்க இல்லை வார்த்தை

கடும் உழைப்புக்குக் கிடைத்த பரிசாகவே பின்னர் பிரெஞ் ஓப்பன் கிண்ணத்தைக் கைப்பற்றியதை உணர்கின்றேன். இந்த வெற்றியை விபரிக்க என்னால் முடியவில்லை என ரஷ்யாவின் ரென்னிஸ் மங்கை ஷரபோவா தெரிவித்துள்ளார்.

இந்த நேரம் மிகவும் இனிமையான நேரம். எனக்கு மிகவும் பிடித்த கிராண்ட்ஸ்லாம் போட்டியில் 2 முறை பட்டம் வெல்வது என்பது இனிமையான நேரம்தானே. இந்த வெற்றியின் மகிழ்ச்சியைக் கூற வார்த்தைகளே இல்லை. இந்த நிலையை அடைவதற்கு நான் கடுமையாக உழைத்திருக்கிறேன் என்பது உண்மை. வெறுமனே ஆடுகளத்துக்குச் சென்று வெற்றியைப் பெற்று விட முடியாது. மிகவும் கஷ்டப்பட்டால்தான் வெற்றிப்படியில் ஏற முடியும். செம்மண் தரையில் அவ்வளவாக பழக்கப்படாத நான் பின்னர் என்னைத் தயார் செய்து கொண்டேன். இந்தப் போட்டிக்காக நான் கடுமையாக உழைத்தேன். அதனால்தான் இந்த வெற்றி வசமாகியிருக்கிறது.

2004இல் விம்பிள்டனில் நான் முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றபோது எனக்கு வயது 17 தான். இப்போது பத்து ஆண்டுகள் ஓடிவிட்டன. நான் மொத்தம் வென்ற கிராண்ட்ஸ்லாம் பட்டங்களின் எண்ணிக்கை 5 தான்.10 ஆண்டுகளில் 5 பட்டங்களுடன் தொடர்ந்து முன்னேறிக்கொண்டிருக்கிறேன். எனக்காக மைதானத்தில் ஆதரவு கொடுத்த இரசிகர்களுக்கு நன்றி எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முர்ரேயின் புதிய பயிற்றுநர்



(லண்டன்)

இங்கிலாந்தின் முன்னணி ரென்னிஸ் வீரரும் விம்பிள்டன் சம்பியனுமான ஆன்டி முர்ரே, தனது புதிய பயிற்சியாளராக பிரான்சின் முன்னாள் முதல்நிலை வீராங்கனை அமெலி மவுரஸ்மோவை நியமித்துள்ளார். அவரது அனுபவமும் திட்டமிடலும் தனது ஆட்டத்திறனை மேம்படுத்த உதவும் என்று முர்ரே தெரிவித்துள்ளார்.

இரண்டு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவரான 34 வயதான மவுரஸ்மோ 2009ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார். அதன் பின்னர் மைக்கல் லோட்ரா, அஸரென்கா, மரியன் பார்டோலி ஆகியோர்களுக்கு பயிற்சியாளராக இருந்துள்ளார். வியக்கத்தக்க திறமை உடைய வீரர் ஆன்டி முர்ரே. அவருடன் இணைந்து பணியாற்ற இருப்பது உண்மையிலேயே மகிழ்ச்சி அளிக்கிறது என்று மவுரஸ்மோ தெரிவித்துள்ளார்.

## களத்திற்கு வெளியில்...

இந்த உலகக் கோப்பையிலும் ஸ்பெயின் அணிதான் பட்டம் வெல்லும். அணிக்கு கோப்பையை வென்று கொடுக்கக்கூடிய வீரர்கள் அணியில் இடம்பெற்றுள்ளனர். பல்வேறு காயங்கள் காரணமாக சில காலம் அணியில் இடம்பெற முடியாமல் போய் விட்டது. இது எனக்கு சோதனையான காலம். மீண்டும் அணி யில் இடம்பெற முயற்சித்து வருகிறேன். போட்டியில் விளையாட முழுத் தகுதியுடன் இருக்கிறேன்.

**பெர்னாண்டோ டொரஸ் (ஸ்பெயின்)**

கட்டாரில் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிக்காக மிகப் பெரிய ஊழல் நடைபெறவுள்ளது. இது சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் நிர்வாகத்துக்குள் நடந்ததுதான் வேதனை. இந்த ஊழலில் கிடைத்த பணத்தை யார் பெற்றார்கள்? பணம் எங்கு போனது என்றே தெரியவில்லை. இதுதொடர்பாக விசாரணை நடத்தவேண்டும்.

**மரடோனா (ஆர்ஜென்ரீனா)**

உலக கோப்பை போட்டிக்காக தீவிர பயிற்சி பெற்று வந்தோம். இரண்டு பயிற்சி ஆட்டங்களில் விளையாடிய பின்னர் நாங்கள் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறோம். எங்கள் அணி மீது அதிக எதிர்பார்ப்புகள் இருக்கிறது. உலக கோப்பையை மீண்டும் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. நாங்கள் ஆரம்ப ஆட்டத்தில் நெதர்லாந்தைச்சந்திக்கிறோம். அந்த அணியை பார்த்து எங்களுக்கு எந்தப் பயமும் இல்லை. ஆனால் கடந்த உலக கோப்பைப் போட்டியில் நெதர்லாந்து அணியை வீழ்த்தியே கிண்ணத்தை வென்றிருக்கின்றோம். இந்த முறை எங்கள் குழுவில் நெதர்லாந்து இருப்பதால் எங்களுக்கு நெருக்கடி இல்லை.

**டெல்பாஸ்கியூ (ஸ்பெயின் பயிற்சியாளர்)**

## நட்சத்திர வீரருக்குக் காயம் நெதர்லாந்துக்கு பின்னடைவு

நெதர்லாந்து அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் ரொபின் வான் பெர்சி காயமடைந்துள்ளார். அவருக்கு பல்வேறு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அவர் உலகக் கோப்பை போட்டியில் விளையாடுவது சந்தேகம் என வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

நெதர்லாந்து அணியின் முன் கள ஆட்டக்காரர் பெர்சிக்கு 3 நாட்களுக்கு முன்னதாக பல்வேறு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அவரைத் தவிர மற்ற வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டனர். இதனால் அவர் இந்த உலகக் கோப்பையில் விளையாடுவாரா என்பது சந்தேகம் என வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த புதன்கிழமை நடைபெற்ற வேல்ஸ் அணிக்கெதிரான நட்பு ஆட்டத்திலும் அவர் பாதியில் விலகிக் கொண்டார்.

ஆனால் இந்தத் தகவலை நெதர்லாந்து பயிற்சியாளர் லூயிஸ் வான் கால் மறுத்துள்ளார். வான் பெசி நன்றாகவே இருக்கிறார். சனிக்கிழமை நடைபெற்ற பயிற்சி குறுகிய நேரம் கொண்டது. அதனால்தான் அவர் பங்கேற்கவில்லை. அவரது உடல் தகுதி குறித்து நாங்கள் விரைவில் மதிப்பிடுவோம் என்றார் அவர். யூன் 13ஆம் திகதி சால்வடாரில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் நடப்புச் சம்பியன் ஸ்பெயினுடன் மோதவுள்ளது நெதர்லாந்து.



வின்சன் கொம்பனி

# உலக கால்பந்தாட்ட விழா
# வெல்லப்போகும் அணி எது?

எஸ். அன்ரனிப்பிள்ளை கிளிபேட்
தலைவர்: யாழ். கால்பந்தாட்ட லீக்



## பெல்ஜியம் சிறு பார்வை

பெல்ஜியம் 1 கோடி மக்கள் தொகைக் கொண்ட நாடு. முதல் மூன்று உட்பட, மொத்தம் 11 உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்கேற்றுள்ளது. 1986இல் 4ஆம் இடத்தைப் பெற்றது.

2006, 2010 உலகக் கிண்ணத்திற்குத் தகுதி பெறவில்லை. 28 வயது,திறமை மிக்க, நடு பின் கள வீரர் வின்சன் கொம்பனி (Vincent Kompany) அணியின் தலைவராவார். 26 வயது, உயர்ந்த தோற்றமுடைய, மத்திய கள வீரர்மாவன் பெலய்னி (Marouane Fellaini) மற்றும் 21 வயதான முன்கள வீரர் றொமெலு லுகாகு (Romelu Lukaku) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அணியில் சிறந்த இளம் வீரர்கள் இடம்பெற்றாலும் யாவருக்கும் இது முதலாவது உலக கிண்ணப் போட்டியாகும். 45 வயதுடைய மாக் வில்மொட்ஸ் (Marc Wilmots) பயிற்சியாளராவார். பெரும்பாலும் இவரது அணி அமைப்பு 4 - 2 - 3 - 1 ஆக இருக்கும்

# ரதீஷனின் அதிரடிச் சதம் பற்றிக்ஸ் பெரு வெற்றி

(சுன்னாகம்)

ரதீஷனின் அதிரடிச் சதத்தின் மூலம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 276 ஓட்டங்களால் பெரு வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டித்தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி கடந்த 3ஆம் திகதி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி ரதீஷனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 374 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரதீஷன் பத்து சிக்ஸர்கள், 22 பவுண்டரிகள் அடங்கலாக 157, ராஜ்போல் 40, அனோஜன் 32, டில்சான் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மகிவன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 375 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 28.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் விதுஷன் 32 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ரதீஷன் மூன்று, ராஜ்போல் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

(எஸ்.பி.)



## மின்னொளியில் காற்பந்து இன்று ஆனைக்கோட்டையில்

(ஆனைக்கோட்டை)

சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகம், சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையம் இணைந்து நடாத்தும் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டி இன்று மின்னொளியில் மகாத்மா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டி அணிக்கு ஐந்து பேரைக் கொண்டதாகும். இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்டத்தின் 32 அணிகள் பங்குகொள்ளவுள்ளன.

இன்றைய தினம் நடைபெறவுள்ள முதல் போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் அணியும், கலைவாணி பி அணியும் மோதவுள்ள அதேவேளை, தொடர்ந்து நடைபெறவுள்ள போட்டியில் நசரேத் அணியும் றோயல் அணியும் மோதவுள்ளது.

இன்றைய தினம் இறுதியாக அராலி சில்வெஸ்ரார் அணியும் சென்மேரிஸ் ஏ அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

# 15 ஓட்டங்களால் ஸ்கந்தா வெற்றி

(சுன்னாகம்)

தனுசனின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 15 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியை நடாத்தி வருகின்றது. இதில் சென். ஜோண்ஸ் கல்லூரி மற்றும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிகளுக்கிடையிலான ஆட்டம் கடந்த வாரம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.


நாணயற்சுழற்சியில் வென்று முதலில் ஆடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 42.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தர்மிலன் 28, தனுஜன் 25, விதுஷன் 22 ஓட்டங்களைப் பெற்றனர், பந்துவீச்சில் தனுஷன் மூன்று, செந்தூரன், யசூரன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 169 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 32.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது. இதில் உதய்ராகவன் 20 ஓட்டங்களைப் பெற்றார்.


பந்துவீச்சில் ஜீவிதன் நான்கு, தர்மிலன், தனுஜன், விதுஷன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் இப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 15 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (48)

## மதுஷன், ஜான்சன் சிறப்பான செயற்பாடு

# வென்றது யாழ். மத்தி



மதுஷன்



ஜான்சன்

(யாழ்ப்பாணம்)

மதுஷன், ஜான்சன் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் யாழ். மத்திய கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணிகளுக்கிடையிலான ஆட்டம் கடந்த 3ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி 48.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மதுஷன் சிறப்பாக ஆடி ஒரு ஓட்டத்தினால் சதத்தைப் பெறும் வாய்ப்பை நழுவவிட்டார். அவர் 65 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், பத்துப் பவுண்டரிகள் அடங்கலாக 99 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் நிலோஜன் 16, அனுஸ்ராஜ் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் திலக்ஷன், ஜெனஷ்டன், அனுசன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 230 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி 34.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சஞ்சிவன் 29, திலக்ஷன் 18, பிரசாத் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜான்சன் நான்கு, விதுஷன், அனஸ்ராஜ் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (எஸ்.பி.)

# ஜே.பி.எல். ருவென்ரி-20 காலிறுதியில் யூனியன்

தயாளனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் தெல்லிப்பளை யூனியன் அணி ஆறு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றதுடன் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.


யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் சனி, ஞாயிறு தினங்களில் ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் இரு போட்டிகள் நடைபெற்றது. முதல் போட்டியில் தெல்லிப்பளை கிறாஸ் கோப்பர்ஸ் அணியும், தெல்லிப்பளை யூனியன் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யூனியன் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கிறாஸ் கோப்பர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மதுஷன் 35, ராஜ்காந்தன் 31, கஜதீபன், ஜனந்தன் ஆகியோர் தலா 17, டிலோஷன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுயந்தன், பிரதீபன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 148 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தெல்லிப்பளை யூனியன் அணி த[illegible]ளினின் அதிரடித் துடுப்பாட்டத்தின் இலகுவாக வெற்றிபெ[illegible]றது. இறுதியில் யுனியன் அணி 18.4 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்று வெற்றியிலக்கை அடைந்தது. இதில் தயாளன் 39 பந்துகளை எதிர்கொண்டு 68, சதீஸ்கண்ணா 20, டன்கஜன் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ராஜ்காந்தன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக தயாளன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் ஜொலிஸ்ரார் அணியும், மூளாய் விக்டோரி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஜொலிஸ்ரார் அணி மதுஷன், மணிவண்ணன், சைலேஸ்வரன் ஆகியோரின் அதி



ரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் ஜொலிஸ்ரார் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மதுஷன் 50, மணிவண்ணன் 35, சைலேஸ்வரன் 49, பிரதீபன் 24, சஜீவன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரசாந் மூன்று, சிந்துஜன், சுரேந்திரன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 202 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மூளாய் விக்டோரி அணி 19.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சுரேந்திரன் 31, சுவேதன் 26, கஜேந்திரன் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சைலேஸ்வரன் மூன்று, வாமணன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக சைலேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார்.

## நியூசிலாந்து நிதானம்

மேற்கிந்தியத்தீவுகள், நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் நேற்று முன்தினம் மேற்கிந்தியத்தீவுகளின் கிஸ்டனில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் நியூகிலாந்து அணி நிதானமாக ஆடி வருகின்றது. முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை நியூசிலாந்து அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 240 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் வில்லியம்ஸன் ஆட்டமிழக்காது 105 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.




கால்பந்து திருவிழா
இன்னும் 2 நாட்கள்

# இலங்கையும் சிறுவர் தொழிலாளர்களும்

இன்றைய தென்னாசிய வளர்முக நாடுகளில் காணப்படு கின்ற ஒத்தமை பிரச்சினைகளில் ஒன்று சிறுவர்கள் தொழிலில் ஈடுபடலாகும். இதற்கு மிகப் பெரிய காரணம் சிறுவர் வறுமையே. இலங்கையிலும் சிறுவர்கள் வேலையில் ஈடுபடுவது, ஈடுபடுத்தப்படுவது மிக முதன்மையான சமூக, ஒழுக்க பிரச்சினையாகக்









காணப்படுகின்றது.

ஐ.நா. சபையின் சிறுவர் உரிமைக்கான அமையம் சிறுவர் உரிமை தொடர்பான சாசனத்தை வெளியிட்டபோதும் அதில் உள்ள அனைத்து உரிமைகளும் அனைத்து சிறுவர்களுக்கும் கிடைப்பதுவும் இல்லை. கிடைத்த சிறுவர்கள் அனுபவிப்பதுவுமில்லை. இது சிறுவர் சமூகமயமாக்கலில் ஏற்படும் பிரச்சினையாகும்.

சிறுவரின் உடல், உள, ஆளுமை வளர்ச்சி ஏற்ற வண்ண மாக குடும்பசமூகச் சூழலில் அமைகின்ற போது அது அக்குழந் தையின் வளர்ச்சிக்கு சாதகமாக அமைகின்றது. மாறாக குடும்பசமூக சூழலில் காணப்படும் குறைபாடுகள் அச்சிறுவர்களின் உடல் உள ஆளுமை வளர்ச்சிக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இப்பாதிப்பு அவர்கள் நடத்தை பிறழ்வில் பாதிப்பை ஏற்படுத்தி சமூக குடும்ப தனிப்பட்ட ஒழுக்க நடத்தையில் பெரும் பாதகத்தை ஏற்படுத்துவதை காணமுடியும்.

இலங்கையின் மனிதவள அபிவிருத்தி சுட்டி 97ஆக உள்ளது. இது தென்னாசியாவின் முதலிடமாக உள்ளபோதும் சிறுவர் துஷ்பிர யோகம், சிறுவர் ஆள்கடத்தல், சிறுவர் தொழிலாளர் என்பன நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இலங்கையில் ஒன்பது இலட்சம் சிறுவர் தொழிலாளர் உள்ளதாக சிறுவர் மகளிர் அமைச்சு தனது 2012 ஆம் ஆண்டு அறிக் கையில் வெளியிட்டுள்ளது.

அதில் 4,75,000 சிறுவர்கள் பதினைந்து வயதுக்கு உட் பட்டவர்கள். இது இலங்கை யின் மொத்த சிறுவர்களில் 26வீதமாகும். அதில் பெரும் பாலானவர்கள் கிராமப் புறத்தை சார்ந்தவர்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த 20 வருட யுத்தத்தில் 2000 சிறுவர்கள் ஆயுததாரிகளாக உள்வாங்கப்பட்டுள்ளார்கள். சிறைச்சாலை புனரமைப்பு மற்றும் சீரமைப்பு அறிக்கை யின்படி பதிவு செய்யப்பட்ட புள்ளிவிபரங்களில் 25 வீதம் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றங்கள் ஆகும்.

இலங்கையில் தமிழ், சிங்கள, இஸ்லாமியருடைய பாரம்பரிய முறையில் குருகுலக்கல்வி முறை என்று ஒன்று உண்டு. அது பெற்றோரின் தொழிலில் சிறுவர்களை ஈடுபடுத்துவது டன் அது பாரிய குற்றமாக கருதப்படவில்லை. ஆகவே சிறுவர் பெற்றோரோடு இணைந்து தொழிலில் ஈடுபட்டனர். 1930ஆம் ஆண்டு இலங்கையில் கல்வியின் அவசியம் வலியுறுத்தப்பட்ட பின்பு 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் அனைவரும் கல்வியில் ஈடுபட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

1998ஆம் ஆண்டு ஐ.நா. சபையின் சிறுவர் உரிமை சட்டத்தில் இலங்கை கைச்சாத்திட்டதன் வழியாக 18 வயதுக்குட்பட்ட சிறுவர் கள் வேலையில் ஈடுபடுத்தப் படுவது குற்றமாக இலங்கை யில் சட்ட வரைபுக்குள் கொண்டுவரப்பட்டன.

சிறுவர் தொழிலாளர் என்பது 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் முழுநேரமாக ஒரு தொழிலில் ஈடுபடுவதா- கும். மேலும் சிறுவர்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்களை தொழிலில் ஈடுபடுத்துவதும் சிறுவர்தொழில் என்று வரையறுக்கப்படுகின்றது.

மானிட பிரிவினருக்கு அவர்களுக்கு கொடுக்கப் பட வேண்டிய கல்வி, ஊட்டச்சத்து, மாண்பு, ஆளுமை வளர்ச்சிக்கான பயிற்சி, உடல் ஆரோக்கி யம், பராமரிப்பு மற்றும் பொழுது போக்குக்கான வாய்ப்புகளில் ஏதோ ஒன்று மறுக்கப்பட்டு தொழிலில் ஈடுபடுத்தல் சிறுவர் தொழிலாகும்.

சிறுவர் தொழிலில் ஈடுபடுவதனால் அவர்கள் கல்வி கற்பதற் கான சந்தர்ப்பம் மறுக்கப்படு கின்றது அல்லது இழக்கப் படுகின்றது. அவர்களுடைய ஆற்றல், ஆளுமை வளர்ச்சி கள் சுரண்டப்படுகின்றது. உள உடல் ரீதியாக பாதிப் புக்கள், சமூகத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டு மதிப்பை இழக்கும் வாய்ப்பு ஏற்படு கின்றது. எதிர்காலத்தில் சமூகத்துக்கும் நாட்டுக்கும் ஆரோக்கியமாக, வளமாக இருக்கவேண்டிய சந்தர்ப்பம் ஆரம்பத்திலேயே அழிக்கப் படுகின்றது. ஆகவே சிறுவர் களை தொழிலில் ஈடுபடுத்து வது பாரியகுற்றமாகும்.

சிறுவர் தொழிலில் ஈடுபடுவதற்கு மிக முக்கிய காரணமாக இருக்கும், சிறுவர் வறுமையில் மூன்று முக்கியமான அம்சங்கள் காணப்படுகின்றன:

**01. மறுத்தல்**

மறுப்பு என்பது ஒரு சிறுவருக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகளான உணவு, உடை, பாதுகாப்பான நீர், ஆரோக்கியம், கல்வி என்பதாகும். இவை கட்டாயம் கிடைக்கவேண்டும் அது கிடைக்காத போது அது மறுத்தல் எனப்படும்.

**02. புறந்தள்ளல்**

புறந்தள்ளல் என்பது ஒரு சிறுவருடைய வளர்ச்சிப் பருவத்தில் அவருடைய ஆளுமை, உணர்வுகளுக்கு சமூகத்தால் கிடைக்கப்படவேண்டிய ஒத்துழைப்புக்களிலிருந்து புறந்தள்ளப்படுவதாகும். உதார்ரணமாக ஒரு சிறுவர் வாழும் சமூகத்திலிருந்து சமூக அமைப்புக்களில் ஈடுபடுவதற்காக குறிப்பாக விளையாட்டு, கல்வி, சமய, கலாசார,

சிறுவர் கழகங்களில் மற்றும் பொழுதுபோக்கு வாய்ப்புகளில் கட்டாயம் இணைவதற்காக வாய்ப்பளிக்க வேண்டும். சிறுவரை இவ்வாறான கட்டமைப்பிலிருந்து ஒதுக்கி வைப்பது புறந்தள்ளுதலாகும்.

**03. பாதிப்புக்கு உள்ளாகும் நிலை**

சிறுவர் வாழும் வளரும் பருவத்தில் அவருக்கான உயிர்வாழ்வதற்கு முழு உரிமை உண்டு. ஆனால் யுத்தம் நடைபெறுகின்ற போது சிறுவர் உயிரும் பறிக்கப்படுகின்றது. ஆணாதிக்கம் நிறைந்த சமூகத்தில் சிறுமிகள் பாதிக்கப்படுகின்றனர். இவையே பாதிப்புக்குள் ளாகும் நிலையாகும்.

ஆகவே சிறுவர் வறுமை சிறுவர் துஸ்பிரயோகத்திற் கும் சிறுவர் தொழிலில் ஈடுபடுவதற்கும் முக்கிய காரணமாக அமைகின்றது. மேலும் குடும்ப சிதைவு, நல்லாளுகை அற்ற அ[illegible] யல் சமூக கட்டமைப்பு, விழிப்புணர்வற்ற சமூகம் என்பன சிறுவர் தொழிலில் ஈடுபடுவதற்கு இதர காரணி களாக அமைகின்றன.

சிறுவர் உரிமை தொடர் பான சட்டம் உள்ள போதும் அது முறையான விதத்தில் அனைத்து தரப்புகளாலும் நடைமுறைப்படுத்தப் படுகின்ற போதே மேற்படி பிரச்சினைக்கு முடிவு காணமுடியும். ஆயினும் இன்று அரசியலில் உள்ள முரண்பாடுகள் மற்றும் கல்வி, சமூக சிறுவர் துறைசார் உத்தியோகத்தர் அக்கறையின்மை முதலாளி வர்க்கத்தின் பணச் செல் வாக்கு, ஏழை பாமர[illegible] களின் இயலாமை என்பன சிறுவர்கள் துஷ்பிரயோகம் சிறுவர் தொழிலில் ஈடுபடல் என்பன நாளுக்கு நாள் அதிகரிக்க காரணமாக அமைகிறது.

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள். எனவே சிறுவர் தொழிலாளிகளை எமது நாட்டிலிருந்து ஒழிக்க எம்மாலான பங்களிப்புகளை நல்குவோம்.

**அர்ச்சனா கந்தசபேசன்**
**3ஆம் வருடம்,**
**மெய்யியல்துறை,**
**யாழ்ப்பாண**
**பல்கலைக்கழகம்.**

## எந்த நேரத்தில் என்னென்ன சாப்பிட வேண்டும்?



♦ முப்பது வயதுக்கு மேல் தயிரை மோராக்கித்தான் உண்ண வேண்டும். அந்த வயதுக்கு மேல் நிறைய மோரே சாப்பிட வேண்டும். தயிரைச் சாப்பிடுவதானால் அதை சோறு கறி சாப்பிட்ட பின் கடைசியாக உண்ணக் கூடாது. தயிரை காலையில்தான் உண்ண வேண்டும்.

♦ இரவில் தயிர் சாப்பிடக் கூடாது. மோர் குடிக்கலாம். இரவு வெறும் மோரும் சோறும் பழங்களும் நல்லது. இரவில் பலகாரங்களை உண்ணக் கூடாது. பழங்கள் நல்ல இரவு ஆகாரம்.

♦ காலையில் முழுச்சாப்பாடு சாப்பிடக் கூடாது. அப்போது ஆவியில் அவித்த அல்லது அதிகம் எண்ணெய் சேராத இட்லி, இடியப்பம், புட்டு, பாண், சப்பாத்தி ஆகியவைகளை உண்ணலாம்.

♦ உண்ணும் உணவில் மிளகாய் (செத்தல்) அறவே இருக்கக் கூடாது. அவசியமானால் சில பச்சை மிளகாய்களைச் சேர்த்துக் கொள்ளலாம். காரம் தேவை என்றால் மிளகைத்தான் பயன்படுத்த வேண் டும். வடை, போண்டாக்களில் கட்டாயம் மிளகு இருக்க வேண்டும். இஞ்சியும், மிள- கும் சேர்ந்த அரிசிப் பொங்கல் மிகச்சிறந்த உணவு. முழுமையான சத்துள்ள உணவு. அதில் உடலின் எதிரிகளே இல்லை.

♦ பொரித்த அப்பளம் கூடாது. சுட்ட அப்பளம் சிறந்தது. கரி அடுப்பில்தான் அப்பளம் சுட வேண்டும்.

♦ தினமும் உணவில் பருப்புச் சேர்க்கக் கூடாது. வாரத்தில் இரண்டு நாள்தான் பருப்புச் சேர்க்க வேண்டும். மற்ற நாட்களில் மிளகு ரசம், எலுமிச்சை ரசம் சேர்க்க வேண்டும்.


♦ மதிய உணவை நன்றாக மென்று சாப்பிட வேண்டும். அப்போதுதான் முழுச் சாப்பாடு சாப்பிடலாம். கட்டாயம் கீரை இருக்க வேண்டும். தினமும் உணவில் நெய் சேர்த்துக் கொள்ளலாம். ஏதாவது ஒரு கடலை சுண்டல் உணவில் இருப்பது நல்லது.

♦ மாலை நேரம் நவதானியங்களை முளைகட்டி சுண்டல் செய்து சாப்பிடலாம். ரஸ்க், பாண், சோளம், ஓட்ஸ் இது போன்ற ஏதாவது எண்ணெய் இல்லாத ஒரு பொருளை கொஞ்சமாக எடுத்துக் கொள்ளுங்கள்.

♦ பொன்னாங்கண்ணிக் கீரையில் துவரம் பருப்பு, நெய் இரண்டும் சேர்த்துச் சமைத்துச் சாப்பிட்டால் மூன்றே மாதங்களில் சதை போட்டு குண்டாகி விடலாமாம். இதே கீரையை துவரம் பருப்பு, மிளகு சேர்த்துச் சமைத்துச் சாப்பிட்டால் மூன்றே மாதத்தில் வேண்டாத சதைகள் குறைந்து நன்றாக இளைத்து விடலாமாம்.

# துக்ளக் சோ சொல்கிறார்:





"ஹிண்டு" ராம் எனக்கு நெருக்கமானதொரு பத்திரிகையாளர். ஹிண்டு குடும்பத்தின் செல்வாக்கைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆனால் அந்தச் செல்வாக்கையோ, பகட்டையோ ராமிடம் பார்க்க முடியாது.

அவ்வளவு பெரிய பாரம்பரியம் கொண்ட பத்திரிகையை நடாத்தி வரும் ராம் ஒரு பொது இடத்தில் தன்னுடைய தவறை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளக் கூடியவராகவும் இருந்தார். என்னுடைய அனுபவத்தில் ஒரு உதாரணம்.

விடுதலைப் புலிகள் விசயத்தில் ஆரம்பத்தில் இருந்தே நான் அவர்களைக் கடுமையாக எதிர்த்துக் கொண்டிருந்தேன். அவர்களால் வன்முறைதான் பரவும், ஈழமும் கிடைக்காது, எல்லாத் தலைவர்களையும் ஒழித்துக்கட்டிவிட்டு தம்மை நிலைநிறுத்திக் கொள்ளப் பார்க்கிறார்கள் என்று தொடர்ந்து நான் எழுதி வந்தேன்.

அப்போது ராம் விடுதலைப் புலிகளை ஆதரித்துக் கொண்டிருந்தார். அதற்குப் பிறகு சிறிது சிறிதாக அவருடைய அபிப்பிராயம் மாற ஆரம்பித்தது. மாறிய பிறகு அவர்களை விமர்சித்தார். கண்டித்து எழுதினார்.

அந்தச் சமயத்தில் ஒரு பொதுக்கூட்டம். அதில் ராமும் நானும் கலந்து கொண்டோம். அதில் அவர் பேசும்போது அன்றைய கூட்டத்திற்குச் சம்பந்தமே இல்லாமல் ஒன்றைச் சொன்னார்.

"இங்கே நிறையப்பேர் இருப்பதால் நான் ஒரு விசயத்தைச் சொல்லியே ஆகணும். புலிகளை முதலிலேயே புரிஞ்சிகிட்டவர் சோ ஒருத்தர்தான். இங்கே உள்ள பலர் அதைப் புரிஞ்சுக்கலை. தப்பாகத்தான் எழுதிக்கிட்டிருந்தேன். ஆனால் சோ சொன்னதுதான் கடைசியில் "சரி" ஆகிப்போச்சு. இதை எல்லோருடைய எதிரிலும் சொல்லணும்னு "தோணிச்சு" அதனாலே இங்கே சொல்றேன்....

இன்னொரு முறை, ஒருநாள் இரவு பதினொரு மணியளவில் எனக்கு போன் பண்ணினார்.

"ஒரு முக்கியமான விசயம். எனக்கு ஒரு ஆதார பூர்வமான தகவல் வந்திருக்கு. அதனால் நான் உனக்கு போன் பண்றேன். ஜாக்கிரதையாக இரு."

"என்ன..ராம்.. எதுக்கு நான் ஜாக்கிரதையாக இருக்கணும்?"

"இல்லை.. உன் உயிருக்கு ஆபத்து வரும். ஜாக்கிரதை" என்றார் ராம்.

அதன்பிறகுதான் எனக்குச் சில விசயங்கள் தெரிய வந்தன. போலீசிடமிருந்து இந்தத் தகவல் இவருக்குக் கசிந்திருக்கிறது. அதாவது என்னைத் தாக்க புலிகள் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதுதான் தகவல்.

அந்தத் தகவலை என்னிடம் சொன்னதோடு மறுநாளே "ஹிண்டு"வில் வெளியிட்டுவிட்டார். "போலிஸார் அதை மறைக்கிறார்கள், அப்படி மறைத்தால் சோ-வுக்கு அபாயம், அதைப் பிரகடனப் படுத்தினால்தான் சோ-வுக்குப் பாதுகாப்பு" என்று தீர்மானம் பண்ணி அதை அவர் வெளியிட்டுவிட்டார்.


அதன்பிறகுதான் எனக்கு துப்பாக்கி தாங்கிய போலிஸ் பாதுகாப்பு எல்லாம் தரப்பட்டது. இந்த மாதிரி எல்லாம் நடக்கக் காரணமாக இருந்தவர் ராம்தான்.

பத்திரிகையுலகத்தில் "ஹிண்டு"வுக்கு ஒரு பெரிய மதிப்பு இருக்கிறது என்றால் அதற்குப் பலர் காரணம் என்றாலும் ராமும் ஒரு காரணம். அதனுடைய சில முடிவுகளை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். அதில் வலியுறுத்துவது இடதுசாரி பார்வையை. நான் வலதுசாரி. இருந்தாலும் அதில் முன்வைக்கப்படும் விசயங்கள் அவ்வளவு ஆழமானதாக, கூடுதல் உழைப்புடன் வெளிவருபவையாக இருக்கும்.

(நன்றி: குமுதம்)

## ஏப்பம் ஏன்?

உணவு உண்ணும்போது நிதானமாக நன்றாக உணவை மென்று, அரைத்து, உமிழ்நீருடன் கலந்து விழுங்க வேண்டும். வாயின் உட்பகுதியில் உணவுப் பாதையும் காற்றுப் பாதையும் ஓரிடத்தில் ஒன்று சேர்கின்றன. இதனால் நாம் உணவை விழுங்கும்போது குரல்வளை வழியாகக் காற்று உள்ளே செல்ல முடியாதபடி குரல்வளை மூடி அடைத்துவிடும். சிலவேளைகளில் அவசர அவசரமாக உண்ணும்போது உணவுடன் ஏராளமான காற்றும் புகுந்துவிடக்கூடும். இரைப்பையில் இவ்வாறு வாயு தேங்கிவிட்டால் அதனை வெளியேற்றுவதற்கே ஏப்பம் வருகிறது. சில நிமிடங்கள் ஏப்பம் வந்து பிறகு தானாக நின்றுவிடக் கூடும்! நோயுற்ற நிலையில் சிலருக்கு இரைப்பைக் கோளாறினால் நீண்ட நேரம் ஓயாமல் அடிக்கடி ஏப்பம் வரக்கூடும். மருத்துவரிடம் உடனடியாக அழைத்துச் சென்று தக்க சிகிச்சை பெறுதல் வேண்டும்.




Gastroesophageal reflux

# புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து தனித் தமிழீழத்திற்கு முனைவோர்

4

- கமெலியா நாதானியேல் -

விநாயகத்தின் தலைமைச் செயலக குழு, உருத்திரகுமாரனது நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்துடன் கூட்டாக செயற்படும் அதேவேளை, நெடியவன், பிதா இமானுவேலது உலகத் தமிழர் பேரவையுடன் கூட்டாகச் செயற்படுகிறார். உலகத் தமிழர் பேரவைக்கு அர்ப்பணிப்புள்ள அலுவலகம் ஒன்று நோர்வேயில் இல்லாவிட்டாலும் நோர்வே ஈழத் தமிழர் பேரவை, உலகத் தமிழர் பேரவையின் ஒரு அங்கமாக உள்ளது.

நெடியவன் - இரும்பொறை குழுவினது முக்கிய பலம் நோர்வேயாகும், அங்கு 325 எல்.ரீ.ரீ.ஈ ஆர்வலர்கள் முழு நேரப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். எல்.ரீ.ரீ.ஈ ஆர்வலர்கள் பாடசாலைகள், அலுவலகங்கள், மற்றும் வியாபார நிலையங்களை நடாத்துவதும் அதேவேளை அதில் 20 பேர் மட்டுமே எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்கள் ஆவர். அந்த அங்கத்தவர்கள் முழு வலையமைப்பையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளார்கள், கட்டளைகள் வழங்குவது, மற்றும் அவர்களை எதிர்ப்பவர்களை வன்முறைகொண்டு தாக்குவது இவைகள் அவர்களது முக்கிய பணி.


நோர்வே எல்.ரீ.ரீ.ஈயினது வருடாந்த வருமானம், பொதுமக்கள் (மாதாந்தம் வங்கிக்கு வங்கி நடைபெறும் பணப் பரிமாற்றம், நிகழ்ச்சிகளில் சேகரிக்கப்படுவது, மற்றும் வீட்டுக்கு வீடு நடத்தப்படும் நிதி சேகரிப்பு), வணிக நிலையங்கள், மற்றும் அரசாங்க மானியம் என்பன வற்றிலிருந்து திரட்டப்படுகிறது. யுத்தத்தின்போது நோர்வே எல்.ரீ.ரீ.ஈ வருடாந்தம் 20 மில்லியன் குரோணர் அல்லது 1மில்லியன் அமெரிக்க டொலர்களை சேகரித்துள்ளது.

அவர்கள் தமிழ்ச் சமூகத் தினரிடம் நிதி சேகரிப்பதுடன் (முன்பு யுத்தம் இப்போது யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்கிற போர்வையில் நிதி சேகரிக்கிறார்கள்) மற்றும் நிரந்தர முதலீடுகளும் (தொலைக்காட்சி மற்றும் வானொலி என்பனவற்றின் சந்தா மற்றும் விளம்பரங்கள், பொழுது போக்கு நிகழ்ச்சிகள், இரவு விடுதிகள், பல்பொருள் அங்காடிகள், பயண முகவர் நிலையங்கள் மற்றும் ஏனைய வணிகங்கள்) பராமரித்து வருகிறார்கள்.

எல்.ரீ.ரீ.ஈ யின் பிரதான வருமான நிதிக்கம் நோர்வே அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கும் மானியம் ஆகும், அங்கு 55 கலாசார அமைப்புகள் மானியம் பெறுகின்றன. எல்.ரீ.ரீ.ஈ யினது கணக்காய்வு அறிக்கையின்படி எல்.ரீ.ரீ.ஈ பாடசாலைகள் வருடாந்தம் 13.5 மில்லியன் அல்லது 2.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை 2008 - 2012 காலப் பகுதியில் நோர்வே அரசிடமிருந்து பெற்றுள்ளன. எல்.ரீ.ரீ.ஈ மற்றும் அதில் இணைந்துள்ள அலகுகள் என்பன நோர்வே அரசியல மைப்பின்படி சட்டபூர்வமாக பதிவு செய்யப்பட்டவை ஆகும்.

நோர்வேயில் உள்ள எல்.ரீ.ரீ.ஈ யின் செயற்பாடு மற்றும் பிரதிநிதிக் கட்டமைப்பு என்பன சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ உட்கட்டமைப்புகளாகும். எல்.ரீ.ரீ.ஈ, கனடா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய இடங்களில் வலுவான ஒரு இருப்பை நிறுவி இருந்தாலும்கூட எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்கள் வெளிப்படையாக நோர்வேயில் செயற்பாடுகளை நடாத்துவது வித்தியாசமான ஒன்று.

நோர்வே எல்.ரீ.ரீ.ஈயினருக்கு உள்ள தனித்துவமான மற்றொரு அம்சம் என்னவென்றால் அதன் செயற்பாடுகளுக்கு நோர்வே அரசாங்கத்திடமிருந்து பெருமளவு உதவிகள் கிடைக்கின்றன. எல்.ரீ.ரீ.ஈ திறமையான வழியில் நோர்வேயின் கல்வி, சமூகம் மற்றும் அரசியல் அமைப்புகளுக்குள் ஊடுருவி உள்ளது. புலம்பெயர் இலங்கையர்கள் ஒஸ்லோ மற்றும் பேர்ஜென் ஆகிய இடங்களில் அதிகமாக வாழுவதால் எல்.ரீ.ரீ.ஈயின் செல்வாக்கு இந்த இரண்டு இடங்களிலும் வலுவாக உள்ளது.



ஒரு விரிவான அமைப்பான நோர்வே எல்.ரீ.ரீ.ஈ, பல கிளைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதில் நிருவாகப் பிரிவு, தமிழர் ஒருங்கிணைப்பு குழு, நோர்வே மற்றும் வெளிநாடு ஆகிய இரண்டுக்குமான முழு நிறுவனங்களையும் நிருவகிக்கும் உயர்மட்ட அங்கத்தவர்கள், எனப் பலவும் அடங்கியுள்ளன.

தமிழர் ஒருங்கிணைப்பு குழு அதன் பாடசாலை வலையமைப்பு ஊடாக நோர்வே முழுவதுமாக இயங்கி வருகிறது. தமிழர் ஒருங்கிணைப்பு குழுவின் பெயர்ப்பலகை எல்.ரீ.ரீ.ஈயின் தலைமையகம் உள்ள ஒஸ்லோவிலும் மற்றும் பேர்ஜெனிலும் மட்டுமே காணப்படுகிறது.

மனித வள பிரிவு, தமிழ் அறக்கட்டளை வளங்கள் மற்றும் தகவல் மையம் என்பன தமிழர் ஒருங்கிணைப்பு குழுவின் அதே வளாகத்திலேயே காணப்படுகின்றன.

அரசியல் பிரிவு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் நிதி உதவியுடன் இயங்கும், ஈழத்தமிழர்களுக்கான நோர்வே சபை(என்.ஈ.சி.ஈ.ரி), அனைத்து தமிழர்களின் வாழ்வையும் கட்டுப்படுத்தி செல்வாக்கு செலுத்தி வருகிறது.

(தொடரும்)




# கணித வித்தை

இதை எப்படி செய்ய முடிகிறது என்பதை உங்களால் விளக்க இயலுமா? இதை உங்கள் நண்பர்கள் கூட்டத்தில் செய்து மகிழலாம்.

உங்கள் நண்பர்கள் யாரேனும் ஒருவரை ஒரு துண்டு காகிதத்தை எடுத்து மூன்று இலக்க எண்ணை எழுதச்சொல்லுங்கள். அந்த எண் எவ் வகையிலும் இருக்கலாம். அதாவது பூஜ்யங்கள் போன்றவற்றுடன் இருக்க லாம். அந்த எண்ணை உங்களிடம் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. அதை அப்படியே அடுத்த நபருக்கு கொடுக்கச் சொல்லி அவரை அந்த மூன்று இலக்கத்துக்கு அருகில் அதே மூன்று இலக்க எண்களை எழுதச் சொல்லவும். அது இப்போது ஆறு இலக்க எண்ணாக இருக்கும்.

அதாவது உதாரணத்திற்கு முதல் நபர் எழுதியது 308 என்றால் 308308 அந்த ஆறு இலக்க எண்ணை ஏழால் வகுக்கச் சொலலுங்கள். ஏழால் வகுபடும் எண்கள் மிகக்குறைவு இந்த எண் ஏழால் மீதமின்றி வகுபடுமா என்ற சந்தேகம் வேண்டாம்! அந்த எண்கள் கண்டிப்பாக ஏழால் மீதமின்றி வகுபடும்.

வகுத்ததால் வந்த ஈவை மட்டும் வேறொரு காகிதத்தில் எழுதி வேறு யாருக்கும் தெரியாமல் மற்றொரு நபருக்கு கொடுக்கச்சொல்லவும். அந்த நபரை கொடுத்த அந்த எண்களை பதினொன்றால் வகுக்கச்சொல்லுங்கள். (மீதியில்லாமல் வரும்!) வரும் விடையை வேறொரு காகிதத்தில் எழுதி மடித்து மற்றொரு நபரிடம் கொடுக்கச்சொல்லுங்கள்! அவரை அவ்வெண்களை பதின்மூன்றால் வகுக்கச்சொல்லுங்கள்! (கவலைப்படாதீர்கள் இதுவும் மீதியில் லாமல் வகுபடும்!) வரும் விடையை வேறொரு காகிதத்தில் எழுதி மடித் ததை நீங்கள் வாங்கி முதன்முதலில் மூன்று இலக்கம் எழுதினாரே அவரிடம் கொடுங்கள்! அவர் முதலில் எந்த மூன்று இலக்க எண்களை எழுதினாரோ அந்த எண்கள் அவர் கைகளில் இருக்கும்!?

**இது நிகழ்ந்தது எப்படி ?**

மாதிரி:
மூன்று இலக்க எண் : 234
ஆறு இலக்கமாக : 234234
அதை 7 ஆல் வகுக்க : 234234/7 =
அதன் ஈவு : 33462
அதை 11 ஆல் வகுக்க: 33462 /11
வரும் ஈவு : 3042
அதை 13 ஆல் வகுக்க 3042 / 13
வரும் ஈவு : 234
ஆரம்பத்தில் எழுதிய மூன்றிலக்க எண்.

# பலூனில் இயங்கும் படகு



**தேவையான பொருட்கள்:** சதுர அல் லது செவ்வக வடிவிலான பிளாஸ்டிக் டப்பா (ஸ்வீட் அடைத்து வரும் பெட்டி களை உபயோகித்துக்கொள்ளலாம். பலூன், குளிர்பானம் குடிக்க பயன்படுத் தும் பெரிய உறுதியான ஸ்ட்ரா ரப்பர் பேண்ட் ஒட்ட பயன்படும் M Seal (களி மண் போன்று இரண்டு கலவைகளாக இருக்கும் இவற்றை தேவையான அளவு எடுத்து ஒன்றாக சேர்த்து பயன்படுத்த வேண்டும். காய்ந்தவுடன் கெட்டியாகி விடும் பின்பு உபயோகப்படுத்த இயலாது. எனவே தேவையான அளவு மட்டுமே கலந்து கொள்ளவும். உபயோகித்த பின் கைகளை சுத்தமாக கழுவிக்கொள்ள வும். சிறியவர்கள் பெரியவர்களின் துணை யோடு இதைச் செய்யவேண்டும்.)

**செய்முறை:** கத்தரிக்கோலால் பிளாஸ் டிக் டப்பாவில் ஸ்ட்ரா நுழையும் அளவு ஓட்டை போடவும் பிளாஸ்டிக் டப்பாவின் ஒரு ஓரத்தின் நடுப்பாகத்தில் (செவ்வக வடிவமாக இருந்தால் குறுகலான பக்கதை பயன்படுத்தவும்) அடிப்பகுதியில் இருந்து சுமார் ஒரு சென்ரி மீற்றர் உயரத்தில் ஸ்ட்ரா நுழையும் அளவுக்கு துளையிட வும். ஸ்ட்ராவின் ஒரு முனையில் பலூனை மாடடி ரப்பர் பேண்டை கவனமாக சுற்றவும். ஸட்ராவின் மற்றொரு முனையை டப்பாவில் இட்ட துளையின் வழியே செலுத்தி சுமார் மூன்று செ.மீ. அளவு வெளியில் இருக்குமாறு அமைத்து துளையை சுற்றி இருக்கும் இடைவெளியை எம் சீல் கொண்டு நன்றாக மூடிவிட்டு காயவிடவும். காய்ந்த பின்னர் எடுத்து ஸ்ட்ராவின் வெளி முனை உதவியால் காற்றை ஊதி பலூனை பெரிதாக்கி, ஸ்ட்ராவின் துளையை விரலால் மூடிக்கொண்டு அகலமான பாத்திரத்தில் உள்ள தண்ணீரில் விடவும். படகு ஓரளவு அமுங்குவதற்கு சிறிய பருமனான பொருட்களை உள்ளே வைக் கவும். தண்ணீரில் படகு உந்திக்கொண்டு செல்லும் காட்சியை கண்டு மகிழுங்கள்

**விளக்கம்:**

இந்த இயக்கம் நியூட்டனின் மூன் றாவது விதிக்கு ஒரு உதாரணமாகும். ஒவ்வொரு வினைக்கும் ஒரு எதிர் மற்றும் சமமான எதிர்வினை உண்டு. காற்று ஸ்ட்ரா வழியாக அழுத்தத்துடன் வெளியேறு வது ஒரு வினை. அதனால் ஏற்படும் எதி வினை காரணமாக படகு எதிர்த்திசையில் பயணிக்கிறது. இந்தப் படகை இன்னும் மேம்படுத்த என்ன செய்யலாம் ?





# போத்தல் படகு



உலகின் தற்போதைய முதன்மைச் சிக் கல் சுற்றுச்சூழல் கேடு. இச்சிக்கலிலி ருந்து விடுபட குறிப்பாக பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைப்பது பற்றி பல நாடுகளும் முயற்சி எடுத்து வருகின்றன. அதிகமாக வீணாகும் பிளாஸ்டிக் பொருட்களால் சூழல் கேடு ஆகாமல் இருப்பது அவசியம். இதனைச் சரியாகச் செயற்படுத்தி உள்ளனர் பிஜி தீவு மக்கள். பயன்படுத்திய பிளாஸ்டிக் பாட்டில்களை நன்கு கழுவி காற்றுப் புகாதபடி மூடி அதனை ஒருங்கி ணைத்து படகு கட்டி அதில் பயணம் செய்கிறார்கள்.

# வரைந்து பழகுவோம்




# சிந்திக்க வைக்கும் இலகுவான புதிர் கேள்விகள்

1) ஒரு வீட்டின் முகட்டின் மீது சேவல் முட்டையிட்டால் அது எத்திசையில் விழும்?
2) இரு முதலைகள் பாதையோரமாக நடந்து சென்றன. ஒன்று பெரியது, மற்றையது சிறியது. சிறிய முதலையானது பெரிய முதலையின் மகனாகும். ஆனால் சிறு முதலையின் தந்தையல்ல எனின் யார் இந்தப் பெரிய முதலை?
3) மின்சாரத்தில் இயங்கும் புகையிரதமொன்று 100 மைல்/மணி வேகத்தில் மேற்குத் திசையை நோக்கி பயணிக்கிறது. அந்த நேரத்தில் காற்று வடக்கிலிருந்து வீசும் எனில் புகை எத்திசையை நோக்கிச் செல்லும்?
4) ஓர் வீட்டை விட உயரமாக பாய்வதற்கு யாரால் முடியும்?
5) இரு தந்தைகளும் இரு மகன்மாரும் மீன் பிடிக்கச் சென்றனர். ஒவ்வொருவரும் தலா ஒரு மீன் வீதம் பிடித்தனர். ஆனால் பிடிபட்ட மொத்த மீன்கள் மூன்றாகும், அது எப்படி?
6) ஒரு அடி நீளம், ஒரு அடி அகலம், ஒரு அடி உயரமான குழியினுள் இருக்கக் கூடிய பொடிக் கற்களின் எண்ணிக்கை எத்தனை?
7) இரு ஆசிரியர்கள் ஒரே கல்லூரியில் கற்பிக்கின்றனர். அதில் ஒருவர் மற்றையவ ரின் மகனின் தந்தையாவார். இரு ஆசிரியர்களுக்கிடையான உறவு என்ன?
8) இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவரை இந்தியாவில் அடக்கம் செய்ய முடியுமா?
9) இடக் கையால் சுமக்கும் ஒன்றை வலக்கையால் சுமக்க முடியாது, அது எது?


**விடைகள்**

1) சேவல் முட்டையிடாது.
2) தாய்
3) மின்சாரத்தில் இயங்கும் புகையிரதத்தில் புகை வராது.
4) எல்லோராலும் முடியும் ஏனெனில் வீட்டால் பாய முடியாது.
5) மகன், தந்தை, பாட்டன் மூவருமே மீன் பிடித்தனர்.
6) பூச்சியம். குழியினுள் ஏதும் இருக்காது.
7) கணவன்- மனைவி.
8) முடியாது. அவர் இன்னும் உயிருடனுள்ளார்.
9) இடது முன்னங்கை.

# அசைந்தாடும் மெழுகுவர்த்தி



சிறு குழந்தைகளின் விளையாட்டு உபகரணங்களில் ஒன்றான Seesaw எனப்படும் இச்சாதனத்தை அனைத்து சிறுவர் பூங்காக்களிலும் பள்ளி விளை யாட்டுத் திடல்களிலும் காணலாம். அதனடிப்படையில் செயற்படும் ஒரு எளிய இயற்பியல் பரிசோதனையை இங்கு காண்போம். எச்சரிக்கை இப்பரி சோதனைக்கு பெரியவர்களின் மேற் பார்வை மிகவும் அவசியம்.



பூநகரி பிரதேச செயலர் பிரிவில் வீட்டுத்திட்டத்திற்கு தெரிவான பயனாளிகளிடம் குறை நிறைகளைக் கேட்டறியும் செயற்றிட்டம் அண்மையில் இடம்பெற்றபோது... (36)

# சீரற்ற தனியார் பேருந்துசேவை விசனமடையும் அரச அலுவலர்கள்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணம் -வவுனியா தனியார் பேருந்து சேவையின் ஒழுங்கீனங்கள் குறித்து கிளிநொச்சியில் கடமை புரியும் அரச அலுவலர்கள் சிலர் இணைந்து தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிற்கு கடிதம் அனுப்பி உள்ளனர்.

யாழ்ப்பாணம் வவுனியா ஆகிய இடங்களில் உள்ள தனியார் போக்குவரத்து சங்கங்கள் இந்த விடயம் குறித்து கவனம் செலுத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்

யாழ்ப்பாணம் வவுனியா பஸ சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகள் பரந்தன் சந்தியில் 5 நிமிடங்கள் முதல் 10 நிமிடம் வரை முல்லைத்தீவிலிருந்து வரும் பயணிகளுக்காக தரித்து நிற்பதை வாடிக்கை கொணடிருப்பதால் தமது அலுவலக நேரம் பாதிககப்படுவதாக அரச அலுவலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அலுவலக நாள்களில் காலை நேரத்தில் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் இவ்விதம் நிற்பதை வழக்கமாகக் கொண்டிருப்பதால் அலுவலக நேர ஒழுங்கில் பாதிப புறுவதாகவும் குறுகிய நேர விடுமுறையை , அரைநாள் விடுமுறையை பல நாள்கள் எடுக்க வேண்டியிருப்பதாகவும் இதனால் தாம் பாதிப்புறுவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர். (90)

# பொதுமையவாடிக்கு சுற்றுமதில் அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தில் அமைந்துள்ள பழைமை வாய்ந்த பொதுமையவாடிக்கு சுற்றுமதில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கைக்கு யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத் தலைவரும் சமூக சேவகருமான கே.எம் நிலாம் தலைமை தாங்கியதுடன் நிகழ்வில் மௌலவிகள், பள்ளிவாசல் நிர்வாகிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

முதலில் சுற்றுமதிலுக்கான அடிக்கல்லினை ஈ.பி.டி.பி கட்சியின் யாழ். மாநகர சபை உறுப்பினர சரபுல் அனாம் நாட்டி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து ஏனையோர் சுற்றுமதிலுக்கான அடிக்கல்லினை நட்டனர்.

கடந்த காலங்களில் இப்பிரதேசத்தில் ஏற்பட்டிருந்த யுத்தத்தினால் சுற்றுமதில்கள் சிதைவடைந்து காணப்பட்டதுடன் மையவாடி பற்றைக் காடாக காட்சியளித்தது.



இதனை அண்மையில் பொதுமக்கள இராணுவத்தினர் இணைந்து துப்புரவு செய்தமை குறிப்பிடத்தக்கது. (105)

# எழுபத்துமூன்று வயது மூதாட்டி முதியோர் இல்லத்தில் இணைப்பு

(திருநெல்வேலி)

தனது கணவனுடன் ஒரு வீட்டின் குளியலறைக்குள் பல ஆண்டுகளாக வசித்து வந்த 73 வயதுடைய முதிய பெண்மணி ஒருவர் கணவன் இறந்த நிலையில் கைதடி அரச முதியோர் இல்லத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இணைக்கப்பட்டார்.

கறுப்பையா மணிமலர் என்னும் இம்மாது சாவகச்சேரி, நுணாவில் கிழக்கைச் சேர்ந்தவர் இவருக்குப்பிள்ளைகள் இல்லை. பல ஆண்டுகளுக்கு முன்னர் மலையகத்திலிருந்து ஒரு வீட்டில் வேலை செய்வதற்காகக் கணவனும் மனைவியுமாக வீட்டுக்காரர்களினால் அழைத்து வரப்பட்டிருந்தனர். வீட்டுக்காரர்கள் நாட்டில் இருந்த காலத்தில் அவர்களது சீவியமும் சுமுகமாகப் போய்க்கொண்டிருந்தது.

ஆனால் திடீரென்று வீட்டுக்காரர்கள் வெளிநாடு சென்றுவிட்டதினால் இவ் வயோதிபத்தம்பதிகள் நிர்க்கதியாக விடப்பட்டார்கள். பிச்சை எடுத்தும் அங்கும் இங்கும் அலைந்தும் சீவியம் நடாத்திக் கொண்டிருந்தார்கள்.

இந்நிலையில் இவர்கள் தங்கியிருந்த வீடு 1986 ஆம் ஆண்டு குண்டுவீச்சுக்கு இலக்காகியது. குளியலறை மட்டும் எஞ்சியதினால் இவ் வயோதிபர்கள் இருவரும் அதற்குள்ளேயே தங்கி வாழ்ந்து வந்தனர்.

அப்பகுதியைச்சேர்ந்த அன்பர் ஒருவர் அடிக்கடி இவர்களுக்கு தேவையான உதவிகளை செய்ததுடன் அவர்களின் நலன்களிலும் மிகவும் அக்கறையுள்ளவராக இருந்தார்.

ஒருநாள் உணவும் தேநீரும் இருவருக்கும் அன்பர் கொண்டு சென்ற போது கணவன் நித்திரையாக உள்ளார். மறுநாளும் உணவுடன் சென்ற போது அவர் இன்னும் நித்தியரையால் எழும்பவில்லை நித்திரை கொள்கிறார். என மனைவி கூறினார்.

இ[illegible]நும் குளியலறையிலிருந்து துர்நாற்றம் ஒன்று [illegible]சுவதை உணர்ந்த அந்த அன்பர் குளியலறைக்குள் சென்று பார்த்தபோது அவ் வயோதிபர் இறந்து கிடப்பதைக் கண்டு அயலவர்களின் உதவியோடு அவரது இறுதிக்கிரியைகளை அவர் செய்து முடித்தார்.

கணவர் இறந்த பின்னர் அவரது வயோதிப மனைவி தனித்துப்போனதை அவதானித்த அன்பர் அப்பகுதிக் கிராம சேவையாளரைத் தொடர்பு கொண்டு முதிய பெண்மணியை கைதடி அரச முதியோர் இல்லத்திற்கு அழைத்து வந்து இணைத்து விட்டமை குறிப்பிடத்தக்கது. (137)

# பதிவிறக்கப் பெட்டகம்

**பொலீஸ்:** ஏனையா, திருடன் திருட வரும்போது உங்கள வீட்டிலே கத்தி கூச்சல் போடேல்லையா?
**புகார் தர வந்தவர்:** எங்கள் வீட்டிலே கத்தி எல்லாம் கூச்சல் போடாது சேர்... நாங்கள்தான் கூச்சல் போடுவோம்...

*** *** *** ***

**தந்தை:** ஏன்ரா தோட்டத்துச் செடிகளுக்கு தண்ணி ஊத்தச் சொன்னேனே?
**மகன்:** மழை பெய்யுதேப்பா.
**தந்தை:** பரவாயில்லை. குடையை எடுத்திட்டுப் போய் தண்ணி ஊத்து.

*** *** *** ***

“அந்தக் குழந்தையைப் பார், அம்மாவை மம்மி என்று கூப்பிடாமல் அம்மி என்று கூப்பிடுது?”
“சின்னக் குழவிதானே அது! அதுதான் அம்மி என்று கூப்பிடுது!”

*** *** *** ***

“ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்று இப்போ தெரிந்து கொண்டேன்”
“எப்படி?”
“என் மனைவியை நான் ஆசைப்பட்டுத்தானே கல்யாணம் பண்ணிக்கொண்டேன்”

*** *** *** ***

“ஞாபக மறதிப் போட்டியில் கலந்துகொண்டவர், என்ன சொன னார் என்று முதல் பரிசு கொடுத்திருக்கிறார்கள்?”
“என்ன போட்டி இது’ என்று கேட்டாராம்...!”

*** *** *** ***

“அவன் ஏன் தினமும் வேலை செய்யும் இடத்திலே விழுந்தெழும்புறான்..?”
“விழுந்து விழுந்து வேலை செய்தால்தான் நல்ல பேர் வாங்கலாம் என்று யாரோ சொன்னார்களாம்...”

*** *** *** ***

**ஒருவர்:**ஹ்ம் என் மகன் குண்டுச்சட்டியிலே குதிரை ஓட்டுகிறான்..!
**நண்பர்:** அதிசயமா இருக்குதே! என் மகனுக்கும் அதைக் கற்றுக்கொடுக்கச் சொல்லுங்கள் ப்ளீஸ்...

*** *** *** ***

“நான் இம்முறை கதிர்காமக் கந்தனிடம் கால்நடையாகவே போகலாம் என்றிருக்கிறேன்!”
“கோயிலுக்குப் போகும்போதாவது மனுஷனாகப் போகப் பாரப்பா...”

*** *** *** ***

இவர்கள் எல்லோரும் கூண்டோடு நம் கட்சிக்கு வந்துவிட்டார்கள், தலைவரே..!
அதெல்லாம் சரி, அந்தக் கூண்டு எங்கே?

*** *** *** ***

“மிஸ்டர் கபாலி, இது கோர்ட் இங்கே “கண்டதை’ எல்லாம் பேசக் கூடாது”
“அப்ப பொய் சொல்லச் சொல்றீங்களா எசமான்?”

*** *** *** ***

என்னுடைய ஒரே லட்சியம் பெரிய எழுத்தாளராக வரோணும என்டதுதான்...
சரி, அதுக்காக எழுத்தை இவ்வளவு பெரிசாகவா எழுதுறது?

*** *** *** ***

“டாக்டர் உடம்பு முழுக்க ஒரே வலியாக இருக்கு”
“எங்கெங்கு வலிக்கிறது?”
“கழுத்து வலி, தோள் வலி, கை வலி, இடுப்பு வலி, கால் வலி, மூட்டு வலி எல்லா இடங்களிலும் வலி இருக்கு”
“அப்ப உங்களுக்கு இருப்பது ஒரே வலி இல்லே... பல வலி”

*** *** *** ***

“எங்கள் ஊரில் பலாப்பழம் சீப்பாய் கிடைக்கும்”
“ஆச்சரியமாய் இருக்கே, எங்கள் ஊரில் வாழைப்பழம்தான் சீப்பாய் கிடைக்கும், பலாப்பழம் சுளையாத்தான் கிடைக்கும்”

*** *** *** ***

“வாழ்க்கையில் நாம் தப்பு பண்ணிவிட்டால்... கண்ணை மூடி பத்து நிமிஷம் யோசிக்கவேண்டும்...”
“சரி.”
“அப்பத்தான், யார் மேலே பழியைப் போடலாம் என்று மனசு சொல்லும்!”

*** *** *** ***

**ஜோதிடர்:** கணவன், மனைவி நீங்கள் இரண்டு பேரும் கடைசி வரை சேர்ந்து நல்லா இருப்பீர்கள்......
**மனைவி:** இதுக்கு பரிகாரமே இல்லையா, ஜோதிடரே..

# குரோதத்தை அனைவரும் துறந்து நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்

## ஜனாதிபதி



(கொழும்பு)

வைராக்கியம், குரோதம் ஆகியவற்றை துறந்து அனைவரும் இணைந்து வேலை செய்யும் நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புதிதாக அமைக்கப்பட்ட வெல்லம்பிட்டிய - ஸ்ரீ விமலாராம விஹாரை மற்றும் அறநெறிப் பாடசாலைக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைக்கும் நிகழ்வில் கடந்த தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வுக்கு வருகை தந்த ஜனாதிபதியை, கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்தசில்வா வரவேற்றார். இந்த நிகழ்வில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பிரதேச மக்கள் பலரும் பங்குகொண்டனர்.

விஹாரைக்கு வருகை தந்த ஜனாதிபதி முதலில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.பின்னர் புதிதாக அமைக்கப்பட்ட கட்டட தொகுதியை ஜனாதிபதி திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் மல்வத்த மாஹாநாயக்கர் நியன்கொட விஜிதசிறி தேரர் உள்ளிட்ட மஹா சங்கத்தினர் பங்கு கொண்டனர்.

இதன்போது உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ சகல மதங்களுக்கும் ஏற்றுக் கொள்ளும் புதிய யுகத்தை நாட்டில் உருவாக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.பின்னர் ஜனாதிபதி வெல்லம்பிட்டிய - ஸ்ரீ விமலாராம விஹாரையின் விஹாராதிபதி லபுதலே சுதஸ்சன தேரரிடம் ஆசி பெற்றுக் கொண்டார்.

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்த சில்வாவினால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவுக்கு இதன்போது நினைவுச் சின்னம் ஒன்றைப் பரிசளித்தார்.

# முழுமையான விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தாக்கப்பட்டமை மற்றும் அவரது காருக்குத் தீ மூட்டி எரித்த சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை செய்யுமாறு பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்திற்குப் பின்னால் இருப்பது அரசியல்வாதி சந்தேகம் என்று பாதிக்கப்பட்டவர் அளித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி இந்தச் சம்பவம் தொடர்பாக கூட்டுறவு பிரதியமைச்சரிடம் கேட்டறிந்துள்ளார்.

# வர்த்தகர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

மொனராகலையில் வர்த்தகர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

பிரசவத்தை அடுத்து உறவினர் ஒருவர் வீட்டில் தங்கியுள்ள மனைவியை பார்ப்பதற்குச் சென்று மோட்டார் சைககிளில் வீடுதிரும்பிய போது குறித்த வர்த்தகர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் நேற்றுமுன்தினம் 9.30 மணியாளவில் வர்த்தகர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

# சிறுபான்மையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டு பறிக்கப்படுகின்றது!

## என்கிறார் ஹக்கீம்



(கொழும்பு)

சிறுபான்மையினருக்கு ஒரு கையில் அதிகாரம் வழங்கப்பட்டு மறுகையில் பறிக்கப்படுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்களாக முன்னாள் படையதிகாரிகள் நியமிக்கப்படுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கண்டி யட்டிநுவர பிரதேசத்தில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தெற்கில் சிவிலியன்கள் ஆளுநராக நியமிக்கப்படும் அதேவேளை, வடக்கு கிழக்கில் மட்டும் முன்னாள் படையதிகாரிகள் ஏன் ஆளுநர்களாக நியமிக்கப்படுகின்றார்கள் என்பது புரியவில்லை என ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மை சமூகத்திற்கு ஒரு கையில் மாகாணசபை அதிகாரங்களை வழங்கி மறுகையில் அந்த அதிகாரங்களை பறித்தெடுக்கும் செயன்முறையாக தாம் இதனை நோக்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கில் முன்னாள் படையதிகாரிகள் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு குறித்த மாகாணசபைகளினது முதலமைச்சர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடு நிலவி வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனினும், ஏனைய மாகாணங்களில் இவ்வாறான பிரச்சினைகள் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். அமைச்சரவை அமர்வுகளை புறக்கணிக்கப் போவதில்லை எனவும், தமது கருத்துக்களை அமைச்சரவையில் பகிரங்கமாக தெரிவி[illegible] விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 13 ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அதிகாரங்கள் குறைக்கப் படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என ஹக்கீம் சுட்டிக் காட்டியுள்ளார்.

# சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வருடம் மே மாத காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது, இந்த ஆண்டு மே மாதத்தில் இலங்கைக்கான சுற்றுலாப பயணிகளின் வருகை 20.3 சத வீத அதிகரிப்பை வெளிப்படுத்தி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தொடர்ந்து 61 ஆவது மாதமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு வெளிப்படுத்தி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் இந்தத் தொடர் அதிகரிப்பு பதிவாகியுள்ளது. கடந்த வருடம் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைத் தந்த ஆண்டாக பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் சீரற்ற காலநிலையால் 25, 541 குடும்பங்கள் பாதிப்பு

(கொழும்பு)

சீரற்ற காலநிலையினால் நாடுமுழுவதிலும் இதுவரை 25,541 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவிக்கின்றது.

தெற்கு, மேல், சப்ரகமுவை மற்றும் வடமேல் ஆகிய மாகாணங்களில் 25,541 குடும்பங்களைச் சேர்ந்த 1,04525 பேர் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். இந்த மாகாணங்களில் 26 உயிர் இழப்புகள் இடம்பெற்றுள்ளன. ஒருவர் காணமற் போயுள்ளார்.

9 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அறிவிக்கப்படுகின்றது. வெள்ளம் மண்சரிவு சூறாவளி மற்றும் மின்னல் தாக்குதல் போன்ற காரணங்களினாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை வெள்ளம் மண்சரிவு காரணமாக 1851 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அதில் 294 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன எனவும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்றுமுன்தினம் பகல் 12.00 மணிக்கு வெளியிட்டுள்ள நாளாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வல்லப்பட்டைகளுடன் பயணித்த இந்தியர் உட்பட அறுவர் கைது

(கொழும்பு)

ஒரு தொகை வல்லப்பட்டைகளுடன் வாகனத்தில் பயணித்த இந்திய பிரஜை உள்ளிட்ட அறுவர் பேருவில - மருதானை பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பேருவளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போதே இவர்கள் கைதாகியுள்ளனர். சந்தேகநபர்கள் வசமிருந்து மூன்று கிலோகிராம் 200 கிராம் வல்லப்பட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவர்கள் நேற்று களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

# தேசிய சுதந்திர முன்னணி தெளிவுபடுத்த கோரிக்கை



(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியில் இருந்து விலகி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொண்ட தமது கட்சி உறுப்பினர் சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையை பெற்றுக்கொண்டாரா என்பது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் எம். முஸம்மில் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் தமது கட்சியால் அரசாங்கத்திற்கு முன்வைக்கப்பட்ட யோசனைகளை இதனூடாக அரசாங்கம் புறந்தள்ள எத்தனிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# ரூபவாஹினிக்கு 12 விருதுகள்

(கொழும்பு)


சிறந்த தேசிய தொலைக்காட்சி என்ற பெயரை தன தாக்கிக்கொண்ட ரூபவாஹினி 12 விருதுகளை தட்டிச்சென்றுள்ளது.

நேற்று முன்தினம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற றைகம் விருது விழாவிலேயே ரூபவாஹினி தேசிய தொலைக்காட்சிச் சேவையானது இந நாமத்தையும் விருதுகளையும் தனதாக்கிக்கொண்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு சிறந்த சிறுவர் கல்வி நிகழ்ச்சிக்கான விருது ரங்க பண்டாரநாயக்க இயக்கிய அத்துல ரனசிறிலால் என்ற நாடகத்திற்கும் சிறந்த இசை நிகழ்ச்சிக்கான விருது

ஷிரான் ரத்னகார இயக்கிய மிஹி மண்டலே என்ற நிகழ்ச்சிக்கும் சிறந்த தொலைக்காட்சி நாடகத்திற்கான விருது ரன்சிறிலால் இயக்கிய அபீத்ததியனிய நாடகத்திற்கும் சிறந்த பெட்டக நிகழ்ச்சி சந்தன செனவிரத்ன இயக்கிய நிகழ்ச்சிக்கும் கிடைத்துள்ளது.

☛ பின்வரும் குறியீடுகளை குறிக்கும் சொற்களை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.



21. ..............................
22. ..............................
23. ..............................
24. ..............................
25. ..............................

☛ அடுத்துவரும் இலக்கங்களைத் தருகின்ற சரியான விடையின் கீழ்க் கோடிடுக.


26. 5, 3.5, 7, 4.5, 9, ..........
1. 5.5 2. 11 3. 6 4. 2

27. 3, 5, 8, 12, 17 ..........
1. 22 2. 18 3. 23 4. 15

28. 0.8, 0.2, 1.1, 0.6, .................. எனும் தொடரில் எண்களை ஏறுவரிசைப்படுத்தினால்
1. 0.2, 0.6, 0.8, 1.1 2. 0.2, 0.8, 0.6, 1.1
3. 1.1, 0.8, 0.2, 0.6 4. 0.2, 0.6, 1.1, 0.8

29. என்னிடம் 10 நாணயங்கள் உண்டு தம்பியிடம் என்னைவிட 2 மடங்கு நாணயங்கள் உள்ளன. எனில் தம்பியிடம் உள்ள நாணயங்களின் எண்ணிக்கை
1. 20 2. 08 3. 18 4. ஒன்றுமில்லை

☛ கீழே தரப்பட்டுள்ள குறுக்கெழுத்துக் கட்டங்களை தரப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கமைய நிரப்புக.




**இடமிருந்து வலம்**
30) i. Monkey எனும் ஆங்கிலப்பதம் குறிக்கும் மிருகம்
31) ii. முதல் எழுத்து பதத்தில் உண்டு பாதத்தில் இல்லை. இரண்டாம் எழுத்து மணத்தில் உண்டு மனத்தில் இல்லை. மூன்றாம் எழுத்து கம்பியில் உண்டு. கப்பியில் இல்லை.
32) iii. பனையிலிருந்து பெறப்படும் பானம்.

**மேலிருந்து கீழ்**
33) iv. தண்ணீரையும் பாலையும் கலந்து வைத்தால் பாலைமட்டும் பிரித்து குடிக்கும் பறவை
34) v. கட்டையான மனிதரை இவ்வாறும் அழைப்பர்.

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



☛ வினா எண் (01) முதல் (20) வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகச்சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ்க் கோடிடுக.

1) மலையும் மலைசார்ந்த இடமும்
1. குறிஞ்சி 2. மருதம் 3. முல்லை 4. நெய்தல்

2) ஒரே நேரத்தில் நூறு விடயங்களை அவதானித்துக் கூறுபவர்?
1. தசாவதானி 2. சதாவதானி 3. அட்டாவதானி 4. கருணாநிதி

3) "ஆழமறியாமல் காலை விடாதே" எனும் பழமொழி குறிக்கும் கருத்து
1. ஆழத்தை அளந்து காலைவிடு 2. எதையும் ஆராய்ந்து செய்
3. கடலுக்குள் காலைவிடாதே 4. ஆழமான இடத்திற்கு செல்லாதே

4) பின்வரும் கணிதச் செய்கையில் தரப்பட்டுள்ள கூட்டிற்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய மற்றொரு கூட்டை தெரிவு செய்க: $\boxed{7+2} + 12 = 21$
1. $\boxed{5+7}$ 2. $\boxed{7+10}$ 3. $\boxed{6+3}$ 4. $\boxed{9+2}$

5) ஒரு மரத்தில் 5 காகங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்றை நோக்கி ஒருவன் சுட்டான் மீதி எத்தனை?
1. 4 2. 2 3. ஒன்றுமில்லை 4. 5

6) ஆசிரியருக்கு மாணவர் என்பது போல வைத்தியருக்கு
1. தாதி 2. நோய்வாய்ப்பட்டவர் 3. தனியாள் 4. கங்காணி

7) பின்வரும் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களின் ஒழுங்கைத் தெரிக.

கடல், வானம், பாடசாலை

| i. | ii. | iii. | iv. |
|---|---|---|---|
| Sky | Sea | Sea | See |
| Sea | School | Sky | Sky |
| School | Sky | School | School |

8) இப்பாடலில் மிகச் சிறப்பாக விபரிக்கப்பட்டுள்ளது எது?

1. ஏழைகளின் அப்பிளாம்
சுவைநிறைந்த பழமிதாம்
சத்துக்கள் நிறைந்ததாம்
எல்லாக்காலமும் கிடைக்குமாம்

1. அப்பிள் 2. வாழைப்பழம் 3. அன்னாசி 4. தோடம்பழம்

9. VIN என்பது PBC எனவும்
VON என்பது PQC எனவும் எழுதப்படுமானால்
ION எவ்வாறு எழுதப்படும்

1. PQC 2. AOC 3. BQC 4. CBC

☛ சரியான விடையின் கீழ் கோடிடுக.

10. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சண்முகேசன் கோயிலுக்குப் போவான். சண்முகேசன் நேற்று முன்தினம் கோயிலுக்குப் போயிருந்தால் நாளை மறுதினம் என்னகிழமை.

1. திங்கள் 2. ஞாயிறு 3. சனி 4. செவ்வாய்


11. விளையாட்டு மைதானம் ஒன்றில் நேர்வரிசையில் கலர்கலராக கம்பம் நடப்பட்டுள்ளது. அதில் முதலில் சிவப்பும் அடுத்து மஞ்சளும் அதற்கடுத்ததாக பச்சை என நாட்டப்பட்டுள்ளது. 25வது கொடியின் நிறம் யாது?

1. சிவப்பு 2. கூறமுடியாது 3. மஞ்சள் 4. பச்சை

12. 1Kg மாஜரின் விலை 160ரூபா எனின், 100g மாஜரினின் விலை யாது?

1. 12 /= 2. 60/= 3. 16/= 4. 7/=

13. பின்வரும் உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை பின்னத்தில் காட்டும் சரியான விடை




1. $^{2}/_{16}$ 2. $^{4}/_{8}$
3. $^{6}/_{13}$ 4. $^{2}/_{8}$

14. $^{4}/_{10}$ என்பதற்குச் சமனாக நிழற்றப்பட்ட உரு





15. மணிக்கூடு முகத்தில் 2மணி 29 நிமிடத்தை சரியாக காட்டும் மணிக்கூடு







16) வெற்றிடத்திற்கு பொருத்தமான உருவைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.




17)




18) அடுத்துவரும் பெட்டியினுள் இடவேண்டிய இலக்கம்





1. 7 2. 10 3. 11 4. 5

19) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் எழுத்துக்குறைபாடுகள் உள்ள வாக்கியத்தை தெரிவு செய்

1. ஒரே நேரத்தில் பத்து விடயங்களை அவதானிப்பவர் தசாவதானி
2. நாற்றுக்கள் நன்றாக செழித்து வளருகின்றன.
3. விவசாயி வயலை உளுகிறான்.

1. முயற்சி திருவினையாக்கும்
2. ஆறினகஞ்சி பலங்கஞ்சி
3. ஆழமறியாமல் காலைவிடாதே

20) பின்வரும் ஒவ்வொரு எழுத்திற்கும் பின்னால் இருக்கும் குறியீட்டை அவதானிக்குக.



# வடகடல் நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வு



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான வடகடல் நிறுவனத்தின் வலை உற்பத்தி தொழிற்சாலைகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்றிட்டங்கள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் பணிப்புரைகளை வழங்கியுள்ளார்.

இதன் பிரகாரம் தொழிற்சாலைகளின் உற்பத்தி விகிதத்தை அதிகரிப்பது, தரத்தைப் பேணுவது சந்தைப்படுத்தல் துறையை மேலும் விஸ்தரிப்பது போன்ற விடயங்கள் தொடர்பில் அவர் பல்வேறு ஆலோசனைகளை முன்வைத்ததுடன், எதிர்வரும் இருவாரங்களில் குருநகர், லுணுவில வீரவில, ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள மூன்று தொழிற்சாலைகளினதும் உற்பத்தி விகிதம் அதிகரிக்கப்படல் வேண்டுமெனப் பணித்துள்ளார்.

நேற்று முன்தினம் மருதானையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சரின் ஆலோசகர் திருமதி வீ. ஜெகராஜசிங்கம், வடகடல் நிறுவனத்தின் பதில் தலைவர் திசவீரசிங்கம் உட்பட நிறுவன அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# சிங்களமொழி தெரியாமையால் சிரமத்துக்குள்ளாகும் நோயாளர்கள்

(கிளிநொச்சி)

முழங்காவில் மாவட்ட வைத்தியசாலையில் கடமை புரியும் 3 மருத்துவர்களில் இருவர் சிங்களமொழி பேசும் மருத்துவர்கள் ஆகையால் நோயாளர்கள் தமது நோய் குறித்து தெளிவாக விளங்கப்படுத்தி சிகிச்சை பெறுவதில் மிகவும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

தமிழ் பேச எழுத வாசிக்கத் தெரியாத மருத்துவர்களுடன் சைகை பாசையில் தான் தமது தேவைகள் குறித்து கூற வேண்டிள்ளதாக பொதுமக்கள் கூறுகின்றனர்.

இதனால் தமிழ்மொழி மருத்துவர்களை நியமிக்க கிளிநொச்சி மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரை கோருவதாக இப் பிரதேச பொது அமைப்புக்கள் தீர்மானித்துள்ளதாக அறிய வருகிறது.

தமது மருத்துவ தேவைகளுக்கு முழங்காவில் அரச மருத்துவமனையை பெருமளவில் நம்பியிருக்கும் வசதி குறைந்த இப்பிரதேச மக்களின் தேவையை உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர். (90)

# யாழில் கம்பன் விழா 3 நாட்கள் நடாத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும் கம்பன் விழா எதிர்வரும் 13 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை 3 தினங்கள் காலை மாலை அமரவுகளாக நடைபெறவுள்ளது.

காலை அமர்வுகள் கம்பன் கோட்டம் நல்லூரிலும், மாலை அமர்வுகள் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டத்திலும் இடம் பெறவுள்ளது.

13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கே.ஆர்.சுந்தரமூர்த்தி குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும் நிகழ்வில் ஆசியுரைகளினை நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தென்னிந்திய திருச்சபை முன்னாள் பேராயர் அதிவண கலாநிதி எஸ்.ஜெபநேசன், மௌலவி எஸ்.அப்துல் கமத் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தலைமையுரையினை வட மாகாணசபை அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தொடக்கவுரையினை கொழும்பு கம்பன் கழகத் தலைவர் ஜெ.விஸ்வநாதன் ஆகியோர் நிகழ்த்துவர்.

கம்பநாடகக் கீர்த்தனை - 2013 கம்பன் கழக விழா இறுவட்டு வெளியீடும, அமரர் விதது வான் சி.ஆறுமுகம் நினைவுக் கவிதைப் போட்டி, அமரர் தேவன் நினைவுப்பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெறும்.

இலக்கிய ஆணைக்குழுவில் ஆணையாளர் புலவர் ம.இராமலிங்கம் பொருள் தேசம் காத்த தேவி எனும் விருதுக்குப் பெரிதும பொருத்தமானவள் கோசலையே என்னும் விடயத்தில் ரி.ரெங்கராஜா, சுமித்திரையே என்னும் விடயத்தில் வி.அசோக்குமாரன், தாரையே என்னும் விடயத்தில் இ.ஜெயராஜ் ஆகியோர் வாதிடுவார்கள்.

14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாம் நாள் நிகழ்வில் தலைமையுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வே.கணபதிப்பிள்ளை, தொடக்கவுரையை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு .திருமுருகன் ஆகியோர் வழங்கவுள்ளனர். தொடர்ந்து கல்லநிகழ்வு இடம்பெறவுள்ளது.

மாலை நிகழ்வில் தலைமையுரையை யாழ். மாநகர மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா, தொடக்கவுரையை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் ஆகியோர் வழங்குவர். கம்பவாரிதி இ.ஜெயராஜின் தலைமையில் சிறப்புப் பட்டிமன்றம் இடம் பெறவுள்ளது.

15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஆரம்பமாகும் 3 ஆம் நாள் நிகழ்வில் தொடக்கவுரையை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை, தலைமையுரையை பேராசிரியர் ம.சின்னத்தம்பி ஆகியோர் வழங்குவர்.

தொடாந்து கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. மாலை அமர்வில் தலைமையுரையை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுநதரம் அருமைநாயகம், தொடக்கவுரை அமைச்சர் டக்ளஸ் வோனந்தா ஆகியோர் வழங்குவார்கள். தொடர்ந்து வழக்காடு மன்றம் இடம்பெறவுள்ளது. (63)

# தேவரையாளி வீதியை புனரமைக்க கோரிக்கை

(கரணவாய்)

கரணவாய் தேவரையாளி வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாக காணப்படுவதால் இதனூடாக போக்குவரத்தை மேற்கொள்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

40 வருடங்களுக்கு மேலாக இவ்வீதி திருத்தப்படாத நிலையில காணப்படுவதுடன் இவ்வீதியில் தேவரையாளி சனசமூக நிலையம், நரசிம்மன் கதிர்காமர் ஆலயம் என்பன அமைந்துள்ள நிலையில் நாளாந்தம் இதனூடாக பல மக்கள் போக்குவரத்தை மேற்கொள்வதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்நிலையில் இவ்வீதி திருத தப்படாமல் இருப்பதால் பாதசாரிகளும், துவிச்சக்கரவண்டிகளில் செல்வோரும் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குவதாகவும் குறிப்பாக விபத்துக்களைச் சந்திக்க நேரிடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட குறித்த வீதியை கிராம மக்களின் நலன் கருதி பிரதேசசபை புனரமைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவை முன்னிட்டு நடாத்திய போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா நாளை மறுதினம் முற்பகல் 11.30 மணிக்கு அறநெறிப் பாடசாலை காப்பாளர் கலாநிதி பா.நிமலதாஸன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆசியுரையை 'தேசமானிய' 'பண்டிதர்' கலாநிதி சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக்குருக்கள், வேதாகம கிரிய கலாமணி சிவஸ்ரீ இரத்தின வைத்தியநாதக்குருக்கள், அணிந்துரையை நல்லைக் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோ.வரதராஜமூர்த்தி (பிரதிக்கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம்), கௌரவ விருந்தினராக வரணியூர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன், சிறப்பு விருந்தினராக திருமதி சந்திரராஜினி யுகானந்தசிவம் (அபிவிருத்தி உத்தியோகத்தர் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், தென்மராட்சி பிரதேச செயலகம்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ)

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................

பிறந்த ஆண்டு :- ........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும் ............................

பெற்றோர் கையொப்பம்




யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி ஆசிரியர் திருமதி நஸ்பியா அஜீதின் "கண்ணீர்ப் பூக்கள்" நூல் வெளியீட்டு விழா அண்மையில் கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நூலாசிரியர் உரையாற்றுவதையும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் வே.கணபதிப்பிள்ளை, கலைஞர் எம்.எப்.லாபீருக்கு முதற்பிரதியையும், கல்லூரி பிரதி அதிபர், யாழ். பிரதேச செயலர் சுகுணரதி தெய்வேந்திரத்திற்கு சிறப்பு பிரதியையும் வழங்குவதைக் காணலாம். (105)

# கராச்சி விமான நிலையத்தில் தீவிரவாதிகள் தாக்குதல்

## 23 பேர் பலி





(கராச்சி)


பாகிஸ்தானில் உள்ள கராச்சி ஜின்னா சர்வதேச விமான நிலையத்தில் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் பயங்கர தாக்குதலில் ஈடு பட்டனர். விமான நிலையத்தில் 15இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் புகுந்து துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டனர். பாதுகாப்பு வீரர்களை போன்று உடை அணிந்துவந்த தீவிரவாதிகள் கொடூரத்தாக்குல் நடத்தினர். ஜின்னா சர்வதேச விமான நிலையத்தின் பழைய முனையத்தை கைப் பற்றி தாக்குதல் நடத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. விமான நிலையத்தில் கையெறி குண்டுகளை வீசியும், துப்பாக்கியால் சுட்டும் தீவிரவாதிகள் வெறியாட்டம நடத்தினர்.

விடியவிடிய நடைபெற்ற கடும் துப்பாக்கிச் சண்டையில் 23பேர் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பாதுகாப்பு படை வீரர்கள் 11 பேர் உயிரிழந்தனர். தீவிரவாதிகள் தாக்குதலையடுத்து கராச்சி விமான நிலையத்தில் அவசர நிலை அமுல் படுத்தப்பட்டுள்ளது. தாக்குதலையடுத்து கராச்சி சர்வதேச விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது. பாகிஸ்தானில் உச்சகட்ட உஷார் நிலை அமுல்படுத்தப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்திய 10 தீவிரவாதிகள் சுட்டு கொல்லப்பட்டுள்ளதாகவும், ஒருவரை பிடித்து விசாரணை நடத்தி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## உலகச் செய்திகள்

# தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர நடவடிக்கை

## மத்திய அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன்



தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது என மத்திய அமைச்சர் பொன்.ராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது,

தமிழக மீனவர்கள் சிறை பிடிக்கப்பட்ட தகவல் கிடைத்ததும் வெளியுறவு துறை மந்திரி சுஷ்மா சுவராஜை தொடர்பு கொண்டு மீட்பதற்கான நடவடிக்கைளை உடனே மேற்கொள்ளும்படி வலியுறுத்தினேன்.

வெளியுறவுதுறை அமைச்சகம் இலங்கை அரசுடன் பேசி வருவதாக சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார்.

தொடரும் இந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க விரைவில் நிரந்தர தீர்வு காண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# மண்டேலா பெயரில் ஐ.நா. விருது

தென்னாபிரிக்காவில், நிற வேற்றுமைக்கு எதிரான போராட்ட வீரரும், அந்நாட்டின் முன்னாள் அதிபருமான நெல்சன் மண்டேலா பெயரில், ஐக்கிய நாடுகள் சபை விருது ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு, டிசம்பர் 5இல், மரணமடைந்த நெல்சன் மண்டேலா, (வயது-95) தென்னாபிரிக்காவில் நீண்ட காலமாக பின்பற்றப்பட்ட நிற வேற்றுமைக்கு எதிராக போராடியவர். இதற்காக அவர், 27 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். விடுதலையான பிறகு, அந்நாட்டின் அதிபரானார். உலக அமைதிக்காகவும், க[illegible]பு இனத்தவர் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்ட அவர் பெயரில், ஐ.நா. அமைப்பு, விருது ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. ஆண்டுதோறும இந்த விருது வழங்கப்பட உள்ளது. இந்த தகவலை, தென் கொரியாவைச் சேர்ந்த, ஐ.நா., பொதுச் செயலர், பான் கீ மூன் தெரிவித்தார்.

# மாயமான விமானத்தைப்பற்றி தகவல் வழங்கினால் சன்மானம்

## உறவினர்கள் அறிவிப்பு



மர்மமான முறையில் காணாமற் போன மலேசிய விமானம் குறித்து தகவல் கொடுப்பவர்களுக்கு 50 இலட்சம் அமெரிக்க டொலர் சன்மானம் வழங்கப்படும் என்று அந்த விமானத்தில் பயணம் செய்தவர்களின் உறவினர்கள் அறிவித்துள்ளனர்.

மாயமான விமானம் குறித்த தகவல்களை மலேசிய அரசு மூடி மறைப்பதாகவும், சன்மானத் தொகை அறிவிப்பதன் மூலம் சிலர் தகவல்களை அளிக்க முன்வரக் கூடும் என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

இதற்கான செலவுத் தொகையை இணையத்தளம் மூலமாக வசூலிப்பதற்கும், அதில் ஒரு தொகையை, விமானம் குறித்து விசாரணை நடாத்தவுள்ள தனியார் புலனாய்வுக் குழுவுக்கு செலவிடவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இதுகுறித்து, இந்தத் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் எத்தான் ஹண்ட் கூறுகையில், விமானத்தைப் பற்றிய தகவல்களை சிலர் தெரிந்து வைத்திருப்பார்கள்.

சன்மானம் அறிவித்திருப்பதன் மூலம் தகவல்களைக் கொடுக்க அவர்கள் முன்வருவார்கள் என்று நம்புகிறோம் என்றார்.

# ஈரான் எல்லையில் தாக்குதல் 23 பேர் ஸ்தலத்தில் பலி

(குவெட்டா)

போராளிகளின் வன்முறைகளாலும், கலவரங்களாலும் அமைதியிழந்து காணப்படும் பாகிஸ்தான், ஈரான் எல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு மீண்டும் ஒரு துப்பாக்கி ஏந்திய தற்கொலைத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. பாகிஸ்தானிலிருந்து ஈரானில் உள்ள புனிதத் தலங்களுக்கு பல யாததிரிகர்கள் கடந்த வாரம் புனிதப்பயணம் மேற் கொண்டனர்.


தங்கள் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் இரவு ஒரு பேருந்தில் அவர்கள் பாகிஸ்தானுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். வரும்வழியில் எல்லைப்பகுதியில் உள்ள டப்டன் என்ற இடத்தில் உள்ள உணவு விடுதி ஒன்றில் அந்தப் பேருந்து நிறுத்தப்பட்டது.



அப்போது துப்பாக்கி ஏந்தி வந்த தற்கொலைப் படையினர் அந்த யாத்திரிகர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டனர். இந்த சம்பவத்தில் ஷியா பிரிவு பக்தர்கள் உட்பட 23 பேர் பலியானதாகவும், ஏழு பேர் காயமடைந்ததாகவும் செய்திகள் வெளியாகியுஉள்ளன.

# மத்திய அரசின் நோக்கம் வறுமையை ஒழிப்பதாகும்

## இந்திய ஜனாதிபதி பிரணாப் தெரிவிப்பு



(டில்லி)

இந்தியாவில் வறுமையை குறைப்பதை இலக்காகக் கொண்டு புதிய அரசு செயற்படும். அனைவருக்கும் உணவு கிடைப்பதை மத்திய அரசு உறுதி செய்யும் என குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.


நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டம் நேற்று காலை தொடங்கியது. இதில் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி உரையாற்றினார்.

அப்போது, புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசுக்கு பிரணாப் முகர்ஜி தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். மக்களவைத் தலைவராக பொறுப்பேற்றுள்ள சுமித்ரா மகாஜனுக்கும் குடியரசுத் தலைவர் வாழ்த்து தெரிவித்தார்.

மேலும், நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் பேசிய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, நடந்து முடிந்துள்ள தேர்தல் ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை உறுதி செய்கிறது. நிலையான அரசு அமைய வேண்டும் என்பதற்காக மக்கள் வாக்களித்துள்ளனர். சிறப்பான முறையில் தேர்தலை நடாத்தி முடித்த தேர்தல் ஆணையத்துக்கு எனது பாராட்டுக்கள்.

அனைத்து வாக்குறுதிகளையும் புதிய அரசு திறம்பட செய்து முடிக்கும். வறுமையைக் குறைப்பதை இலக்காக கொண்டு மத்தியில் அமைந்துள்ள அரசு செயற்படும். அனைவருக்கும் உணவு கிடைப்பதை உறுதி செய்யும். வேளாண்மைத் துறையில் முதலீட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# கருணாநிதி-ரஜனி சந்திப்பு



தி.மு.க., தலைவர் கருணாநிதியை, அவரது, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று முன்தினம் நடிகர் ரஜினி, திடீரென சந்தித்து பேசினார்.

கருணாநிதியைச் சந்தித்தபின் வெளியே வந்த ரஜினி, நிருபர்களிடம், கருணாநிதியின் பிறந்த நாளில், நான் ஹைதராபாத் படப்பிடிப்பில் இருந்தேன். அதனால், அவரை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவிக்க முடியவில்லை. எனவே, இப்போது சந்தித்து, வாழ்த்து தெரிவித்தேன். "கோச்சடையான்" திரைப் படத்தை பார்க்க வருமாறும் கேட்டுக் கொண்டேன். என்றார்.

கருணாநிதி, ரஜினி சந்திப்பு குறித்து, கட்சி வட்டாரங்கள் கூறியதாவது, ரஜினியை பொறுத்த வரையில், தன் வேலை உண்டு தான் உண்டு என்று தான் இருப்பார். அடுத்தவர்களின் பிரச்சினையில் தேவையில்லாமல் தலையிட மாட்டார். அரசியலை பொறுத்த வரையில், அனைத்து கட்சி தலைவர்களிடமும் சுமூகமாக இருக்கத்தான் விரும்புவார்.என தெரிவிக்கப்படுகிறது.

# நகரமயமாக்கலினால் சீர்கெடும் சுகாதாரம்; மலசலகூடம் அமைப்பதற்கு நிதி உதவி

## வலி.கிழக்கில் உதயன் எம்.பி.நடவடிக்கை



(கோப்பாய்)


எமது பிரதேசத்தில் தற்போது பல்வேறான வகையில் சுகாதாரமானது பேணப்படாத நிலை காணப்படுகின்றது. பொதுவாக நகரமயமாக்கலின் போது சுகாதாரம் பல்வேறான வகைகளில் சீர்குலைகின்றது. அபிவிருத்தியை நோக்கி சென்று கொண்டிருக்கும் எமது பிரதேசங்களில் பொதுமக்கள், அதிகாரிகள் அனைவரும் விழிப்புணர்வுடனும் சமுக அக்கறையுடனும் செயற்படுவதனூடாக எமது பிரதேசங்களில் சுகாதார சீர்கேடு இடம்பெறாமல் பாதுகாத்துக்கொள்ள முடியுமென ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவு மற்றும் பருத்தித்துறை பிரதேசசெயலர் பிரிவுட்குட்பட்ட மலசலகூடம் அற்ற முப்பது பயனாளிகளிற்கு காசோலையினை வழங்கி வைத்த நாடாளுமன்ற உறுப்பினர் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் மேலும் அவர் உரையாற்றுகையில்,

வறிய குடும்பங்கள் மற்றும் அதிக அங்கத்தவர் எண்ணிக்கைகள் ஆகியோரினை கருத்திற்கொண்டு அவர்களிற்கு இவ் உதவித்திட்டமானது வழங்கப்படுகின்றது. இந்நிதியினை சரியான முறையில் பயன்படுத்தி தமது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதனூடாக தன்னிறைவுள்ள ஓர் குடும்ப அலகினை நோக்கிச் செல்வதுடன் எமது பிரதேச சுகாதாரத்தை பேணும் அதை வேளையில் பிள்ளைகள் நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியுமென தெரிவித்தார்.

வலிகிழக்கு பிரதேசசெயலகத்தில் வாழ்வெழுச்சித்திட்டத்தினூாக தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் வலி.கிழக்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் வலி.கிழக்கு ஈ.பி.டி.பி. அமைப்பாளர் ஜங்கரனும் கலந்து கொண்டார்.

# வற்றாப்பளைக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேற்றைய தினம் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு விஜயம் செய்தார்.

ஆலயத்தின் வைகாசி விசாகப் பொங்கல் தினமான நேற்று அங்கு விஜயம் செய்த அமைச்சர் விசேட பூசை வழிபாட்டில் கலந்து கொண்டார்.

பின்னர் அங்கு இராணுவத்தினரால் பாரிய அன்னதானம் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் அதன் நடவடிக்கைகள் தொடர்பில் அப்பகுதி இராணுவ கட்டளைத் தளபதி உட்பட்ட இராணுவ அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டதுடன் அங்குவரும் பக்தர்களின் நலன்கருதி இப்பாரிய செயற்பாட்டினை மேற்கொண்டிருந்த இராணுவத்தினருக்கு எமது மக்கள் சார்பாக தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

ஆலய பரிபாலன சபையின் தலைவர் குகதாசன் உட்பட்ட பிரதிநிதிகளையும் சந்தித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் உட்பட அதன் தேவைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

மீண்டும், வெகுவிரைவில் இவ்வாலயத்திற்கு தான் வருகைதந்து மேற்கொள் ளப்படவுள்ள பணிகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## வடக்கு மாகாண...

கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது மக்களின் பல்வேறு பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக மாகாணசபை இருக்கின்ற நிலையில் அதன் செயற்பாடுகள் இன்று முடக்கப்பட்டுள்ளன. அதனை கைப்பற்றியிருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எமது மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படக் கூடாது என்கின்ற தங்களது சுயலாப அரசியல் இருப்பை நோக்கமாகக் கொண்டு மாகாண சபையை செயற்படுத்தாமல் காலம் கடத்தி வருகின்றனர்.

இது எமது மக்களுக்கு இளைக்கின்ற மாபெரும் துரோகமாகும். மாகாண சபை செயற்பாடுகளுக்கு தடையாக அரசாங்கம் இருக்கின்றது என அவர்கள் கூறி வருகின்ற நிலையில் அதுபற்றி பகிரங்கமான ஒரு விவாதத்தை பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் துறைசார்ந்தோர் முன்பாக நடத்துவதற்கு நாம் தயார் என்றும் அதில் கலந்து கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாரா என்று வினவினார்.

எமது மக்களின் ஒளிமயமான எதிர்காலம் தான் தனது குறிக்கோள் எனத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சகல உரிமைகளையும் பெற்றவர்களாக நல்லதொரு வாழ்க்கையை எமது மக்கள் வாழ்வதற்கான சூழ்நிலையை அமைத்துக் கொடுக்கக் கூடிய நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் அதுவரையில் தனது செயற்பாடுகள் அயராது தொடருமெனத் தெரிவித்தார்.

அரசாங்கத்துடனான சமரசப் போக்கினை முன்வைத்து எமது மக்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியுமென தான் நம்புவதாக வும் இதுவே நடைமுறைச் சாத்தியமான யதார்த்த வழிமுறை என சுட்டிக்காட்டிய அமைச்சர் அரசாங்கத்தை எதிர்த்துக் கொண்டு எமது மக்களின் பிரச்சினைகளை எவ்வகையிலும் தீர்க்க முடியாது எனத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வெறும் வீரவசனங்களை பேசிக் கொண்டிருக்காமல் குறைந்த பட்சம் அவர்கள் வசமுள்ள உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபையின் ஊடாக வேனும் எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வர வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வின் போது மல்லாவி பிரதான வீதி, ஆலயங்கள் புனரமைப்பு மீள்குடியேற்ற உதவிகள், உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அம்மக்களால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இக்கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட அமைச்சர் மக்களது கோரிக்கைகள் விரைவாகவும் படிப்படியாகவும் நிறைவேற்றப்படுமெனத் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் பிரதேச செயலர், அமைச்சரின் முல் லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஜெயராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திருக்கேதீஸ்வரம்...

விசாரணையின் போது சமர்ப்பிக்கப்படவில்லை என சட்டத்தரணி ஜீ.இராஜகுலேந்திரா தெரிவித்துள்ளார்.

திருக்கேதீஸ்வரம் மாந்தை வீதியில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் குடிநீர் குழாய் பொருத்தும் நடவடிக்கையின் போது மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்டது.

பின்னர் நீதவானின் உத்தர விற்கமைய, 32 தினங்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வில் 80 மனித மண்டையோடுகள் உள்ளிட்ட மனித எச்சங்கள் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விதிகளை மீறிய சாரதிகள் தண்டம் விதித்தது நீதிமன்று

மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய இருவருக்குத் தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த நபர்களின் சாரதி அனுமதிப்பத்திரத்தினை 2 வாரங்களுக்குத் தடை செய்யும்படி நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவினை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதவான் மாணிக்கவாசகர் கணேசராசா நேற்றுப் பிறப்பித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு மற்றும் முள்ளியவளை ஆகிய பிரதேசங்களில் கடந்த வாரம் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை, காப்புறுதிப் பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு 4 ஆயிரம் ரூபாவும், காப்புறுதிப் பத்திரம் மற்றும் வரிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு ரூபா 6 ஆயிரம் ரூபாவும், காப்புறுதிப் பத்திரம் மற்றும் வரிப்பத்திரம் இன்றியும், மதுபோதையில் வாகனம் செலுத்திய நபருக்கு 12 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதித்து நீதவான் உத்தரவிட்டார்.

இவர்கள் கடந்த வாரம் புதுக்குடியிருப்புப் பொலிஸாரினால் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 82 இந்திய...

அவர்களை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் எஸ்.லெனின்குமார் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 82 இந்திய மீனவர்களையும் உடன் விடுதலை செய்யுமாறு நேற்று மாலை ஜனாதிபதி அறிவித்ததாக ஜனாதிபதியின் பேச்சாளர் மொகான் சமரநாயக்க தெரிவித்தார்.

மீனவர்களை விடுதலை செய்வது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வலம்புரி...

குறித்த நபரிடம் கடந்த 6 வருடங்களாக வலம்புரிச் சங்கு இருந்துள்ளது. குறித்த வலம்புரிச் சங்கினை யாழ்ப்பாணத்தில் உள்ள கொமர்ஷல் வங்கியின் பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்திருந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன்னர் வங்கியில் இருந்து சங்கினை வீட்டிற்கு எடுத்துச் சென்ற பின்னர் காணி வாங்குவதற்காக காக்கைதீவு பகுதியைச் சேர்ந்த நபர்களிடம் விற்க முயன்ற வேளையிலேயே மானிப்பாய் பொலிஸ் மற்றும் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினர் இணைந்து கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்து வதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்படுமென்றும் பொலிஸார் தெரிவித்தனர். (25)

## விசாரணைக்குழு...

ஜெனிவாவிலுள்ள இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க இலங்கையின் அதிகாரபூர்வ நிலைப்பாடு குறித்து விளக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## மினி பஸ் மீது கல்வீச்சு

யாழ். மல்லாகத்தில் ஒழுங்கையொன்றில் நிறுத்தி வைக்கப்பட்ட தனியார் மினிபஸ் ஒன்றின் மீது இனந்தெரியாதோர் நேற்று முன்தினம் இரவு கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொண்ட நிலையில், அப்பஸ்ஸின் முன்பக்கக் கண்ணாடிகள் சேதமடைந்ததாக தெல்லிப்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம்- மாவிட்டபுரம் வழித்தட சேவையில் ஈடுபடும் மேற்படி மினி பஸ்ஸின் மீதே கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தனிப்பட்ட பிரச்சினையே இக்கல் வீச்சுக்கு காரணமென விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

## பரந்தனில்...

கொடுத்து விட்டு முந்திச் செல்ல முற்பட்டவேளை எதிரே வந்த மற்றைய டிப்பர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டதனாலேயே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பொலிஸார், இவ்விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ்.நகரில்...


ட்ட பேருந்தை யாழ்.பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதுடன், அதன் சாரதியான முழங்காவிலைச் சேர்ந்த தங்கராசா சிவதாஸ் (வயது-28) என்பவரையும் கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (பா,25)

## ஐ.நா...

விளைவாக ஐ.நா. விசாரணைக்குழு இலங்கை வர விண்ணப்பித்தால் அதற்கு அனுமதி வழங்குவீர்களா என்று வினவிய போது, அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் அடுத்து மேற்கொள்ள வேண்டிய தீர்க்கமான நடவடிக்கையை மேற்கொள்வோம் என்று கூறியிருந்தார் என்று குறிப்பிட்டார்.

# இந்திய அரசின் நிதியுதவியில் யாழில் கலாசார நிலையம்

## புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து



பாரம்பரிய கலாசார அடையாளங்களை உள்ளடக்கும் வகையில் மிக நவீன வசதிகளுடன் கூடிய கலை மற்றும் கலாசாரம் தொடர்பான அனுபவங்களை பரிமாறிக் கொள்ளும் வகையிலான கலாசார மத்திய நிலையம் ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ளதாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்திய உதவியான 1.2 பில்லியன் ரூபா செலவில் மூன்று வருடங்களுக்குள் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த கலாசார மத்திய நிலையத்துக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்று கைச்சாத்திடப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், இலங்கையின் சார்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் டொக்டர் நிஹால் ஜயதிலக்க மற்றும் இந்தியாவின் சார்பில் இந்திய உயர் ஸ்தானிகர் வை. கே.சிங்ஹா ஆகியோர் உடன்படிக்கையில கைச்சாத்திட்டுள்ளனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ முன்னிலையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண நூலகத்துக்கு அருகாமையில் யாழ்ப்பாண மாநகர சபைக்கு சொந்தமான காணியில் நிர் மாணிக்கப்படவுள்ள இந்த மத்திய நிலையத்தில் நாட்டிய மேடை மற்றும் மிதக்கும் மேடை என்பன உள்ளடங்கும்.

இதன் மூலம் வட மாகாணத்தின் விசேடமாக யாழ்ப்பாண மக்களின் கலாசார உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தியா கின்ற நிலையில் நாட்டின் ஏனைய மக்களின் கலாசார தொடர்புகள் வலுவடைவதுடன், யாழ்ப்பாணத்தின் பழமை வாய்ந்த கலாசார மரபுரிமைகளும் பேணப்படும்.

யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தின் கேட்போர் கூடத்தில் 600 ஆசனங்கள் அமைக்கப்படவுள்ளதுடன் கலை அரங்கம், இணைய ஆய்வு வசதிகள், நூலகம் பல்மொழி நூலகம் என்பன உள்ளடக்கப்படவுள்ளன.

இலங்கை வாஸ்து சாஸ்திரவியலாளர்கள் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட தேசிய திட்டமிடல் போட்டியில் முன்வைக்கப்பட்ட 29 திட்டங்களிலேயே இந்த மத்திய நிலையத்துக்கான திட்டம் தெரிவு செய்யப்பட்டது. மதுர பிரேமதிலக்க என்பவரே இதனை முன்வைத்திருந்தார்.

யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தின் நிர்மாணப் பணிகள் எதிர்வரும் மாதத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்தியப் பிரதி உயர்ஸ்தானிகர் பி.குமரன், முதல் செயலர் ஜஸ்டின் மொஹான், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகம் அனுராத குமாரசிறி மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் தலைவர் பாஷ்வர குணரட்ன உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## விபத்தில் சிக்கி மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மல்லாகம் 7 ஆம் கட்டைப் பகுதியில் சைக்கிளொன்றுக்கு பின்னால் வேகமாக வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று மோதியதால் படுகாயமடைந்த மூவர் வைத்தியசாலைகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை அனுமதிக்கப்பட்டதாக தெல் லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் படுகாயமடைந்த கந்தரோடையைச் சேர்ந்த இரத் தினசிங்கம் சிவலிங்கராசா (வயது - 64), செல்லத்துரை செல்வராசா (வயது - 48), சுந்தரலிங்கம் சுதர்சன் (வயது 28) ஆகியோர் உடனடியாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் சுந்தரலிங்கம் சுதர்சன் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

குறித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்ததால் இவ்விபத்து இடம் பெற்றதாகவும் பொலிஸார் கூறினர்.

## குடும்ப வன்முறையும் சிறுவர் பாதுகாப்பும்

### கிளாலியில் செயமர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டச் செயலக சிறுவர் பாதுகாப்பு பிரிவின் ஏற்பாட்டில் "குடும்ப வன்முறையும் சிறுவர் பாதுகாப்பும்'' எனும் தலைப்பிலான செயலமர்வு கிளாலியில் நேற்று இடம் பெற்றது.

இந்நிகழ்வில், சிறுவர் பாதுகாப்புப் பிரிவின் கிளிநொச்சி மாவட்ட உத்தியோகத்தர் இராஜரட்ணம் செந்தூரன் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினார்.

குடும்பங்களில் இடம்பெறும் வன்முறைகள் சிறுவர்களை எவ்வாறு பாதிக்கின்றது என்பது தொடர்பிலும் குடும்பங்களில் சிறுவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் வன்முறைகள் தொடர்பாகவும் பெற்றோர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டதுடன், சிறுவர்கள் நலனில் பெற்றோர்களை அக்கறைசெலுத்தும் படியும் இதன் போது வலியுறுத்தப்பட்டது.

இந்த செயலமர்விற்கான நிதி அனுசரணையை யாழ். சமூக செயற்பாட்டு மையம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.


## விளம்பரம் சேகரிப்பாளர் தேவை

விளம்பரம் சேகரிப்பதில் முன் அனுபவமும், துடிப்புடன் பணியாற்றக்கூடிய செயற்திறனும் மிக்க இருபாலரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

அலுவலக நேரத்தில் சுய விபரக் கோவையுடன் சமுகமளிக்கவும்.

ஆளணி முகாமையாளர்,
தினமுரசு,
இல. 373,பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (இ)


# பால்மாவின் விலையைக் குறைக்குமாறு கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

உலகச் சந்தையில் பால்மாவிற்கான வரிச் சலுகை கிடைக்க பெற்ற போதிலும் எமது நாட்டின் அச் சலுகையினை அரசு மக்களுக்கு வழங்காமையினை கண்டித்து நேற்றைய தினம் கொழும்பு ஹோக்ஸ்ஹோல் வீதியில் அமைந்துள்ள கூட்டுறவு மற்றும் உள்நாட்டு அமைச்சு கட்டிடத்திற்கும் முன்னாள் உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தின் உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பின் இணைத்தலைவரும் சட்டத்தரணியுமான சமான்மலி குணசிங்க மற்றும் பெருந்தொகையான உறுப்பினர்கள் பங்குப்பற்றியிருந்தனர்.

இதன் போது கெசினோவுக்கு வரிச் சலுகை குழந்தைகளுக்கு வரிச்சுமையா? பெருமை தகப்பனே குடிப்பதற்கு பால் எங்கே? அரசே ஏமாற்றாதே பால்மாவின் விலையை உடனே குறைத்துவிடு. உலக சந்தையில் பால்மா விலை குறைப்பு நம் நாட்டின் நாளுக்கு நாள் அதிகரிப்பு போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறும் கோஷங்கள் எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தல் ஈடுபட்டனர்.

## வற்றாப்பளை உற்சவத்தில் இலட்சோப இலட்சம் மக்கள்

(முல்லைத்தீவு)

வற்றாப்பளை கண்ணகை அம்மனின் வருடாந்த வைகாசிப் பொங்கல் உற்சவமான நேற்றைய தினம் இலட்சோப இலட்சம் மக்கள் கலந்துகொண்டு தமது நேர்த்திக் கடன்களை செலுத்தினர்.

பெங்கல், தூக்குக்காவடி, பறவைக் காவடி, காவடி என மக்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

விமானப்படையினர் உலங்கு வானூர்தியும் அம்மனுக்கு பூச்சொரிந்து இராணுவத்தினர், பொலிஸார் பெருமளவில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர்.


விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி
நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு
வடமாகாணம்

## பார்த்தீனியம் கொள்வனவு




வடமாகாண சுற்றுக்சூழல் விழிப்புணர்வு வாரத்தையொட்டி யாழ். மாவட்டத்தில் பார்த்தீனியம் ஒழிப்பில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு கிலோ பார்த்தீனியத்துக்கு 10 ரூபா என்ற விகிதத்தில் ஊக்குவிப்பு நிதி வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**11.06.2014 தொடக்கம் 17.06.2014 வரை**

**தினமும் பிற்பகல் 3.00 தொடக்கம் 6.00 மணி வரை**

**பின்வரும் இடங்களில் பார்த்தீனியம் கொள்வனவு செய்யப்படும்.**

எல்லாளன் சனசமூக நிலையம் – புத்தூர்
வளர்மதி சனசமூக நிலையம் – சுன்னாகம் வீதி, புத்தூர்
சுடலையடி – சிறுப்பிட்டி மேற்கு
மலர்மதி சனசமூக நிலையம் – அச்செழு
கைத்தொழில் பேட்டை – அச்சுவேலி மேற்கு
குட்டியப்புலம் பொதுநோக்கு மண்டபம் – வயாவிளான்
ஏழாலை கிழக்கு சனசமூக நிலையம் – ஏழாலை சந்தி (சைவ மகாஜனா அருகில்)
யாழ்ப்பாணக் கல்லூரி பஸ் நிலையம் – வட்டு யாழ். வீதி, வட்டுக்கோட்டை
பிரதேச சபை பொது மண்டபம் – கைதடி கிழக்கு
குமரகோட்டம் சனசமூக நிலையம் – கோண்டாவில்
பானாவெட்டி அம்மன் கோவில் – மாதகல்
கிருஷ்ணன் கோவில் – உடுப்பிட்டி வல்லை நாற்சந்தி

பாதுகாப்பாக உரப்பைகளில் இட்டு பிற செடிகளுடன் கலக்காது எடுத்துவரப்படும் பார்த்தீனியம் மாத்திரமே கொள்வனவு செய்யப்படும். ஒப்படைக்கும் உரப்பைகளுக்கு மாற்று உரப்பைகளை பார்த்தினீயம் கொள்வனவு செய்யப்படும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்

செயலாளர்,
விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி
நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு
வடமாகாணம்.

(C/3702)

**படையெடுக்கும் பார்த்தீனியத்துக்கு விடைகொடுப்போம் வாரீர்!**


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூன் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.